பக்கங்கள்: இருபத்துஎட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 30 வெள்ளிக்கிழமை (16.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 020



12 மிகப் பெரிய ஆபத்து



23 அமெரிக்கப் படைகள் வெளியேற்றம்



25 அடி வாங்கும் இலங்கை அணி

## மாணவனை காணோம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ். நகரப்பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவர் நேற்று மாலை முதல்காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்தவரும்,யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் உயர்தர மாணவனுமான பாக்கியராசா தனுஜன் (வயது 18 ) என்பவரே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார்.

பாடசாலை விடுமுறையை அடுத்து, யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள தனது தந்தையின் வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைககளில் இவர் ஈடுபட்டிருந்தார். நேற்று மாலை தமது கடைக்கு அருகில் இருந்த உணவகத்திற்கு சாப்பிடச் சென்றார்.

எனினும் அதன் பின்னர் அவர் நீண்ட நேரமாகியும் திரும்ப

பக் 26

# முஸ்லிம் தரப்பினரின் கருத்தையும் உள்வாங்கியே இறுதித் தீர்மானம்



## தமிழ்க்கூட்டமைப்பின் நிலைப்பாட்டை முஸ்.காவிடம் விளக்கினார் சம்பந்தன்

கொழும்பு, டிசெம்பர் 16

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் கருத்தொருமைப்பாடின்றி எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளாது - என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது இதுவரை தமிழ்த் தேசியக்

பக் 27

# திருமலை கடற்படைத் தளத்தில் இரகசியத் தடுப்பு முகாம்கள்

### காணாமற் போனோர் பலர் அங்கு சிறை

கொழும்பு, டிசெ.16

திருகோணமலை கடற்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்கிவருகின்றன என்று தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது என அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது காணாமற்போனோரைத் தேடியறியும் குழு.

கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் இந்த முகாம்களில் காணாமல்போனோர்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

பக் 27

## வடமாகாண உள்ளூராட்சி சபைகளை மேம்படுத்த இந்தியா உதவ வேண்டும்

### மாவை சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கில் உள்ள உள்ளூராட்சி கபைகளை ஜனநாயக ரீதியாக மேம்படுத்துவதற்கும்,அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இந்திய அரசு உதவி புரிய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ்ப்பாணம் வந்திருந்த இந்தியக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கான இந்தியாவின் பிரதித் தூதர் பி.குமரன் தலைமையிலான குழுவினருக்கும் நடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் தமிழரசுக்கட்சியின் இணைச் செயலாளர்

பக் 27

## அடியோடு மறுக்கிறது கடற்படை

கொழும்பு, டிசெ.16

திருகோணமலை கடற்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்கிவருகின்றன என்று வெளியான தகவல்களை இலங்கைக் கடற்படை அடியோடு நிராகரித்துள்ளது.

திருகோணமலை கடற்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் இரகசிய முகாம்கள் இயங்கிவருகின்றன என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று காணாமற்போனோரைத் தேடியறியும் குழு தெரிவித்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரியவிடம் வினவிய

பக் 27

## கோயில் வளாகத்தில் சிங்களவர் வெறியாட்டம் 5 தமிழ் இளைஞருக்கு சரமாரியாக வாள்வெட்டு!

கொழும்பு,டிசெ.26

கேகாலை, எட்டியாந்தோட்டையில் இந்து ஆலயத்துக்குள் அத்துமீறிப் புகுந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வெறியாட்டத்தில் ஈடுபட்டதால் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து குறித்த பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, வாள்வெட்டுக்கு இலக்கான தமிழ் இளைஞர்கள் ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் இருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் எட்டியாந்தோட்டை, எதுராபொல தோட்டம் கீழ்ப் பிரிவில் உள்ள முத்துமாரியம்மன் ஆலயத்துக்குள் நேற்றுமுன்தினம் மாலை நுழைவதற்கு முயற்சித்துள்ளனர்.

போதையில் ஆலயத்துக்குள் வரவேண்டாம் எனக் கூறி அங்கிருந்த தமிழ் இளைஞர்கள் அவர்களை ஆலயத்திற்குள் பிரவேசிக்க விடாமல் தடுத்துள்ளனர்.

இதனால்

பக் 27

## கடத்தப்பட்ட லலித் குமாரின் மே.சைக்கிள் மீட்பு

கொழும்பு, டிசெ.26

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்தப்பட்டதாக கூறப்படும் மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் லலித் குமார வீரராஜ் மற்றும் குகன் ஆகியோர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் நேற்று வியாழக்கிழமை அச்சுவேலிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக மக்கள் போராட்ட இயக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இதுகுறித்து பொலிஸ் தரப்புத் தகவல்களை அறியமுடியவில்லை.

(ங-சி)

## பறக்கும் படையின் வேட்டையில் வைத்தியர்கள் சிக்கிக் கொண்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.16

கடமைநேரத்தின்போது தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிந்துகொண்டிருந்த மூன்று வைத்திய நிபுணர்கள் கொழும்பில் இருந்து வந்த விசேட சோதனைக் குழுவிடம் கையும் மெய்யுமாகச் சிக்கிக் கொண்டனர்.

யாழ்.நகரில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் மூவரே சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணத்தில்

பக் 27

## பொலிஸாரும் மாநகரசபையினரும் இணைந்து நடைபாதைக் கடைகள் மீது நேற்றுப் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ். மாநகரசபையினரும் பொலிஸாரும் நேற்றுக் காலை யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்த நடைபாதை வியாபார நிலையங்கள் சிலவற்றை அதிரடியாக அகற்றினர்.

எனினும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இவ்வாறு திடீரெனத் தமது கடைகள் அகற்றப்பட்டதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நடைபாதை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

பக் 27

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கும்

### கொழும்பு, வெலிக்கடை சிறைகளுக்குச் சென்ற எம்.பிக்கள் கைதிகளிடம் உறுதி

கொழும்பு, டிசெ.16

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என தமிழ் அரசியல் கைதிகளிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று உறுதியளித்துள்ளனர்.

தாங்கள் சிறைச்சாலைக்குள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கண்ணீர்மல்க எடுத்துரைத்த தமிழ்க் கைதிகள், தங்களின் விடுதலைக்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ்க் கைதிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்த கூட்டமைப்பு எம்.பிக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்றிட்டத்தில் உங்களின் விடுதலை தொடர்பான நடவடிக்கைகள் பிரதானமானவை எனக் கைதிகளிடம் எடுத்துரைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஏழு பேர் அடங்கிய எம்.பிக்கள் குழுவொன்று நேற்று

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மன்னார் மாவட்டத்தில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் மேக மூட்டமான காலநிலையும் நிலவும்

# ஜனாதிபதிக்கே 'தொப்பி'போட முனைகிறார் அஸ்வர்!

‘‘மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்காத கல்வி அமைச்சு, புள்ளிகளைக் குறைத்து கூடுதலானோர் சித்தியடைந்துவிட்டனர் என்று புள்ளி விவரங்களைக் காட்டி பெருமையடிக்கின்றது’’- இவ்வாறு ஜே.வி.பி. உறுப்பினர் அனுரகுமர திஸாநாயக்க தெரிவித்தார்.

கல்வி அமைச்சரிடம் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இதனை சுட்டிக் காட்டினர்.

✱ஜீ.சி.ஈ சாதாரண பரீட்சையின்போது மதிப்பீட்டுக்கு உள்வாங்கப்படும் பாடங்கள் யாவை?

✱வழங்கப்படும் சித்திகளின் வகைகள் யாவை?

✱ தேவைப்படும் புள்ளிகளின் தொகை எவ்வளவு?

என்று கல்வி அமைச்சரிடம் அனுரகுமர திஸாநாயக்கா கேள்விகளைத் தொடுத்தார். இந்தக் கேள்விக்கு பிரதிக் கல்வி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா பதில் அளித்த போது ‘‘ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையின் போது 35 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு A,B,C,S என்ற அடிப்படையில் சித்திகள் நிர்ணயிக்கப்படுகின்றன’’ என்றார்.

### கணித பாடத்தில் 17 புள்ளி பெற்றவருக்கும் ‘‘எஸ்’’ சித்தி வழங்கப்பட்டுள்ளது

‘‘அமைச்சரின் கூற்றின்படி நான்கு விதமான சித்திகள் வழங்கப்படுகின்றன. ஆனால் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஏதாவது பாடங்களில் இத்தகைய புள்ளியிடலில் மாற்றம் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா?’’ என இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார் அனுரகுமார.

‘‘ஒருமுறை வினாத்தாள் தயாரித்தலின் போது காணப்பட்ட முரண்பாடுகள் காரணமாக சில பாடங்களில் புள்ளிகள் குறைக்கப்பட்டன’’ என்றார் அமைச்சர்.

அப்போது இடைமறித்த அனுரகுமார,

‘‘அமைச்சர் ஏன் வெளிப் படையாகப் பதில் கூறத் தயங்க வேண்டும்? ‘எஸ்’ சித்தி பெறுவதற்கு 35புள்ளிகள் பெற வேண்டும் எனக் கூறினீர்கள். ஆனால் கடந்த ஆண்டு கணித பாடத்தில் 17 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும்‘எஸ்’ சித்தி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதை விட்டு, கல்வி அமைச்சு புள்ளிகளைக் குறைத்து, கூடுதலானோர் சித்தியடைந்ததாகப் புள்ளி விவரங்களைக் காட்டுகின்றது’’ என்று குற்றம் சாட்டினார் அனுரகுமார திஸாநாயக்க.

அனுரகுமாரவின் இந்த தாக்குதல் பிரதி அமைச்சரை தடுமாற வைத்துவிட்டது. என்றாலும் சமாளித்துக்கொண்டு ‘‘இந்தவிடயம் தொடர்பாகப் பரீட்சை திணைக்களத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்படும்’’ எனப் பதில் அளித்து அமர்ந்தார் பிரதி கல்வி அமைச்சர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஏழு கேள்விகள் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் இரண்டு கேள்விகளுக்கு மட்டுமே பதில் வழங்கப்பட்டது.

இரண்டுமே சற்று சிக்கலான விடயங்கள்தான். வழமையாக சிக்கலான கேள்விகளைக் கேட்டு அமைச்சர்களை திணறடிப்பார் அனுரகுமார திஸநாயக்க.

இன்றும் ஜீ.சி.ஈ சாதாரண பரீட்சை புள்ளிகளை கோடிட்டுக்காட்டி திக்குமுக்காடச் செய்து விட்டார் அவர்.

### கி.மு,கி.பி என்பது போல் பிரபாகரனுக்கு முன்-பின் என்ற கணிப்பு

மாத்தளை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் புத்திக்க பத்திரன பிரதமரிடம் ஒரு கேள்வியைக் கேட்டு குழப்பியடித்தார். புத்திக்க பத்திரன ஊடகவியலளராக இருந்து நாடாளுமன்ற உறுப்பினரானவர். இவரது கேள்விகளும் ஊடகங்களுக்கு நல்ல செய்தியாக அமையும்.

இதேபோன்று நேற்று ஊனமடைந்த படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் தொடர்பாக பிரதமரிடம் கேள்வியை எழுப்பினார். ‘‘யுத்த காலத்தில் போது ஊனமடைந்த படையினருக்கு முழுமையான ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. கி.மு,கி.பி என்பது போல் ஓய்வூதியத்தில் பிரபாகரனின் மறைவுக்கு முன், மறைவுக்குப் பின் என தரப்படுத்தப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் படையினருக்கு வழங்கப்பட்ட பல்வேறு வசதிகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளதாகப் படையினரே கூறுகின்றனர்’’ என்று கூறி ஆளும் தரப்பை விழிபிதுங்க வைத்து விட்டார் புத்திக்க பத்திரன.

### இரண்டரை கோடி ரூபா ரயில் பெட்டியை வாடகைக்குவிட்டு 360 ரூபா இலாபம்!

ஜே.வி.பி உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொகுசு ரயில் சேவை தொடர்பாக விமர்சித்தார்.

‘‘2 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான ரயில் பெட்டியை 25 லட்சம் ரூபாவுக்கு சீரமைத்து தனியார் துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொழும்பில் இருந்து கண்டிக்கு 1500 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது.

இதனால் ரயில்வே திணைக்களத்துக்கு வெறும் 360 ரூபா மட்டுமே கிடைக்கிறது. எஞ்சிய 1140 ரூபாவும் தனியாருக்குத் தான். இதில் அமைச்சருக்கு கிடைக்கும் கமிஷன் எவ்வளவு?’’ என்றார்.

### ரயில் பெட்டிகளை கொளுத்தியவர்கள் ஜே.வி.பியினர்தான்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பு உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் குறுக்கிட்டார். ‘‘சபாநாயகர் அவர்களே, இந்த ஜே.வி.பி யினர்தான் முன்பு பல கோடி ரூபா பெறுமதியான ரயில் பெட்டிகளை எரித்து சாம்பலாக்கியவர்கள். இப்பொழுது ரயில் பெட்டிகள் மீது காதல் கொண்டவர்கள் போல் பேசுகின்றனர்.

இதைப்பற்றிப் பேச இவர்களுக்கு அருகதை இல்லை’’ என்று கூறினார்.

இது அனுரகுமாரவுக்கு எரிச்சலை மூட்டிவிட்டது போலும். உடனேயே அவர் அஸ்வரைப் பார்த்து, ‘‘புத்தளம் கழுதையே! சத்தம் போடாமல் அமரும்’’ என்று ஆத்திரத்துடன் கூறினர்.

### ஜனாதிபதிக்கே தொப்பி போட முயன்றனர்

இதே போன்று ஜோசப் மைக்கல் பெரேரா உரையாற்றும் போதும் இடையூறு ஏற்படுத்திக் கொண்டே இருந்தார் அஸ்வர்.

‘‘மிஸ்டர் அஸ்வர் நீங்கள் இந்தச் சபையில் சில விடயங்களைப் பேசும் போது உங்கள் தொப்பியைக் கழற்றிவிட்டு பேசுங்கள்.அது தொப்பியையே மாசுபடுத்துகிறது. என்னிடமும் ஒரு தொப்பி உண்டு. அது பச்சைத் தொப்பி. தேவை ஏற்படும்போது மட்டும் தான் போடுவோம். ஆனால் நீங்களோ ஜனாதிபதிக்கே தொப்பி போட முனைகிறீர்கள்’’ என்றார்.




அப்போது ஆளும் தரப்பினர் உட்பட சபையில் அனைவரும் சிரித்துவிட்டனர்.

‘‘இப்பொழுது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அதிகமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை வழித்தட அனுமதியில்லாதவை. போக்குவரத்து பொலிஸாரின் அனுசரணையுடனேயே அவை இயங்குகின்றன. இதனால்தான் பெருமளவிலான விபத்துக்கள் ஏற்படுகின்றன. சட்டவிரோதமாகச் செயல்படும் இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்’’

என்று குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் வலியுறுத்தினார்.

‘‘அதேவேளை யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 பஸ் டிப்போக்களும் அடிப்படை வசதிகள் இன்றியே இயங்குகின்றன அவை புதுப்பிக்கப்பட வேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துக்கு 18 புதிய பஸ்களையும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 35 பஸ்களையும் வழங்கவேண்டும். போரினால் சிதைக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பஸ் டிப்போக்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டும். இவற்றிற்கு கூடுதலான மானியம் வழங்கப்பட வேண்டும். அதேவேளை ஓமந்தையில் இருந்து காங்கேசன் துறைவரையிலான 152 கிலோ மீற்றர் தூரமான ரயில் பாதையும் அமைக்கப்பட்டு வடபகுதிக்கான ரயில் சேவையை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.’’ எனவும் சந்திரகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

### என்னிடம் பஸ் இல்லை கப்பல்தான் உண்டு

ஆளும் கட்சியில் அஸ்வரைப் போன்று எதிரணியில் அடிக்கடி இடைக்கேள்விகளை எழுப்பி பிரபலம் பெற்று வருகிறார் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

அவர் தமிழில் மட்டுமல்ல சிங்களத்திலும் பிய்த்து உதறி விடுகிறார்.

நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம, விஜயகலாவை மடக்கினார்.

‘‘நீங்கள் அடிக்கடி சத்தம் போடுகிறீர்கள். நான் உங்களுக்கு எத்தனை வழித்தட அனுமதி வழங்கியுள்ளேன். அதைச் சொல்ல மாட்டீர்களா? நீங்கள் நல்லவர், உங்களுக்கு மேலும் ‘பெர்மிட்’ தருகிறேன். பஸ்களையும் தருகிறேன். உங்களையும் அழைத்துச் செல்கிறேன்’’ என்றார் அமைச்சர்.

‘‘என்னிடம் பஸ்வண்டியும் இல்லை. பெர்மிட்டும் தேவையில்லை. என்னிடம் கப்பல் தான் இருக்கின்றது’’ என்று மறுத்தார் விஜயகலா.

### வடக்கின் வசந்தம் புயலாக மாறிவிட்டது

வன்னி மாவட்ட தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ‘‘வடக்கின் வசந்தம் இன்று புயலாக மாறி விட்டது. போக்குவரத்தும் மின்சாரமும் பேச்சளவில் மட்டும் தான். போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. இந்திய நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய கடனை வழங்காததனாலேயே இப்போது மின்சார உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது’’ என்றும் குறிப்பிட்டார்

போக்குவரத்து, தனியார் போக்குவரத்து மின்வலு அமைச்சுக்கான நிதிஒடுக்கீடுகள் சபையில் நேற்று அங்கீகரிக்கப்பட்டன.

## தர்மபுரத்தில் பஸ் விபத்தில் ஆறு பேர் காயம்

கிளிநொச்சி, டிசெ.16

முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறைக்கு சென்ற தனியார் பஸ் ஒன்று தர்மபுரம் வைத்தியசாலைக்கு அண்மையில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதில் பயணித்த 6 பேர் காயங்களுடன் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் அடிகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த பஸ் முன்னால் சென்ற பஸ்ஸை முந்திச் செல் வதற்காகச் சென்ற போதே விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் மழை காரணமாகவும் சீரற்ற வீதிகளாலும் தற்போது விபத்துக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-405)

## நிகழ்வுகள் இன்று

### பரிசளிப்பு விழா

யாழ். சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட அகில இலங்கை சைவ நெறித் தேர்வில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழா காலை 8.30 மணிக்கு இல.66 கல்லூரி வீதி, நீராவியடி, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் கலந்துகொள்வார். (ம-313)

### சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் முற்பகல் 10.30 மணிக்கு ‘‘தேவிபாகவதம்’’ எனும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேலன் தொடர் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

### நினைவு நிகழ்வு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் ஏற்பாட்டில் நாவலர் பெருமான் நினைவு நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஆலயத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம- 313)

# சட்ட வைத்திய அதிகாரியின் வருகைக்காக வடமராட்சியில் தவமிருக்கும் சடலங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடமராட்சிப் பகுதியில் உள்ள இரண்டு வைத்தியசாலையிலும் சட்டவைத்திய அதிகாரிகள் இன்மையால் சடலங்கள் பிரதேச பரிசோதனைக்காக காத்திருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.இது தொடர்பாக தெரியவருவதாவது

வடமராட்சிப் பகுதியில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றில் சட்ட வைத்திய அதிகாரிகள் இன்மையால் சடலங்கள் காத்திருக்க வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது. வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு வரும் சடலங்கள் சட்டவைத்திய அதிகாரிகள் இன்மையால் அங்கிருந்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவந்தன. ஆனாலும் அங்கும் தற்போது சட்டவைத்திய அதிகாரி இன்மையால் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தவம் கிடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி வீரபத்திர கோயில் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். இவர் தண்ணீர் அள்ளும் போது தவறி விழுந்து உயிரிழந்ததாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. உடுப்பிட்டி வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த முத்தன் சுந்தரம் (வயது-65) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

சம்பவஇடத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறை பொலிஸாரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் கரவெட்டி பிரதேச மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரனும் விசாரணைகளை நடத்தியதுடன் சடலத்தை மீட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். ஆனால் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இல்லாததால் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அங்கும் சட்டவைத்திய அதிகாரி எவரும் கடமையில் இல்லாததால் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் நேற்று இரவு வரை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இதேவேளை கடந்த 14 ஆம் திகதி குஞ்சர் கடைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றபஜிரோ வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இவர்களின் சடலங்களை உடனடியாக மீட்ட போதும் இரவு வரை உறவினர்களிடம் கையளிக்கப்படாமல் பிரேதப் பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைகளின் பின்னர் மாலையிலேயே சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு யாழ்.குடாநாட்டில் சட்டவைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையால் சடலங்கள் தவம் கிடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர். அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் கடும் வேலைப்பளுவை சந்திக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தரப்பு தகவல் தெரிவிக்கின்றனர். எனவே வல்வெட்டித்துறை மற்றும் பருத் தித்துறை ஆகிய இரண்டு வைத் தியசாலைகளிலும் சட்டவைத்திய அதிகாரிகளை நியமிக்குமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர் (ங-319)

## மண்டைதீவில் மீட்ட தங்கூசி வலைகள் தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

மண்டைதீவு பகுதியில் மீட்கப்பட்ட மீனவர்களின் ஒரு தொகுதி தங்கூசி வலைகள் நேற்று தீயிட்டுக் கொளுத்தி அழிக்கப்பட்டதாக யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தங்கூசி வலை மூலம் மீன் பிடிப்பதற்கு அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வலையைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதையடுத்து நாம் மேற்கொண்ட தீடீர் சோதன்னையில் ஒரு தொகுதி தங்கூசி வலைகள் மீட்கப்பட்டு அங்கேயே தீயில் எரித்து அழிக்கப்பட்டது என்றார் அந்த அதிகாரி.

(ஒ-26)

## குடாநாட்டின் நிலவரங்கள் கேட்டறிந்தார் யாழ். வந்துள்ள இந்தியப் பிரதித் தூதுவர்

இந்திய உதவித் திட்டங்கள் தொடர்பாக இந்தியத் தூதரகத்தின் பிரதித் தூதுவருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி அமெல்டா சுகுமாருக்கும் இடையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக்காலை கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் இலங்கைக்கான இந்தியாவின் பிரதித் தூதர் பி.குமரன், இந்தியத் தூதரகத்தின் அமைச்சர் கே.பிளான்கோ, துணை ஆலோசகர் எஸ். சிறீகாந் மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள துணை தூதரகத்தைச் சேர்ந்த எஸ். மகாலிங்கம் ஆகியோர் பங்கு பற்றினர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில்:

இந்திய அரசினரால் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் அதில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலவரங்கள், கட்டுக்கடங்காமல் செல்லும் கலாசார நிகழ்வுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடினர் அத்துடன் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

மேலும் அரச நிர்வாக கட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது-என்றார். (ஒ-15)

## தங்குமிட விடுதிகளுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் தங்குமிட விடுதிகள் பலவும் பதிவு செய்யப்படாமல் இருப்பதோடு அவற்றில் சுகாதாரச் சீர்கேடுகளும் இனங்காணப்பட்டுள்ளன. எனவே இதனைத் தீர்ப்பதற்காக சகல தங்குமிட விடுதிகளையும் உடனடியா பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தங்குமிட விடுதிகளை பதிவு செய்யுமாறு மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டபோதும் இது வரை 5 விடுதிகள் மாத்திரமே பதிவுக்காக விண்ணப்பித்துள்ளன என்று யாழ்.மாநகர சபையின் பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல தங்குமிட விடுதிகளின் உரிமையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தங்குமிட விடுதிகளின் உரிமையாளர்கள் அனைவரும் தவறாது இதில் கலந்துகொள்ள வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 0774047243, 021222 2645 எனும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்புகொள்ளலாம். - என்று தெரிவித்துள்ளார். (ங)

# யாழ். கடத்தல் குறித்து நடவடிக்கை எடுக்க; இல்லையேல் இராணுவத்தை அங்கு அகற்றுக!

**நாம் இலங்கையர் அமைப்பு காட்டம்**

கொழும்பு, டிசெ.16

யாழில் அடிக்கொரு இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில் அங்கு இருவர் காணாமல் போயுள்ளமையானது அரசு மீதே சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது என நாம் இலங்கையர் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இச் சம்பவத்திற்கு அரசு உடனடியாகத் தீர்வு காணவேண்டும். இல்லையேல், பாதுகாப்புத் தராத இராணுவத்தை அங்கிருந்து நீக்கவேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியது.

கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட நாம் இலங்கையர் அமைப்பின் உறுப்பினரான லலித்குமாரின் குடும்பத்தினருடனான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மருதானை சீ.எஸ்.ஆர். மண்டபத்தில் நடைபெற்றபோது நாம் இலங்கையர் அமைப்பின் தலைவர் உதுல் பிரேமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் பேசியவை வருமாறு:-

லலித்குமார் மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய ஒருவர். சிங்கள கலப்புக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரைத் தேடுதல், அரசியல் கைதிகளைச் சந்தித்து உரையாடுதல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார்.

நீண்டகாலமாகவே அவருக்கு அச்சுறுத்தல்கள் வந்துள்ளன. அதிகமானவை இராணுவத்தினரால்தான் அவை விடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு அவரை பலமுறை கடத்திச் சென்று துன்புறுத்தியுள்ளனர். இதுதொடர்பாகவும் இந்த அமைப்பு பட்டியலிட்டுக் காட்டியது.

கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து இராணுவத்தினர் கடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின்போது கடுமையாக லலித்குமார் தாக்கப்பட்டார். அதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வீட்டில் தங்கவைத்தபோது இனம்தெரியாத சிலர் வீட்டினுள் நுழைந்து லலித்குமாரை தாக்கிச் சென்றனர்.

அதேபோன்று மார்ச் 25 ஆம் திகதி மன்னாரிலும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வவுனியாவிலும் சுவரொட்டிகளை ஒட்டச்சென்றபோது இராணுவம் என அடையாளப்படுத்திக்கொண்ட சிலரால் தாக்கப்பட்டுள்ளார்.

இறுதியாக தாக்குதலுக்குள்ளான லலித்குமார் இம்மாதம் 9ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளார். மக்கள் ஆர்ப்பாட்டம் தொடர்பான ஊடகவியலாளர்கள் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தபோது அவர் இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இந்த ஆட்கடத்தல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார சார்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். பொலிஸ், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சம்பவத்திற்காக அரசு உடனடியாகத் தீர்வு எடுக்கவேண்டும். இல்லையேல், பாதுகாப்புத் தராத இராணுவத்தை நீக்கவேண்டும் - என்றார் அவர்.

மேலும், ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட லலித்குமாரின் தந்தை வீரராஜ் தெரிவித்தவை வருமாறு -

எங்களுடைய நாட்டிலே கஷ்டப்படும் தமிழ் மக்களுக்காக தன்னால் முடிந்த உதவியைச் செய்யவே யாழ்ப்பாணத்திற்குச் சென்றார் எனது மகன்.

காணாமல் போனவர்களின் பெற்றோர் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்பதையே அடிக்கடி சொல்லுவான். கடத்தல் நடப்பதற்கு முன் இரவு எனக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. ''உனது மகன் வீட்டிற்கு வந்தால் வெளியே போகவிடாது நிறுத்தி வைத்துக் கொள்'' என்று சிங்களத்தில் பேசிவிட்டு, அவர்கள் தம்மை யார் என்று கூறவில்லை. எனது மகன் அன்றுதான் வீட்டிற்கு வந்து சென்றான் - எனறார் அவர்.

சிந்தியுங்கள்...! சொல்லுங்கள்...! வெல்லுங்கள்...!

செறிவான கொழுப்புக்கள் எவை, செறிவற்ற கொழுப்புக்கள் எவை என்பதைப் பிரித்தறிய நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே, ஞாயிற்றுக்கிழமை 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகும் "அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களின் முக்கியத்துவம்" என்னும் கட்டுரையை வாசித்து, அதன் கீழுள்ள கேள்விகளுக்குப் பதிலளித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

# சகஜயோக தியானப் பயிற்சி யாழ்ப்பாணத்திலும் அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

சகஜயோக தியானப்பயிற்சி மூலமாக நமது உடலையும் மனதையும் சமநிலைப்படுத்தி ஆன்ம விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சகஜயோக தியானப்பயிற்சியை வழங்கிவரும் ஸ்ரீ மாதாஜி நிர்மலா தேவியினால் ஸ்தாபிக்கப்பட்ட சகஜயோக அமைப்பின் மலேஷியாக் கிளை அமைப்பினூடாக யாழ்ப்பாணத்திலும் இதன் ஆரம்பகட்ட தியானப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டது.

இதற்காக மலேஷியாவிலிருந்து வருகைதந்திருந்தகுழுவினரில்ஒருவரானசெல்விசுரளா இந்தப் பயிற்சி குறித்துத் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

கேள்வி:சகஜயோக தியானப்பயிற்சி பற்றியும் அதன் ஆரம்பம் பற்றியும்..?

பதில்: ஸ்ரீ மாதாஜி நிர்மலா தேவியால் சகஜயோக தியானப்பயிற்சி அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த யோக முறைப்படி சகல ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இந்த அபூர்வ சக்தியை தங்கள் கையில் உணர முடியும்.

கேள்வி:இன்றைய காலத்துக்கு இத்தகைய பயிற்சி பொருத்தமானதாக அமையுமா?


பதில்:மிகப் பொருத்தமானதாக அமையும். இன்றைய நவீன வாழ்க்கை முறையில் நிலவும் சிக்கலான,சிரமமான நடவடிக்கைகளில் மனிதர்களாகிய நாம் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நமது வாழ்க்கையில் உள்ள பலவிதமான பிரச்சினைகள் தொழில், குடும்பம், நண்பர்கள், ஓய்வு மற்றும் சமுதாயப் பொறுப்புகள், உடல், மனோநிலை,உணர்ச்சி பூர்வமான விஷயங்கள் சம்பந்தப்பட்ட சமநிலை, நமது விருப்பங்கள், அபிலாசைகள் போன்றவற்றை அடைய நாம் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சமநிலை, இந்தப் பயிற்சி மூலம் கிட்டுகிறது.

இவற்றுக்கான விடை எமது சொந்த ஞானத்திலேயே உள்ளது. நம்மையும் பிறரையும் பற்றி முழுமையான உண்மையை புரிந்து கொள்ளுதல்.நமக்குள் அடங்கிக்கிடக்கும் குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்து வெற்றி பெறுதலே எமது தியானத்தின் நோக்கமாகும்.

கேள்வி:தற்போது எத்தனை நாடுகளில் இத்தகைய தியானப்பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதில்:120 நாடுகள் வரையில் எமது தியானப் பயிற்சிக் கூடங்களை அமைத்துள்ளோம். கொழும்பிலும் எமது கிளையை ஸ்தாபித்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் துர்க்கா மணி மண்டபத்தில் ஆரம்ப தியானப்பயிற்சிகளை வழங்கினோம்.அதற்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. ஒரு நாள் முன்னறிவித்தலில் எதிர்பார்ப்பதைவிட அதிக எண்ணிக்கையானோர் பயிற்சியில் பங்குபற்றினர். மேற்கொண்டு இந்தப் பயிற்சியை விரிவுபடுத்தவுள்ளோம்.



கேள்வி:இந்த யோகா மூலமாகக் கிட்டும் பலாபலன்கள் எவை?

பதில்: உடல்,உள ஆரோக்கியம் ஏற்படும். எமது ஒவ்வொரு உடல் உறுப்பையும் கட்டுப்படுத்தும் சக்கரங்கள் உள்ளன. அந்தச் சக்கரங்கள் இந்த யோகாவின் ஊடாக சுத்தமடைகின்றது. அத்துடன் அவை யோகாவின் மூலமாக சமநிலைப்படுத்தப்படுகின்றன.

குண்டலினி சக்தி விழித்து மேலெழும் போது, அது சக்கரங்களின் இயக்கத்தை மேம்படுத்தும். நாம் யோக நிலையில் பிரபஞ்ச சக்தியுடனான தொடர்பை குளிர்ந்த மென்காற்றாக நம் உள்ளங்கைகளிலும், உச்சந்தலையிலும் உணரலாம். இதுவே மெய்ஞானம்.

கேள்வி:இதில் யார் யார் பங்கு பற்றலாம்?

பதில்:ஐந்து வயதுச் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வயது வேறுபாடின்றிச் சகலரும் பங்குபற்றலாம்.

சிறுவர்கள்,இளைஞர்கள் இப்பயிற்சியில் பங்குபற்றுவதன் ஊடாக சகல விதமான கெட்ட பழக்கங்களிலிருந்தும் விடுபட்டு நல்லவர்களாக வளரமுடியும்.

இந்த யோகாப் பயிற்சி சகல இடங்களிலும் இலவசமாகவே மேற்கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிவகுமார்,கஜவதனன் இருவரும் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் தொடர்பான ஒழுங்குகளினை மேற்கொள்ளவுள்ளனர். இவர்களுடன் 0212228212 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொள்வதன் மூலம் எவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திப் பயனடைய இயலும்.

*சந்திப்பு-திலீப்*

## கலா பூசண விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.16

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம்,முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து நடத்தும் 27 ஆவது கலாபூஷண விருது வழங்கும் விழா கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் சி.பி ஏக்கநாயக்க தலைமையில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு- 7 ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.கே. ஏ.எஸ் குணவர்த்தனவின் பங்களிப்புடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை.எல்.எம் நவ்லி,கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜிதகனுகல, கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் கலைத்துறைக்குசேவையாற்றிய தமிழ்,சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள் சுமார் 266 பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ங-319)

## மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்த இளம்பெண் சம்பவ இடத்தில் மரணம்

### 'ஹெல்மட்' அணியாததால் அனர்த்தம்

மன்னார், டிசெ.16

மன்னார் முருங்கன்- சிலாபத்துறை பிரதான வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இளம்வயது யுவதியொருவர் மரணமடைந்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சமுதாய உதவியாளராகப் பணியாற்றி வந்த ஹலிம்டீன்.முகமது மஹீசா என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் அகத்தி முறிப்பு சிலாபத்துறை கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் உறவினர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளில் தலைக்கவசமின்றி முருங்கன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது தவறிக் கீழே விழுந்துள்ளார். அப்போது இவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பின்னர் சடலம் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவ ராணி சடலத்தைப் பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். இதன்போது தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த யுவதியை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்த உறவினர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால் வீதிப் போக்குவரத்துப் பொலி ஸார் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதில்லையென மக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (க-601)

## வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டனர் அதிகாரிகள் தொண்டர் ஆசிரியர்கள் மீண்டும் நேற்றுப் போராட்டம்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடவும் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தாம் கொடுத்திருந்த வாக்குறுதியை கல்வித் திணைக்கள அதிகாரிகள் காற்றில் பறக்க விட்டுள்ளனர். இதனால் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். மாவட்ட தொண்டராசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை ஆளுநரின் செயலகத்திற்கு முன்னால் நேற்று மேற்கொண்டனர்.

இந்தக் கவன ஈர்ப்புப் போராட்டத்தின் போது அங்கு வந்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் குறித்த தொண்டராசிரியர்களின் பெயர் பட்டியல் உட்பட அவர்களது கோரிக்கைகளையும் பெற்றுக் கொண்டார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்குவது என்பது தற்போது கடினமாக உள்ளது. இந்த விடயத்தில் கல்வி அமைச்சர் தான் முடிவெடுக்க வேண்டும். தன்னால் உறுதி மொழிகள் ஏதும் வழங்க முடியாது என்று அவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

மேலும் வெகுவிரைவில் தொண்டராசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும் அவர்களது கோரிக்கைகளையும் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைக்க உள்ளதாகவும் அதனை அனுப்பியதற்கான பிரதியை பெற்றுக் கொள்ளும் படியும் தொண் டராசிரியர் சங்கத்தினருக்கு அவர் தெரிவித்துள்ளார்

எனினும் இதன் பின்னரும் கல்வி அமைச்சிடமிருந்து பதிலேதும் கிடைக்காத பட்சத்தில் தாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் தொண்டராசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. இதேவேளை தமக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து இன்று வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிடவுள்ளதாகவும் தொண்டராசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மொத்தமாக 92 தொண்டராசிரியர்கள் இருப்பதாகவும் அவர்களில் சேவைக் காலத்தினைக் கருத்திற் கொண்டு 52 தொண்டராசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனத்தினை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் தொண்டராசிரியர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் 85ற்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே இரண்டு தடவைகள் இவர்கள் இக் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-14-311)

## யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 500 சைக்கிள் வெலி ஓயாவுக்கு

### இந்தியா உதவியில் ஆளுநர் கைங்கரியம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

இந்திய அரசினால் யாழ். மாவட்டத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட சைக்கிள்களில் ஐநூறை முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலர் பிரிவுக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரஸ்ரீ வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இந்திய அரசினால், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 10 ஆயிரம் சைக்கிள்களை இலவசமாக வழங்கத்திட்டமிட்டுள்ளது. இதற்காக வட மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கு தலா 2 ஆயிரம் சைக்கிள்கள் வீதம் ஒதுக்கப்பட்டன.

ஆனால் யாழ். மாவட்டத்துக்கென வழங்கப்பட இருந்த 2 ஆயிரம் சைக்கிள்கள் 1,500 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த 500 சைக்கிள்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள மக்களை கொண்ட புதிதாக உருவாக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசினால் 4 நிபந்தனைகளின் கீழேயே பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை மாணவர்கள், கணவனை இழந்த மனைவியருக்கு, சைக்கிள்கள் மூலம் தொழில்கள் மேற்கொள்வோருக்கு, விஷேட காரணங்களை உடையோருக்கே சைக்கிள்கள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் மாவட்ட செயலர் ஊடாக ஒவ்வொரு பிரதேச ரீதியாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் வடமாகாண ஆளுநரினால் உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள சமூக சேவைத்திணைக்களத்தினூடாகவும் பயனாளிகள் பெயர்ப்பட்டியல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இருபயனாளிகள் பட்டியல் தெரிவுசெய்யப்பட்டுள்ளதால், எந்த அடிப்படையில் சைக்கிள்கள் வழங்குவது என்பது தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஒ-15)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சபாஷ்! சரியான போட்டி!!

சபாஷ்! சரியான போட்டி!!

''வஞ்சிக்கோட்டை வாலிபன்'' என்ற சினிமாத் திரைப் படத்தில் அப்போதைய வில்லன் நடிகர் பீ.எஸ்.வீரப்பா, இரண்டு நாட்டிய கலாவித்தகிகளான பத்மினி, வைஜந்திமாலா ஆகியோரின் நடனங்களை ரசித்து வெளியிட்ட நயப்புரை இது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில், வெளிவிவகார அமைச்சுக்குரிய வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எடுத்துரைத்த கருத்துகள், நிலைப்பாடுகளைக் கேட்டுக் கொண்டிருந்த, மூத்த அமைச்சர்கள் இருவர் விட்டுக்கொடுக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக முன்வைத்த வாதங்கள் மேற்சொன்ன வீரப்பாவின் திரைப்பட வசனத்தையே ஞாபகப்படுத்துகிறது.

போரில், தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கு, மிக்க பக்க பலமாக இருந்த இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள், இப்போது போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசிடம் கேள்வி களை எழுப்பி உள்ளன. சர்வதேச சமூகத்தால் எழுப்பப்பட்ட அந்தக் கேள்வி களுக்கு இலங்கை அரசு பதில் சொல்ல வேண்டிய கட்டாய நிலை தோன்றி யுள்ளது. அதனை இலங்கை அரசு தட்டிக் கழிக்கவே முடியாது என்ற இப் போதைய காட்சியை கூட்டமைப்பின் தலைவர் வெளிப்படுத்தினார்.

அதற்குப் பதில் வழங்கும் - பதிலடி கொடுக்கும் - விதத்தில் மூத்த அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டியு குணசேகரா ஆகிய இருவரும், அடியடா அவர்களைப் (சர்வதேசங்களை) பிடியடா என்று வீறாப்பையும் வீர வசனங்களையும் அள்ளி வீசி உள்ளனர். அவை, குற்றம் உள்ள நெஞ்சு குறு குறுக்கும் என்பதனைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்தன.

எத்தனை அழுத்தங்கள் மேற்கொண்டாலும், நமது உள்நாட்டு விவ காரங்களில் அந்நியத் தலையீடுகளுக்கு இடமளிக்க மாட்டோம். எவர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் எடுக்கட்டும், நாம் எமது நிலைப்பாட்டில் உறுதி யாக உள்ளோம். எமது பிரச்சினையைச் சர்வதேசப் பொலிஸாரிடம் ஒப் படைக்க முடியாது என்று குமுறியுள்ளார் அமைச்சர் பீரிஸ்.

அடுத்தவருடம் மார்ச் மாதம் கூடவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு களை எதிர்கொள்வதற்கு அரசு அஞ்சாது என்று வீராவேசம் காட்டியுள்ளார் அமைச்சர் டியு குணசேகரா.

உலக விடயங்களில் தமது ஆதிக்கத்தை இழந்துவரும் சில நாடுகளின் குற்றச்சாட்டையிட்டு இலங்கை பயப்படப் போவதில்லை. சர்வதேச சமூகம் எமக்கு எதிராக உள்ளது என்று கூட்டமைப்புக் கூறுவது யதார்த்தமற்றது. உல அதிகாரம் இப்போது ஆசியாவின் பக்கம் திரும்பியுள்ளது. அதனால் மேற்கு நாடுகள் சில எம்மை மிரட்டத் தொடங்கியுள்ளன என்றும் தமது நிலைப்பாட் டுக்குப் பொருத்தமான, தோதான ஒரு சமன்பாட்டை உருவாக்கியுள்ளார்; தீட்டி உள்ளார் அந்த அமைச்சர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் - என்ற அமெரிக்காவின் தலைமை யிலான மேற்கு நாடுகளின் பிரகடனத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் பக்கத்துணையுடன் இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை இங்கு பூண்டோடு ஒழித்தது என்பது இப்போது சர்வதேசப் பரகசியம்.

விடுதலைப்புலிகளை அழித்துவிட்டால், இனிமேல் வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி இளைஞர் கிளர்ச்சி ஒன்றேனும் முளைவிடுவதற்கு ஓர் அங் குலம் தானும் இடம்கொடுக்கக் கூடாது என்ற வன்மத்துடன் அரசு திட்டங்க ளைத் தீட்டிவருகிறது. அவற்றின் பொருட்டே பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் அதிகூடிய - 20 சதவீத- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனக்கொள்ளலாம்.

அது ஒருபுறமிருக்க, இறுதிப் போரின்போது போராளிகள் மட்டுமன்றி, மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் பொதுமக்களும் படையினரால் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை மறுத்து வந்த அரசு, அவ்வாறு நடந்திருக்கக்கூடும் என்று பட்டும்படாமலும் உத்தியோகப் பற்றற்ற ரீதியில் மெல்ல மெல்ல - சிறிது சிறிதாக - ஒப்புவிக்கத் தொடங்கியுள்ளது.

மனித உரிமை மீறல் குறித்த குற்றச்சாட்டுகளை தணிக்கும் அல்லது தறிக் கும் உபாயங்கள், உத்திகள் குறித்து அரசு தன்மட்டில் சிந்தித்து வந்தாலும், அவற்றை வெளிப்படையாகக் கூறும் என்று எதிர்பார்க்க முடியாது. அமைச்சர் டியு குணசேகராவின் நாடாளுமன்ற உரை அந்த வகை சார்ந்தது என்று கொள் வது தப்பன்று.

மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூக மட்டத்தில், இலங்கை மீது சுட்டுவிரல் நீட்டப்பட்டதால் அவற்றை இலகுவில் புறமொதுக்க முடி யாத சூழமைவிலேயே உள்நாட்டில் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக் கப்பட்டது என்பது இப்போது இரகசியமான ஒன்றல்ல.

அதன் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் போது அல்லது சிபாரிசுகள் கவனத்தில் கொள்ளப்படும் பட்சத்தில் போர்க் குற்றங்கள் (குற்றச்சாட்டுகள்) குறித்து அரசின் நிலைப்பாடும் போக்கும் எந்தவகையில் அல்லது எத்திசை நோக்கிச் செல்லும் என்பது தெரியவரும். உலகளாவிய ரீதியில் பரந்துள்ள தன்மீதான குற்றச்சாட்டுகளை எவ்வாறு ஈடுசெய்யும் அல்லது எதிர்த்து நிற்கும் என்பது தெரியவரும்.

இவற்றுக்கு மத்தியில் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஒன்றை முன்வைக்கும் நடவடிக்கையில் அரசு இதயசுத்தியுடனும், தாராள சிந்தை யுடனும் செயற்படும் என்பதற்கான நம்பிக்கையான சமிக்ஞை சிறிதேனும் தென்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு வார்த்தையும் மிகவும் மந்தமானதாகவே, மெதுவாகவே நகர்கிறது.

இந்த ஆமை வேகம் தொடர்ந்தால் தமிழ் மக்களுக்கு உருப்படியான எது வும் கிடைக்காது. வெறுமனே காலம் கடத்தும் உத்தியாக முடிவுற்றாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.

திட்டவட்டமான இலக்குடன், தமிழ் மக்களுக்குச் சுயாட்சி வடிவத்திலான ஆட்சிமுறை ஒன்றுக்கு வகையும் செய்யும் தீர்வு ஒன்றை அரசு கையில் எடுத் தால் அன்றி யாவும் காலம் கடத்தும் ஏற்பாடுகளாகவே முடியும்.

அதற்கு அத்திபாரம் போடும் நோக்குடனும் உத்தியுடனுமே, கூட்டமைப் புடன் பலசுற்றுப் பேச்சு, நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராய்ந்து முடி வெடுத்தல் போன்ற நீண்ட படிமுறைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பின்னரும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச தலையீட்டுக்கு இடம்கொடுக்க முடியாது என்று இலங்கை முஷ்டியை உயர்த்துமா?

# தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ். மாவட்ட மட்டத்திலான தேசிய பாதுகாப்புத் தினம், 'அனர்த்த முகாமைத்து வத்துக்கான திறனும் மனப்பாங்குத் தெரிவும்' என்ற தொனிப்பொருளில், பல்வேறுபட்ட போட்டிகளுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித் தார்.

'தேசிய பாதுகாப்புத் தினம் - 2011' இற்கான யாழ். மாவட்ட மட்டத்தில் மேற் கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்றுக் காலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் அனர்த்த முகா மைத்துவம் தொடர்பான திறனையும் விழிப் புணர்வையும் ஏற்படுத்தும் முகமாக தேசிய பாதுகாப்புத் தினத்தை இந்த முறை மாவட்ட மட்டத்திலும் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயர்தர வகுப்புகளில் கற்கின்ற மாணர்வகளுக்கு வினாடி விடை போட்டி நடத்தப்படவுள்ளது. இதற்கான விடயப்பரப்பு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புபட்டதாகவே அமையும்.

சமுதாய மட்ட அமைப்புக்களுக்கான போட்டி யாழ். மாவட்டத்திலுள்ள 435 கிராம சேவகர் பிரிவுகளிலும் நடத்தப்பட உள்ளது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு சமூக மட்ட அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்டத்தில் இடர் மற்றும் வரை படம் தயாரித்தல் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

அடுத்து பிரதேச செயலகங்களுக்கு இடையில் 'அனர்த்த முகாமைத்துவ செயற் பாட்டுக்கான தூர இலக்கு மாதிரி - 2020' என் னும் தலைப்பில் போட்டி நடத்தப்பட வுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டினை உருவாக்க முடியும்.

மேலும் ஊடகங்களின் பங்களிப்புடன் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான கால அட்ட வணைகள் வழிகாட்டல்கள் என்பன விரை வில் வெளியிடப்படும். யாழ். மாவட்ட மட்ட தேசிய பாதுகாப்புத்தின நிகழ்வுகள் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடத்தப்படும் - என்றார். (ங-15)

# புதிய ஆண்டு கல்விச் செயற்பாடுகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பமாகும்

குருநகர்,டிசெ.16

மூன்றாம் தவணை விடுமுறைக்காக கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூடப் பட்ட அரச பாடசாலைகள் யாவும் 2012 ஆம் ஆண்டின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை களுக்காக ஜனவரி 02 ஆம் திகதி திங்கட் கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளன.

எனினும் தற்போது நடைபெற்று வரும் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வதற்காக கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகள் மட்டும் முதலாம் தவணைக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்காக காலம் தாழ்த்தித் திறக் கப்படும் என்று கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-51)

# 2012 கற்றல் கற்பித்தல் கால அட்டவணை வெளியிடப்பட்டது

குருநகர்,டிசெ.16

2012 ஆம் வருடத்துக்கான பாடசாலைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கான கால அட்டவணை கல்வி அமைச்சால் வெளியிடப் பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் கற்றல் கற்பித்தல் தவணை விடுமுறைக்காக கடந்த 9ஆம் திகதி மூடப்பட்ட அரச பாடசாலைகள் யாவும் 2012 ஆம் ஆண்டு முதலாம் தவணைச் செயற் பாட்டுக்காக ஜனவரி 2ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

முதலாம் தவணை விடுமுறைக்காக 2012 ஏப்ரல் 5 ஆம் திகதி மூடப்படும் பாடசாலை கள் யாவும் இரண்டாம் தவணைக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்காக ஏப்ரல் 23 ஆம் திகதி மீளவும் திறக்கப்படும்.


இரண்டாம் தவணைக் கற்றல் கற்பித் தல் செயற்பாடுகள் நிறைவடைந்து இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஒகஸ்ட் 3 ஆம் திகதி மூடப்படும். மீண்டும் பாடசாலைகள் மூன்றாம் தவணைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்காக செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி திறக்கப்பட்டு மூன்றாம் தவணைக் கற்பித்தல் செயற்பாடுகள் நிறைவடைந்து மூன்றாம் தவணை விடுமுறைக்காக டிசெம்பர் 7 ஆம் திகதி மூடப்படும் எனவும் இந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-135)

## வணக்கம் கூறுவது எதற்காக?

பாரதப் பரம்பரையின் மூலைக்கல்லாக விளங்குவது மரியாதை. முதியோரிடமும், மதிப்புக்குரிய பெரியோர்களிடமும் வணக்கம் கூறுவதும் நமது பரம்பரைச் சொத்து.

ஒரு நபரை ஒரு நாளில் முதலாவதாகச் சந்திக்கும் போதும், பல நாள்களுக்குப் பின் காணும்போதும் வணக்கம் கூறி வாழ்த்தி வரவேற்பது வழக்கம். மேலும் விருந்தினர் வரும்போது நம் இருக்கையிலிருந்து எழுந்து வணங்கி வரவேற்று விருந்தினரை அமரச் செய்த பின்னரே நாம் அமருவது வழக்கம். விருந்தினர் விடைபெறும்போதும் வாசல்வரை சென்று வழியனுப்பி விடை கொடுப்பதிலும் நாம் தவறுவதில்லை. ஆனால் இப்போது காலம் மாறி வருகின்றது. இன்றைய தலைமுறை இந்த வழக்கங்களை உதறிவிடவும் ஏளனம் செய்யவும் தயங்குவதில்லை.




இரண்டு கைகளும் சேர்த்து தலைகுனிந்து வணங்கி ''நமஸ்தே'' என்று சொல்லும்போது நாம் பொருளாக்குவது என்னவென்றால் 'ந' என்பது இல்லை என்றும் 'ம' என்பது என்னு டையது என்றும் 'தே' என்பது உங்களு டையது என்றும் ஆகும். என்னுடையதாகக்காணும் இந்த உடல் என் சுயலாபத்துக் கானதல்ல என்றும் உங்கள் சேவைக்கானது என்றும் பொருள்படக் கூறுகின்றோம்.

*நன்றி* : ஞானச்சுடர்

## நாளை

மார்கழி 01, சனிக்கிழமை17.12.2011

திதி: சப்தமி பி.ப. 4.59 வரை

நட்சத்திரம் - பூரம் மு.இ. 7.58 வரை

சுபநேரம்: 3.22 - 4.52 வரை, ராகு காலம்: 9.22 - 10.52 வரை

## பெரும்போக வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், டிசெ.16
வலி.கிழக்குப் பிரதேசத்தில் பெரும் போக வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களை உழுது சீர்செய்யும் பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதோடு சிலர் வெங்காய நடுகைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் கூட விவசாயிகள் அதிக விலையில் இந்த விதை வெங்காயத்தைப் பெற்று நடுகையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு அந்தர் விதை வெங்காயம் 4ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாதத்தில் வெங்காய செய்கையில் ஈடுபடுவோர் குறைந்து காணப்பட்டாலும் கூட விவசாயிகள் இதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதேவேளை, யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்தும் காணப்படுகின்றன.

கடந்த வாரத்தில் கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்ட இந்த வெங்காயம் கிலோ 100 ரூபாவாக அதிகரித்துள்ளன.

இந்தச் சின்ன வெங்காயத்தை தென் பகுதியில் இருந்துவரும் வியாபாரிகள் இங்கிருந்து அதிகளவில் கொள்வனவு செய்து கொண்டு செல்வதால் அவற்றின் விலையும் சடுதியாக அதிகரிப்பதாக வெங்காய ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர். (ம-26)

## சிறார், கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவு

யாழ்ப்பாணம், டிசெ.16
யாழ். குடாநாட்டில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊடாக இந்தப் போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. திரிபோசா மா, சமையல் எண்ணை, சீனி என்பன இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. டிசெம்பர் மாதத்துக்கான சத்துணவுகளே இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. (ம-26)

## சம்பந்தர் வீதியின் அவலத்தால் மக்கள் நெருக்கடி

யாழ்ப்பாணம், டிசெ.16
வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ள சம்பந்தர் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலகம், சங்கானைப் பிரிவு வட்டுத் தெற்கு, வட்டுத் தென்மேற்கு ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ள இந்த வீதி நீண்டகால மாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் குறிப்பிட்ட வீதியில் மழைநீர் தேங்கியுள்ளது. பொதுமக்கள் அதிகமானோர் பயன்படுத்தும் வீதி இந்த நிலையில் காணப்படுவதால் பாடசாலை செல்லும் மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் வாகனங்களில் செல்வோர் என பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் கடந்த 9 மாதங்களாக நிறுத்தம்

### பயனாளிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16
யாழ். மாவட்டத்தில் கடந்த ஒன்பது மாத காலமாக இடம்பெயர்தோருக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை என்று இந்த நிவாரணத்தைப் பெறும் பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.இந்த ஆண்டின் ஜனவரி, பெப்வரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணமே வழங்கப்பட்டது.

தற்போது ஒன்பது மாதங்கள் கழிந்து வருடம் நிறைவடைய இருக்கும் நிலையில் கூட இது வரைக்கும் இந்த நிவாரண விநியோகத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிவாரணத்தைப் பெற்றுவந்த பயனாளிகள் தினமும் சங்கக் கிளைக்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கடந்த ஒன்பது மாத காலமாக வழங்காமல் இருக்கும் இந்த நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள நிலையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் இந்த மக்கள் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளமையால் தாம் இன்னும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். (ம-26)



யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் 'சக்தி' நூல் வெளியீடும் அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றன. யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா நூலை வெளியிட்டு வைக்கின்றார். (ம-319)

## நல்லூரில் புதிதாக கலாசார மண்டபம்

யாழ்ப்பாணம், டிசெ.16
நல்லூர் பிரதேச சபை 44 மில்லியன் ரூபா செலவில் புதிய கலாசார மண்டபம் ஒன்றை அமைக்கவுள்ளது. 'நெல்சிப்' உதவியுடன் மூன்று மாடிக் கட்டடமாக குறித்த மண்டபம் அமையும் என்றும் பயிற்சிகளுக்கான இடமும் இதில் உள்ளடக்கப்படும் என்றும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

6.5 மில்லியன் ரூபா செலவில் நல்லூர் கலாசாலை வீதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-7)

## பெயர் மாற்றம்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் 'திவிநெகும' என்னும் சமுர்த்தி அதிகாரசபையின் பெயர் 'வாழ்வெழுச்சி கிராமிய அபிவிருத்தி திணைக்களம்' என்று மாற்றம் செய்யப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (ந-7)

## மேய்ச்சலுக்குக் கட்டப்படும் ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.16
கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் ஆடுகளைப் பிடிக்கும்திருடர்களின்தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பட்டப் பகல் வேளைகளில் இந்த ஆட்டுத் திருட்டு சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

மேய்ச்சலுக்காக விவசாய நிலங்களில் கட்டி விடப்படும் ஆடுகள் சில கடந்த வாரத்தில் இந்தப் பகுதியில் காணாமல் போயிருப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் நடமாடும் ஆட்டு வியாபாரிகளே கட்டி நிற்கும் ஆடுகளைப் பிடித்து செல்வதாகவும் மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆடுகள் காணாமல் போவதை அடுத்து மக்கள் தமது கால் நடைகளை வீடுகளில் கட்டி வளர்த்து வருகின்றனர். (ம-26)

## நிதி ஒதுக்கீடு

குருநகர், டிசெ.16
குருநகர் மவுன்காமல் வீதியில் அமைந்துள்ள குருநகர் துணை மாதர் சங்கத்துக்கு யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியின் மூலம் 50 ஆயிரம் ரூபா வழங்கி யுள்ளார் என்று இந்த அமைப்பின் தலைவி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா தெரிவித்தார்.

இதேநேரம் கியூடெக்- ஹரிதாஸ் அமைப்பு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனாக இந்த அமைப்பைச் சேர்ந்த 22 உறுப்பினர்களுக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளதாகவும் இவர் மேலும் தெரிவித்தார். (ம-51)

## நான்கு டெங்கு நோயாளர்கள் தெல்லிப்பழையில் கண்டுபிடிப்பு

அளவெட்டி, டிசெ.16
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த முதலாம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிவரை காய்ச்சலால் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நால்வர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மகியப்பிட்டி, சண்டிலிப்பாய், அளவெட்டி மேற்கு, தெல்லிப்பழை, கிழாளை, குப்பிளான் வடக்கு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் இவ்வாறு சிகிச்சை பெற வந்திருந்தனர்.

இவர்களிலேயே டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனங் காணப்பட்ட இப்பகுதிகளுக்கு அந்தப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதே காலப் பகுதியில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றவர்களில் 6 பேர் நெருப்புக் காய்ச்சலுக்கு ஆளாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-36)

## போரால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழிலுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், டிசெ.16
போரால் பாதிக்கப்பட்டு நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் வேலைவாய்ப்புக்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் அவர்களுக்காக நிதி உதவிகளை வழங்க நல்லூர் பிரதேச சபை 3 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டக் கூட்டம் சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்குறித்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது.

விதவைகள் மற்றும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. பயனாளிகள் கிராம அலுவலர்களின் உதவியுடன் தெரிவு செய்யப்படவுள்ளனர். பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டம் காலப் போக்கில் மேலும் விஸ் தரிக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது. (ந-7)

## கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைக்கு எப்போது தீர்வு?

யாழ்ப்பாணம், டிசெ.16
யாழ். நகரை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சுண்டுக்குழி, கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளில் இவ்வாறு கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளால் மக்கள் சிரமங்களுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களால் மேய்ச்சலுக்காக அவிட்டு விடப்படும் இந்தக் கால் நடைகள் வீதிகளில் நடமாடுவதோடு மக்களின் வீடுகளுக்குள் புகுந்து பயன் தரு மரங்கள் மற்றும் பயிர்களை மேய்ந்து விட்டு செல்கின்றன.

அதனைவிட இந்த கால் நடைகள் வீதிகளுக்கு குறுக்காக ஓடிக் கடக்கும் போது வாகனங்களில் வருவோர் விபத்தில் சிக்கி காயமடையும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தக் கால்நடைகளை வீட்டில் கட்டி வளர்ப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டோர் கோரியுள்ளனர். (ம-26)

# ஒய்வுபெற்றுப் பல மாதங்கள் இன்னும் இல்லை ஓய்வூதியம்

## மனஅழுத்தத்துடன் ஆசிரியர்கள்

அச்சுவேலி, டிசெ.16

யாழ். மாவட்டத்தில் ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு நான்கு ஐந்து மாதங்கள் நிறைவடைந்த நிலையிலும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைக்கு யார் பொறுப்பு என்றும் இதனை சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் ஏன் உரிய முறையில் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வுபெறும் அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு மாதம் முடிவதற்கு முன்னர் அவர்களின் ஓய்வூதியம் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்பது ஓய்வூதியம் தொடர்பான அடிப்படைக் கொள்கையாகும்.

யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்குக் கூட இன்றுவரை ஓய்வூதியம் கிடைக்கவில்லை என ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சார்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களின் ஓய்வூதியம் உரிய வேளையில் கிடைக்காமல் இருப்பதில் வலயக் கல்வி அலுவலகங்களின் அசிரத்தையோ அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தின் இழுத்தடிப்போ அல்லது இரண்டும் சேர்ந்த நிலையோ இதற்குக் காரணம் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலம் சேவையாற்றி உரிய வேளையில் ஓய்வு பெறும் ஆசிரியர்கள் தமது ஓய்வூதியத்தை உரிய வேளையில் பெற்றுக் கொண்டார்களா? என்பதை மாகாணக் கல்வித் திணைக்களமும் மாகாணக் கல்வி அமைச்சும் உரிய முறையில் கண்காணிப்புச் செய்யாத நிலைதான் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

சமகால வாழ்க்கைச் செலவு உயர்வு, வயோதிப நிலை, பொருளாதார நெருக்கடி, குடும்பச் சுமை, நோய்த் தாக்கம் என்ற நிலையில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உரிய வருமானம் இல்லாத நிலையில் மன அழுத்தத்துக்கு ஆளாகிய நிலையில் உள்ளனர். தமக்கு இதுவரை ஓய்வூதியம் கிடைக்காமை தொடர்பாக யாருக்கு முறையிட்டு குறை நிவர்த்திப்பது எனத் தெரியாமல் மனவிரக்தியுடன் உள்ளனர். (ம-11)



விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக நிறுவுநர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவாலயம் கடந்த ஞாயிறன்று கலாநிதி ஆறு.திருமுருகனால் திறந்து வைக்கப்பட்டது. நோர்வே இந்து அறிவாலயத்தின் நிதி உதவியுடன் இது அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-38)

# வலிகாமம் கிழக்குப் பகுதியில் வெள்ளம் தேங்குவதால் சிரமம்

## நீர் தடுப்பு அணையின் கதவுகளைத் திறக்கக் கோரிக்கை

அச்சுவேலி, டிசெ.16

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் கிழக்குப் பகுதியில் மழை வெள்ளம் பெருமளவில் தேங்கி நிற்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு தொண்டைமானாறு குடாக்கடல் நீர்த் தடுப்பு அணையின் கதவுகளை திறந்து வெள்ளம் வெளியேற வசதி செய்ய வேண்டும் என வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் யாழ். அரச அதிபரிடமும் நீர் தடுப்பு அணை பொறியியலாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலி.கிழக்குபிரதேசநிலைமை தொடர்பாக பிரதேச சபையின் தலைவர் அ. உதயகுமார் மேலும் தெரிவித்ததாவது:

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கிழக்கு எல்லைப் பிரதேசம் குடாக்கடல் நீரேரியுடன் இணைந்த நிலையில் இடைக்காட்டில் இருந்து செம்மணிவரை உள்ளது.

இந்தப் பிரதேசம் தாழ்நிலமாக இருப்பதால் மழை வெள்ளம் பெருமளவில் தேங்கியுள்ளது. இந்த வெள்ளம் தொண்டைமானாறு நீர்த்தடுப்பு அணைக் கதவுகளை திறந்து விட்டாலே வற்றக் கூடிய நிலை ஏற்படும்.

வெள்ளம் பெருமளவில் தேங்கி நிற்பதால் குடியிருப்புக்களில் வெள்ளம் சென்றிருப்பதோடு பயிர்களும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் உள்ள 15 இற்கு மேற்பட்ட மயானங்களில் இயல்பு நிலையில் சடலங்கள் கூட தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கோப்பாய் தெற்கில் உள்ள மயானத்தில் சடலத்தைத் தகனம் செய்வதற்கு மண் மூடைகளைக் கொண்டு விசேடமாக மேடை உருவாக்கப்பட்டே தகனக் கிரியைகள்நடைபெற்றன. பொது மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு அணைக் கதவுகளைத் திறந்து வெள்ளம் சமுத்திரத்துக்குச் செல்வதற்கு வகை செய்யப்பட வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார். (ம-11)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணியந்தோட்டம் மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.16

அரியாலை பூம்புகார் மணியந்தோட்டம் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 486 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் அரிசி, சீனி ஆகிய பொருள்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து மீள் குடியர்ந்துள்ள மக்கள் தற்போது மீளவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு ஐந்து கிலோ அரிசியும் ஒரு கிலோ சீனியும் என்ற வகையில் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் அந்தப் பகுதி கிராம அலுவலகங்களுக்கு அருகாமை யில் வைத்து இவை வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். (ம-7)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவி

யாழ்ப்பாணம், டிசெ.16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி பயனாளி களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 367 பயனாளிகள் ஒரு கோடி 90 லட்சத்து 58 ஆயிரத்து 456 ரூபாவரை வாழ்வாதார உதவிகளைப் பெற்றுள்ளனர்.

கைத்தொழிலுக்கு 86 பயனாளிகள் 17 லட்சத்து 92 ஆயிரத்து 256 ரூபாவும் விவசாயத்துக்கு 75 பயனாளிகள் 7 லட்சத்து 56 ஆயிரத்து 200 ரூபாவும் சந்தைப்படுத்தலுக்கு 82 பயனாளிகள் 16 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் கால்நடை வளர்ப்பு, மீன் பிடிக்கு 73 பயனாளிகள் 44 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் உட் கட்டமைப்புக்கு ஒரு பயனாளிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மலசல கூடத்துக்கு 500 பயனாளிகளுக்கு 200 லட்சமும் வழங்கப்பட்டுள்ளன. (ம-7)

# குழு மோதலில் தடைப்பட்டது மின்சாரம்

அனலைதீவு,டிசெ.16

அனலை தீவு மூன்றாம் வட்டாரத்தில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில், அந்தப் பகுதியில் உள்ள மின்சார சபையின் மின் பிறப்பாக்கி நிலையம் சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த பகுதிக்கான மின் விநியோகம் கடந்த திங்கட்கிழமை முதல் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தற்போது நடைபெற்று வரும் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இரு இளைஞர் குழுக்களுக்கிடையே மோதல் மூண்டது. இரு தரப்பினரும் அருகில் இருந்த மின்சாரசபையின் மின்பிறப்பாக்கி நிலையத்திலுள்ள பொருள்களை எடுத்து மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் குறித்த பிரதேசத்துக்கு வழங்கப்பட்டு வந்த மின்சார விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மோதலில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையும் 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தலையில் காயமடைந்த கணேஸ் குகநாதன் (வயது 24) என்பவர் அனலைதீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-15)

# மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகையில் கல்வி நிலையங்களின் சூழல் இருக்க வேண்டும்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்கள் இலகுவான கற்றலை மேற்கொள்ளக் கூடிய வகையில் சூழல் அமைந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

மாணவர் கற்பதற்கு ஏற்றவாறு இருக்கைகள் உரிய முறையில் அமைக்கப்பட்டிருப்பதுடன் ஆண், பெண்களுக்கான மலசல கூட வசதிகளும் சீரான முறையில் இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் மாணவர்களுக்குரிய வசதிகள் அனைத்தும் ஒழுங்கு முறையில் இருக்க வேண்டும். தவறின் தனியார் கல்வி நிலையங்களுக்கான 2012 ஆம் ஆண்டுக்கான உரிமம் வழங்கப்படமாட்டாது என்றும் இது விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# 'அகதி' யாகத் திரியும் மானிப்பாய் தபாலகம்

மானிப்பாய்த் தபாலகம் சொந்த இடமில்லாமல் கடந்த 80 வருட காலமாக தனியார் கட்டடங்களில் மாறிமாறி செயற்பட்டு வருகின்றது.

நீண்ட காலமாக மானிப்பாயில் உள்ள கட்டடம் ஒன்றில் இது இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்தையும் விட்டுத் தருமாறு உரிமையாளர் கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த மாதத்துடன் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வரும் இத் தபாலகம் மீண்டும் இப்பகுதியிலிருந்து சேவையாற்றுவதற்கு இட வசதி இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதி நலன் விரும்பிகள் யாராவது முன்வந்து காணியொன்றை இலவசமாக வழங்கினால் தபால் திணைக்களம் நிரந்தர கட்டமொன்றை அமைத்துக் கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

# காணாமற் போனோர் தொடர்பில் அமைச்சர் கெஹலிய கைவிரிப்பு

கொழும்பு,டிசெ.16

யாழ்ப்பாணத்திற் காணாமற் போனவர்களை விடுவிக்குமாறு கூறுவதை விட தன்னால் வேறு என்ன சொல்ல முடியும் என கைவிரித்தார் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் காணாமற் போயுள்ள லலித் குமார வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினர்.

அவர்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்றில் கூறப்பட்டதைக் கேட்டிருக்கிறேன். காணாமல் போயுள்ளமை தொடர்பில் எனக்குத் தெரியாது. கடத்தப்பட்டிருந்தால் அவர்களை விடுவிக்குமாறே கோர முடியும் என்று பதிலளித்தார்.

இதேவேளை, கடத்தப்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளர் அமல் ரொட்ரிகோ குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய, அது தொடர்பிலும் தனக்குத் தெரியாது என்றார்.

எனினும், கடத்துபவர்கள், காணாமற் போகின்றவர்கள் தொடர்பில் தன்னைவிட ஊடகங்களுக்கு நன்கு தெரியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் பெட்டி சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட மாட்டாது. அது பொதுச் சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் அச்சட்டத்தை ஒரு மாதம் இடைநிறுத்தி வைத்துள்ளமை விவசாயிகள், வர்த்தகர்களை தெளிவுபடுத்தவே என்றும் கெஹலிய தெரிவித்தார்.

எனினும், பூசணிக்காய், புடோல் உள்ளிட்ட சில மரக்கறி வகைகளுக்கு பிளாஸ்ரிக் பெட்டிகளை பயன்படுத்த முடியாமை தொடர்பில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை 100 வீதம் சரியாகச் செயற்படுத்த முடியாது எனவும் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தாமல் பிளாஸ்ரிக் திட்டத்தை அமுல்படுத்தியமை அரசின் தவறு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் திட்டம் கட்டாயம் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அதன் மூலம் இலாபத்தை எதிர்பார்ப்பதைவிட மரக்கறி, பழங்கள் வீணாவதைத் தடுப்பதே நோக்கம் இச்சட்டம் வியாபாரிகளுக்கு மாத்திரமே பொருந்தும் விவசாயிகளுக்கு அல்ல எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-சி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 16.11.2011 அன்று இறைபதமெய்திய எமது சங்க உறுப்பினர் பத்மநாதன் மனோகரன் அவர்களின் தாய்
**பத்மநாதன் பூமணி** அவர்களின்
31ம் நாளில் (16.12.2011) அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

(11704)(6-9-8)

## மரண அறிவித்தல்

**சங்கரப்பிள்ளை இரத்தினம் (சின்னரத்தினம்)**

கரவெட்டி, தெடுத்தனையை பிறப்பிடமாகவும், புலோலி பிலாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட ச.இரத்தினம் (14.12.2011) புதன்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிலாவடி,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மங்கையர்க்கரசியின் மனம் நெகிழ் அஞ்சலி

எமது வித்தியாலய சங்கீத பாட ஆசிரியை திருமதி ரஜிதா சுந்தரகுமார் அவர்களின் அன்புத் தந்தை
**பொன்னையா விநாயகமூர்த்தி**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வித்தியாலயக்குடும்பம்**
யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

[11751](3.6)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த (பூரம், 8 செவ்வாய்), தற்போது U.K. இல் கல்வி கற்கும் மணமகனுக்கு P.R. உடைய தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு:- 0779279382

## அபூர்வ ஜோதிடம்

அதிக மூச்சு கஷ்டமான ஆஸ்மா, பித்தப்பை கல், கொலஸ்ரோல் அடைப்பு, கர்ப்பப்பை நோய்கள், குழந்தையின்மைக்கு விசேட சாதனை புரியும் சிகிச்சைமுறை.
தினமும்:- 8.30 - 3.00 pm T.P:- 0773212740
உரும்பிராய் பிள்ளையார் கோவிலடி, நால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை.

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25.09.1945



மறைவு
16.11.2011

**அமரர் தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்**
(ஓய்வுபெற்ற வரி மேற்பார்வையாளரும் SHAMROCK ACADEMY நிர்வாகியும்)

எங்கே ஐயா ஒளிந்து கொண்டீர்
எங்கள் உள்ளம் வேதனை இருளில் தவிக்க
உம் பொன்முகம் உம் புன்னகை எமக்குப் போதுமையா

ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தார்
அவர் மீட்கட்டும்.
மறைந்தாலும் மனத்தளவில் நிறைந்து
வாழ்வார் நீடு!

கடந்த 16.11.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பவிளக்கின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு நேரிலும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித் தோருக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் குறிப்பாக Shamrock Academy நிறுவன ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.7/1. ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6910)(3.6.7)

- குடும்பத்தினர்.

(சி/6910)(3.6.9)

## மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை ஆனந்தவேல்**



(இளைப்பாறிய பதிவு வைத்திய அதிகாரி)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பதிவு வைத்திய அதிகாரி கணபதிப்பிள்ளை ஆனந்தவேல் 14.12. 2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -யோகாம்பிகை தம்பதியரின் அன்புமகனும், ஜெயராணி யின் அன்புக்கணவரும் , செல்வராணி குணானந்தனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற விசாகசுந்தரம் குணானந்தன் (நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்) அவர்களின் அன்பு மைத்துனரும், முரளி (அவுஸ்திரேலியா), தீபன், ஜயன், ரதன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமலர்செல்வம், கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், ஷாலினி, ஷ்யாம், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

(10630)(6-8-9)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், ELTC யின் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி எஸ்.ரவீந்திரன் அவர்களின் தாய்
**திருமதி இராஜலஷ்மி ஞானசேகரம்**
அவர்கள் இறைபதமடைந்துவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் கொழும்பு ஜயரட்ண மலர்ச்சாலையில் 12.12.2011 அன்று நடைபெற்றன.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

(11701)(2-6-9)

**பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**இராசகிளி பத்மினி (மாலா)**



கடந்த 16.11.2011 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.12.2011) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் அம்மன் வீதி, வண். கிழக்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள கலட்டி அம்மன் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

42,5ஆம் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்.

(11708) (10,6,7)

குடும்பத்தினர்,
இராகவன்.
0776670044.

## Computer Express

Institute of Information Technology

**விடுமுறைக்கால விசேட கட்டணக் கழிவு**
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
20-12-2011 முன்னர் பதிவுகளை மேற்கொள்பவருக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 3000/= |
| Diploma in Multimedia | 4Months | 3000/= |

இறுதி ஆண்டில் ஓர் அரிய சந்தர்ப்பம்
அனுமதிக்கு முந்துங்கள்

**Diploma in Computerized Accounting**
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 16.12.2011 :- 9 am or 3Pm Batch II 17.12.2011 :- 9 am or 3Pm
Batch III 18.12.2011 :- 9 am or 3Pm Batch Iv 21.12.2011 :- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# 2013இல் அனைவருக்கும் இணைய வசதி வழங்கல் கிடைக்கும்

## தொலைத்தொடர்பு அமைச்சர் தகவல்

கொழும்பு,டிசெ.16

2013 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் இணைய வசதி வழங்கப்படும் என்று தொலைத் தொடர்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் வரவு - செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதங்களில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சகல வீடுகளுக்கும் இணைய இணைப்பை வழங்க ஸ்ரீலங்கா ரெலிகொம் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

66,272 இணைய இணைப்புக்கள் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 276,950 இணைய பாவனையாளர்கள் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்று உருவாக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டின் சகலருக்கும் இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டில் லட்சக்கணக்கானவர்களுக்கு இன்னமும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. 2013 ஆண்டில் சகலருக்கும் இணையம் என்ற திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச)

# வியளம் கேட்டீர்களா?

## ஆசிரியர் இடமாற்றங்களின் லட்சணமோ லட்சணம்...?

ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது வடமாகாணத்தில் உள்ள பொதுப் பிரச்சினையாகும். ஆனால் ஆசிரிய வளம் சமனற்றுச் சில இடங்களில் குவிக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும். செல்வாக்கு மிகுந்தவர்கள் அந்த இடங்களில் சந்தோசமாகக் காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பர். அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக அதிகளவானோர் அந்த இடங்களில் நிறைந்திருப்பர். அதே நேரம் கிராமப்புறப் பாடசாலைகளில் பல பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் பிள்ளைகள் தவித்துக் கொண் டிருப்பார்கள்.

எனவே, சமனற்ற ஆசிரியப் பரம்பலைச் சீராக்கம் செய்ய இடமாற்றம் அவசியமாகும். அந்த இடமாற்றம் ஒரு நிகழ்வொழுங்கின் கீழ் நடைபெறுவதே வழக்கமாகும். அப்படித்தான் இடமாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனாலும் காரியத்தில் கண்ணாயிருப்பவர்கள் எப்படியோ இடமாற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் அதிகாரிகளின் அலுவலகப் படியேறி கடைசி வரை முயற்சி செய்துவிட்டு முடியாத நிலையில் செல்கிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இடமாற்றத்தை மனப்பூர்வமாக ஏற்று பணிக்குச் செல்கின்றனர்.

இப்போது இரண்டாவது வன்னி இடமாற்றம் நிகழவிருக்கிறது. இரண்டு பெண் ஆசிரியர்களைச் சந்தித்தேன். ஒருவர் சொன்னார் தனக்கு சிறுவயதுப் பிள்ளைகள் இருக்கின்றனர். அதனால் தன்னால் வன்னிக்குச் செல்லமுடியாது என்று. மற்றவரைச் சந்தித்தேன். சின்னப் பிள்ளைகள் என்றால் விட்டுவிட்டுச் செல்லலாம். வளர்ந்த பதின்ம வயதுப் பெண் பிள்ளைகளை விட்டுவிட்டு எப்படி என்னால் போகமுடியும்? என்று அவர் கேள்வி எழுப்பினார். இரண்டு தரப்பினதும் கருத்துக்கள் நியாயமானவை தான்! உடல் உள்ள வரை கடல் கொள்ளாக் கவலை என்ற பழமொழிதான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

முன்னர் முதல் நியமனங்கள் வெளி மாவட்டங்களுக்கே செயற்படுத்தப்பட்டன. முதல் நியமனத்தை விட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் எந்தச் சமரசமும் இன்றி வெளி மாவட்டங்களில் பணியாற்றுவர். முடியாதவர்கள் நியமனத்தை ஏற்காதுவிடுவர். சொந்த மாவட்டத்தில் நிய மனம் கிடைத்து திருமணம் முடித்து குழந்தை குட்டிகளுடன் இருப்பவர்களை நகர்த்துவது மிகவும் சிரமம். அது மட்டுமன்றி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப் பிரதேசங்களில் சரிவர அடிப் படை வசதிகள் செய்து கொடுக்கப்படாத இடங்களில் பெண் ஆசிரியர்கள் பணியாற்றுவது என்பது பெரும் கஷ்டமானதே. போக்குவரத்துப் பாதைகள் சீரில்லை. வெயிற் காலத்தில் புழுதியில் குளித்துக் கொண்டும், மழை காலத்தில் சேற்றுள் அளைந்து கொண்டும் பயணப்படும் அவலம் வன்னியின் சில இடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு உள்ளது. சீரான பஸ் சேவை இல்லை. பெண் ஆசிரியர்கள் கூட பல வேளைகளில் வீதியால் பயணிக்கும் இராணுவத்தினரின் உழவு இயந்திரங்களில் பயணித்தே பாடசாலைக்குச் சென்றுவர வேண்டியுள்ளது.



யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் ஆசிரியை மன்னாரில் ஒரு பாடசாலையில் கடமையாற்றுகிறார். வவுனியாவிலிருந்து அவரது இடத்துக்கான பஸ் 11 மணிக்கே செல்லும். திங்கட்கிழமைகளில் இங்கிருந்து வவுனியா சென்று பஸ் பிடித்துப் பாடசாலைக்குச் செல்ல பி.ப. 1.30 ஆகிவிடும். வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மீண்டும் திரும்ப வேண்டும்.

இன்னொரு ஆசிரியை கற்பிக்கும் பாடசாலைக்கு பஸ் சேவை இல்லை. எனவே, வாரத்தில் ஒரு தடைவை பஸ்ஸில் சென்று இறங்கி 700 ரூபாவுக்கு ஓட்டோ பிடித்துச் சென்று ஒப்பமிட்டுவிட்டுத் திரும்புவார். அவரது பாடத்துக்கு அங்கு மேலதிக ஆசிரியர்கள் உள்ளமையால் அவரது சேவை அங்கு அவசியமற்றது. அதுபோலவே முல்லைத்தீவில் ஒரு பாடசாலையில் 4 கணித ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நேர அட்டவணையின்றி அவர்கள் கடமையாற்றும் நிலையுள்ளது.

இங்கே செயற்திறன் வாய்ந்த ஆசிரியர்களாக இருந்தவர்கள் வன்னிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அவர்களது அறிவும்,அனுபவமும் வன்னி மாணவர்களுக்குக் கிடைப்பின் அது வரப்பிரசாதந்தான். ஆனால் போக்குவரத்தில் நொந்து கெட்டு,சரியான பாடங்கள் வழங்கப்படாது ஒதுக்கப்பட்டு உள்ள அவர்களிடமிருந்த ஆற்றல்கள் எல்லாம் இழந்து வாரணம் பொருத மார்பும், வரையினை அடுத்த தோளும், தாரணி மௌலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும், வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை சென்ற இராவணன் போல அவர்களும் யாழ்ப்பாணத்துக்கு மீண்டு வருவர் என்று ஆதங்கப்பட்டார் ஓய்வுபெற்ற கல்வியதிகாரி ஒருவர். ஆக,வன்னி இடமாற்றங்கள் அங்கிருந்து நூறு வர, இங்கிருந்து நூறு செல்லுதல் என்ற வகையில் இடம்பெறாமல், பொருத்தப்பாடான ஆளணி மாற்றமாக இடம்பெறுவது அவசியமாகும். செல்லும் அவர்களுக்கு உரிய வசதிகளை வழங்கி அவர்களுக்கு உளத்திருப்தியை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் அவர்களிடமிருந்து நற்சேவையை வன்னி மண் பெற முடியும். அது மட்டுமன்றி இந்த இடமாற்றங்களில் சுழியோடு பவர்கள் வாய்ப்பாக வாழ, அப்பாவிகள் மட்டும் துன்பப்படக்கூடாது. அதுதானே நியாயம்.

விழிச்சான் குஞ்சு.

# அழுத்தங்கள் வந்தாலும் பஸ் கட்டணம் உயராது

## தனியார் போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.16

எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் தனியார் பஸ் கட்டணம் இப்போதைக்கு அதிகரிக்கப்பட மாட்டாது என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டண அதிகரிப்பு இன்றேல் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் விடுத்துள்ள எச்சரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் போதெல்லாம் பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் இடம்பெற வேண்டிய கட்டண அதிகரிப்பு நேரத்தின்போது மாத்திரமே பஸ் கட்டணம் உயர்த்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

எனினும் தனியார் போக்குவரத்து சேவையை பாதுகாப்பதற்காக தேவையான நிவாரணங்களை வழங்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பஸ் கட்டணத்தை அதிகரிக்கக் கோரி ஜனாதிபதி மஹிந்தவுக்கு மகஜர்

கொழும்பு,டிசெ.16

பஸ் கட்டணங்கள், டீசல் மானியத்தை அதிகரிக்குமாறு வலியுறுத்தியும் இல்லாவிட்டால் நாடளாவிய ரீதியில் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மகஜரை அனுப்பியுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமது கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுடன் ஒருமாதம் நிறைவடைகின்றபோதிலும் இதுவரை தமக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஒருமாதகாலத்தில் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற தனியார் போக்குவரத்து அமைச்சு தவறிவிட்டது.

சட்டவிரோத அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டாம் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும் இப்போதும் சட்டவிரோத அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# விநோத உல்லாசப் பூங்கா அமைக்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ.16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய கொழும்பில் 350 அடி உயரமான பலநோக்கு

தொலைத்தொடர்பு கோபுரத்துடன் கூடிய விநோத உல்லாசப் பூங்காவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை ஈடு செய்யும் வகையில் இந்தப் பல்நோக்கு தொலைத்தொடர்பு கோபுரத்துடன் கூடிய விநோத உல்லாசப் பூங்கா அமைக்கப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதனூடாக 50 தொலைக்காட்சி அலைவரிசைகள், 50 வானொலி அலைவரிசைகள் மற்றும் 10 தொலைத்தொடர்பு சேவைகளுக்கான அனுமதியை வழங்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைக் கோபுர வேலைத்திட்டம் என்ற பெயரில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த

விநோத உல்லாசப் பூங்காவானது, கொழும்பு மத்திய உல்லாச வலயத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக . அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சிறுவர் இல்லத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை

## இரகசிய பொலிஸார் தகவல்

கொழும்பு,டிசெ.16

மொரட்டுவை, ராவதாவத்தை சிறுவர் இல்லத்தில் குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று இரகசியப் பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக சிறுவர் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு ராவதாவத்தை சிறுவர் இல்லம் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இரகசியப் பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபரின் கட்டளைக்கு அமையவே விசேட விசாரணை நடத்தப்பட்டதாகவும், இந்த சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்கள் எவ்வித சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் இடம்பெறவில்லை என்பது உறுதியானதாக பொலிஸார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அனைத்து நடவடிக்கைகளும் நீதிமன்றம் ஊடாகவே இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழக்குடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்ட அருட்சகோதரியை விடுதலை செய்யுமாறு சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அருட்சகோதரியை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் இவோன் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸார் கைப்பற்றிய அருட்சகோதரியின் கடவுச்சீட்டை மீளளிக்குமாறும் சிறுவர் இல்லத்தில் இருந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் கைப்பற்றிய .அனைத்து ஆவணங்களையும் உரியவர்களிடம் கையளிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# தமிழ் அகதிகள் 40 பேரை நாடு கடத்துகிறது பிரிட்டன்

## கார்டியன் நாளிதழ் தகவல்

தமிழ் அகதிகள் 50 பேரை பிரிட்டன் அதிகாரிகள் தனி விமானம் ஒன்றின் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தவுள்ளதாக பிரிட்டனின் கார்டியன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இன்று பிற்பகல் 50 வரையான அகதிகளுடன் இந்த விமானம் இலங்கை நோக்கிப்புறப் படவுள்ளது. ஆனால் எந்த விமான நிலையத்தில் இவர்களை ஏற்றிய விமானம் புறப்படவுள்ளது என்பதை வெளியிடாமல் பிரிட்டன் அதிகாரிகள் ரகசியமாக வைத்துள்ளனர்.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள் இலங்கை ராணுவத்தால் துன்புறுத்தப் படுவதாக புதிய சாட்சி யங்கள் கிடைத்துள்ள போதிலும் பிரிட்டனின் எல்லை முகவரகம் இவர்களைக் கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதாக கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் பிரிட்டன் இரண்டு தடவைகள் பெரியளவிலான நாடுகடத்தல்களை மேற்கொண்டுள்ளது. இறுதியாக கடந்த செப்ரெம்பர் மாதம் லூற்ரன் விமான நிலையத்தில் இருந்து அகதிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள் இலங்கையில் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படும் ஆபத்து இருப்பதாக அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன எச்சரித்துள்ள போதும் இவர்களை நாடு கடத்துவதில் பிரிட்டன் அதிகாரிகள் உறுதியுடன் உள்ளனர்.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவிகளை வழங்கிவரும், சித்திரவதையில் இருந்து விடுதலை என்ற லண்டனைத் தளமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனம், இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்தாலும் இந்த ஆண்டும் அங்கு சிறைக் கைதிகள் துன்புறுத்தப்படுவதாக கூறியுள்ளது.

அண்மையில் இந்த அமைப்பு பிரிட்டன் எல்லை முகவரக அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள தகவலில், பிரிட்டனில் இருந்து இலங்கை சென்ற றொகான் என்ற தமிழர் சித்திரவதை செய்யப்பட்டதற்கான சாட்சியங்களை அளித்துள்ளது.

மாணவர் நுழைவிசையில் பிரிட்டனுக்குச் சென்றிருந்த றொகான் சுகவீனமுற்ற உறவினரைப் பார்க்க இலங்கைக்குச் சென்றபோது, கொழும்பு விமான நிலையத்தில் கைது செய்த அதிகாரிகள் மூன்று நாள்கள் தடுத்து வைத்திருந்தனர்.

அப்போது அவர் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன், சூடாக்கப்பட்ட உலோகத்தினால் உடலில் சூடு வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான இந்த இளைஞரை இலங்கை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் என்று கூறி அணுகிய இரண்டு பேர் வாகனம் ஒன்றில் கண்ணைக் கட்டி ஏற்றிச் சென்று, அடையாளம் தெரியாத இடம் ஒன்றில் வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் உடைகளைக் களைந்து விட்டு உலோகக் கம்பியாலும், மரக்கட்டைகளினாலும் தாக்கியுள்ளனர். என்று சித்திரவதைகளில் இருந்து விடுதலை அமைப்பு கூறியுள்ளதாக கார்டியன் தகவல் வெளியிட்டுள்ளது. (வ)

# இலங்கையர்களை சட்டவிரோதமாக அழைத்துச் செல்ல முற்பட்டோர் கைது

இலங்கையர்கள் இருவரை சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவுக்குள் அழைத்துச் செல்ல முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைப் புகலிடக் கோரிக்கை யாளர்களை கார் ஒன்றில் சட்ட விரோதமான முறையில் இரு வர் அமெரிக்காவுக்குள் அழைத்துச் செல்ல முற்பட்ட போது, அந்த நாட்டு எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஜூவான் லாமாஸ் மற்றும் கார்சியா அமாடோர் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருக்கைப் பட்டி சட்ட மீறலுக்காக வாகனத்தை காவல் துறையினர் நிறுத்தியதாகவும் வாகனத்தில் இரண்டு இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனன்யசேகரம் தபநேசன் மற்றும் வேலுப்பிள்ளை கணேசன் ஆகிய இலங்கையர்களே சட்டவிரோதமான முறையில் வாகனத்தில் பயணம் செய்துள்ளனர்.

இலங்கையர்களை அமெரிக்காவுக்குள் அழைத்துச் சென்ற இருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும், இருவரையும் தடுப்புக் காவலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு புகலிடக் கோரிக்கையாளர்களும் சாட்சிகள் என்ற ரீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (வ)

# தொழிற் பயிற்சி அதிகார சபையால் புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.16

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் புதிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலான தேசிய சான்றிதழ், ஓட்டோ திருத்துதல், மோட்டார் சைக்கிள் திருத்துதல், முக அலங்காரம், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல், தையல் கலை ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக இல.375, கே.கே .எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சுயவிவரக் கோவையை நேரிலோ தபாலிலோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-313)


## தென்மராட்சி பனை தென்னை வள அ.கூ.ச. கொத்தணி வரணி

### பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல்

பதவி : பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)
குறியீட்டு இலக்கம் : 101/08
சம்பள அளவுத்திட்டம் : 11200-14100
140X10-150X10
சுற்று நிருபம் : 108/08 (101/08)
சுற்றுநிருபம் : 66/2006ன் படி

இக் கொத்தணியிலுள்ள மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(வெளிவாரியாக)

தகைமைகள்: அ) கூட்டுறவு ஊழியர் 09 வது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட முகாமைத்துவ/மேற் பார்வைமட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது, கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட முகாமைத்துவ/ மேற் பார்வை மட்ட பதவியொன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அனுமதி வாய்ந்த முகாமைத்துவ/மேற்பார்வைமட்ட தொடர்புபட்ட அலுவல்கள் பற்றி 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 18-45 ற்கு இடைப்பட்டவர்கள்

ஏனைய விவரங்கள் :
அ) கொத்தணியினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
ஆ) மேலே காணப்படும் பதவிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை கொத்தணி காரியாலயத்தில் கட்டணம் செலுத்தி பெற்று உரிய வகையில் பூர்த்தி செய்து அவசியமான இணைப்புகளுடன் 31.12.2011 ம்திகதிக்கு முன்னர் தலைவர், தென்மராட்சி பனை ,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங் களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டா.
இ) தற்போது கூட்டுறவு சேவையிலுள்ள பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.
ஈ) தற்போது சேவையிலுள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
உ.) விண்ணப்ப முடிவுதிகதி 31.12.2011
ஊ) சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
எ) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தால் விதிக்கப்படும் ரொக்கப்பிணையும் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

29.11.2011
கி. பூபாலசிங்கம், தலைவர்.
(11262)(6-9-8)


# ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ.16

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வடமாகாண அமைச் சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றமும் இணைந்து இந்த ஒளிவிழாவை ஏற்பாடு செய்துள்ளன. (ந-14)

# மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள்

தென்மராட்சி, டிசெ.16

சுகாதாரத் திணைக்களத்தின் விஷன் 2020 திட்டத்தின் கீழ் கடந்த ஒகஸ்ட் மாதம் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்பட்ட நாள் பரிசோதனை முகாமில் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 34 மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

இந்த மூக்குக் கண்ணாடிகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின்போது தெரிவு செய்யப்பட்ட 18 மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் வந்ததும் விநியோகிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ம-207)


## விற்பனைக்கு

60அடி 16 அடி தகர செட்,
10' தச்சப்பட்டடை விற்பனைக்கு
தொடர்புகளுக்கு: 0771016392.
(6,9,10)

## அறிவித்தல்

### காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

2012 ஆம் ஆண்டுக்கான சபையின் நிகழ்ச்சித் திட்ட வரவு - செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவுக் கமைய தயாரிக்கப்பட்டு 16.12.2011 தொடக்கம் ஏழு(07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

மு.ஆ.வே. ஆனைமுகன்
(சி/6901)(3.6.9) (தலைவர்)

## காரைநகர் பிரதேச சபை

### பகிரங்க அறிவித்தல்

காரைநகர் சிவன் கோவிலுக்கு செல்லும் புது வீதியில், மல்லிகை என்னும் இடத்தில் பனை தென்னை வள கூட்டுறவு சங்கத்தால் கடந்த பல ஆண்டுகளாக தற்காலிக ரீதியில் நடத்தப்பட்டு வரும் கள் விற்பனை நிலையத்தை அதே இடத்தில் நிரந்தரமான கட்டடத்தில் அமைத்து நடத்துவது தொடர்பில் மேற்படி சங்கத்தினர் பிரதேச சபையிடம் விண்ணப்பம் செய்துள்ளனர். இவ் விண்ணப்ப அனுமதி தொடர்பாக பொதுமக்கள் தரப்பினரிடம் இருந்து ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் இன்றிலிருந்து பதினான்கு (14) நாள்களுக்குள் தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு வேண்டுகின்றேன்.

வே.ஆனைமுகன்,
தவிசாளர்,
காரைநகர் பிரதேச சபை.
15.12.2011.
(c/6902) (10,6,9)

# உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகளின்படி யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/ 17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிமூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின்கீழ் குறிப்பிடப்படும் கிளைகளின் கிளைக் குழுத் தெரிவுக்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்களை 18.12.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதற்குக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களை நியமித்துள்ளேன்.

| கிளை இலக்கம் | பெயர் | நேரம் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | அந்தணத்திடல் | முற்பகல் 10 மணி | கப்புதூ கிளைக்கட்டட முன்றில் |
| 02 | இமையாணன் | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டம் முன்றில் |
| 03 | இமையாணன் கிழக்கு | முற்பகல் 10 மணி | அறிவாலயம் சனசமூக நிலையம் |
| 04 | இமையாணன் வடமேற்கு | முற்பகல் 10 மணி | வீரகத்தி விநாயகர் சனசமூக நிலையம் |
| 05 | கலட்டி | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டட முன்றில் |
| 06 | கம்பர்மலை | பிற்பகல் 2 மணி | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் |
| 06 A | கம்பர்மலைக் கிழக்கு | பிற்பகல் 2 மணி | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் |
| 07 | தூதாவளை | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டட முன்றில் |
| 08 | கப்புதூ | முற்பகல் 10 மணி | கப்புதூ கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடம் |
| 09 | கரணவாய் மத்தி | முற்பகல் 10 மணி | வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலை |
| 10 | கொற்றையூர் | முற்பகல் 10 மணி | பொது நோக்கு மண்டபம் கரணவாய் வடக்கு |
| 11 | கரணவாய் தெற்கு | முற்பகல் 10 மணி | வள்ளுவன் சனசமூக நிலையம் |
| 12 | சமரபாகு | முற்பகல் 10 மணி | நியூட்டன் சனசமூக நிலையம் |
| 12 A | கொற்றாவத்தை | முற்பகல் 10 மணி | கொற்றாவத்தை கலைவாணி ச.ச.நி. |
| 13 | மண்டான் | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டடம் |
| 14 | முருகமூர்த்தி | முற்பகல் 10 மணி | முருகமூர்த்தி சனசமூக நிலையம் |
| 15 | நவிண்டில் | முற்பகல் 10 மணி | நாவலன் சனசமூக நிலையம் |
| 16 | பழனிநிதி | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டட முன்றில் |
| 17 | கரணவாய் வடக்கு | முற்பகல் 10 மணி | வளர்மதி சனசமூக நிலையம் |
| 18 | நாவலடி | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டட முன்றில் |
| 19 | சோழங்கன் | முற்பகல் 10 மணி | சோழங்கன் சனசமூக நிலையம் |
| 19 A | ஏ.விபுலாநந்தர் மக்கள் கடை | முற்பகல் 10 மணி | விபுலானந்த சனசமூக நிலையம் |
| 20 | சிறிமுருகன் | முற்பகல் 10 மணி | சோழங்கன் சனசமூக நிலையம் |
| 20 A | கல்லுவம் | முற்பகல் 10 மணி | கலைநேசன் சனசமூக நிலையம் |
| 21 | கருணையம்பதி | முற்பகல் 10 மணி | வ.தெ.மே.பிரதேச சபை, உடுப்பிட்டி உப அலுவலகம் |
| 22 | உடுப்பிட்டி மத்தி | முற்பகல் 10 மணி | பொதுநோக்கு மண்டபம் உடுப்பிட்டி தெற்கு |
| 23 | வல்வெட்டி | முற்பகல் 10 மணி | வல்வெட்டி சனசமூக நிலையம் (இ.த.க.பாடசாலை வீதி) |
| 24 | வல்வெட்டி மேற்கு | முற்பகல் 10 மணி | கிளைக்கட்டட முன்றில் |
| 33 | இமையாணன் வடக்கு | முற்பகல் 10 மணி | ஜோதி சனசமூக நிலையம் |
| 34 | கரணவாய் வட மேற்கு | முற்பகல் 10 மணி | கலைமதி சனசமூக நிலையம் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காதுவிடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்
**V.K.அருந்தவநாதன்,**
**கூ.அ.உ.ஆணையாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

**கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,**
**857, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**15.12.2011**

(சி/6912) (2-6-)

# தமிழ் பௌத்த சங்கத்தில் இணைந்துள்ள மாணவர் 100 பேருக்கு கல்வி உதவி

யாழ்ப்பாணம், டிசெ.16

தமிழ் பௌத்த சங்கத்தில் இணைந்துள்ள மாணவர்கள் நூறுபேருக்கு ஒரு வருட காலத்துக்கான கல்விச் செலவை வழங்குவதற்கு புத்தசாசன அமைச்சு அனுமதி வழங்கியிருப்பதாகச் சங்கத் தலைவர் அருள்நேசரத்தினம் ரவிக்குமார் தெரிவித்தார்.

அத்துடன் கண்டியிலுள்ள மல்வத்தை பீடாதிபதி மேலும் மூன்று மாணவர்களைத் தெரிவு செய்து தங்குமிட வசதி செய்து கொடுத்து குழுச் செலவுகளையும் பொறுப்பெடுப்பதற்கு உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. கடந்த 10 ஆம் திகதி பொன்னாலை தம்பகுலபட்டி சங்கமித்தை விகாரையில் உந்துவப் போயா நிகழ்வு இடம்பெற்றது.

அதில் சிங்கள பௌத்தர்கள், தமிழ் பௌத்தர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு சிங்கள, தமிழ் பௌத்தர்கள் கலந்து கொள்வது இதுவே முதன்முறை ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே. கல்விச் செலவு வழங்கப்படவுள்ளதாகச் சங்கத் தலைவர் மேலும் கூறினார்.

உந்துவப் போயா நிகழ்வை பௌத்தமத அலுவலர்கள் அமைச்சு, ஸ்ரீநாக விகாரை, நாகதீபம், சம்புத்த ஜயந்தி ஜனாதிபதிக் குழு, கடற்படை, தமிழ் பௌத்த சங்கம் ஆகியவை இணைந்து நடத்தின எனவும் அவர் கூறினார்.

(ம-14)

# இறந்த பின்னர் நான்கு பேரை உயிர் வாழ வைத்த சிறுவன்!

இறந்த பின்பு நான்கு பேரின் உயிர்களைக்காப்பாற்றி தன்பெயரை நிலைநிறுத்திக் கொண்டுள்ளான் பிரிட்டனில் ஒரு சிறுவன்.

லண்டன்டெய்லிமெயில் பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

துடிப்பும், சுறுசுறுப்பும் பேச்சுத் திறனும் கொண்ட 5 வயதான லூக்கா கியோவன்னினி என்ற இந்தச் சிறுவன் பிரிட்டனில் செஸயரில் ஸ்டொக் போர்ட் என்ற இடத்தைச்சேர்ந்தவன்.

விளையாட்டுக்களிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்த சிறுவனுக்குத் திடீரென்று மூளையில் ஏதோ கோளாறு ஏற்பட்டது. மர்மமான ஒரு நோயால் அவனது மூளை பாதிக்கப்பட்டு அது என்ன வென்று கண்டுபிடிக்கப்படாத நிலையிலே மரணத்தைத் தழுவப்போகிறான் என்பது அவனது பெற்றோரை உலுக்கியது. என்றாலும் துணிச்சலான அந்தத் தம்பதிகள், இறக்கப் போகும் தமது மகனின் மூலம் நான்கு பேரின் உயிரைக் காப்பாற்றும்படியான ஒரு முடிவுக்கு வந்தனர். அதன் விளைவாக அந்தச் சிறுவனின் இதயத்தை பொருத்திக்கொண்ட இதய நோயாளியான சிறுமி ஒருவர் சுகமாகி மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பியுள் ளார்.

இன்னொரு இடத்தில் ஆஸ் பத்திரியில் டயலிஸிஸ் மூலம் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த 35 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் சிறுவன் லூக்காவின் ஒரு சிறுநீரகத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த முறை கிறிஸ்மஸ் விழாவை தன் இரு குழந்தைகளுடன் குதூகலாமாக அவரால் கொண்டாட முடியும்.

இன்னொரு இடத்தில் இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் லூக்காவின் வயிறு, ஈரல் மற்றும் கணையம் முதலியவற்றை இரவலாகப் பெற்று சாதாரணபையனைப் போல் உணவு உட்கொண்டு சுகதேகியாக வாழப்போகிறான். மற்றும் 34 வயதான இன்னொரு மனிதர் சிறுவனின் சிறுநீரகம் ஒன்றைப் பெற்று தன் வாழ்வை மாற்றி அமைத்துக் கொள்ளப் போகிறார்.

இவ்வாறு மாற்று உறுப்புக்களைப் பெற்றுக் கொண்டவர்களின் மகிழ்ச்சியில், ஒரு துணிச்சலான, பெருந்தன்மையான, துன்பியலான கதை மறைந்து கிடக்கிறது.


லூக்கா இறந்து விட்டதாக அறிவிக்கப்படும் முன்னரே அவனுடைய 35 வயதான தாய் - பெயர் விக்கி- சிறுவர் பாடசாலை ஆசிரியர் தந்தை - பெயர் ரென்ஸோ 38 வயதான நிதித்துறை ஆலோசகர் இருவரும் மகனின் உறுப்புக்களை அவை தேவைப்படும் நோயாளிகளுக்கு வழங்கி உதவுதவற்குத் தீர்மானித் தார்கள். இப்போது சில வாரங்களே ஆன நிலையில் தாங்கள் செய்த காரியத்தால் அவர்கள் ஆறுதல் அடைகிறார்கள்.

''லூக்காஸ் ஒரு பெருந்தன்மையானபை பையன் நாங்கள் செய்த காரியத்தை அவன் அங்கீகரிக்கவே செய்வான்'' என்கிறார்கள் அவர்கள்.

''எமது இழப்பு எங்களுக்குப் பெரும் துன்பத்தைத் தந்தாலும் எமது பையனால் பல பேர் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள்'' என்று ஆறுதல் அடைகிறார்கள் அவர்கள்.

(ப)

# நீங்கள் கூகுள் குறோம் பார்ப்பவரா? மிகப் பெரிய ஆபத்து



நீங்கள் கூகுள் குறோம் பயன்படுத்துபவரா? அப்படியானால் இந்த விடயத்தை கவனத்தில் எடுங்கள். இன்றைய Browser கூகுள்   குறோம் தனக்கென ஒரு முத்திரை பதித்துள்ளது. அதிகமானோர் விரும்பிப் பயன்படுத்தும் Browser இதில் அனைத்து விதமான வசதிகளும் உள்ளன. இந்த நவீன வசதிகளைக் கொண்ட குறோமில் இருக்கும் மிகப்பெரிய ஆபத்து என்னவென்பதைப் பார்ப்போம். அனைவரது வீட்டிலும் இணைய இணைப்பு இருப்பதில்லை. அதற்காக நாம் பிரவுஸிங் செண்டர்களைத் தேடிச்சென்று நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றோம். நீங்கள் செல்லும் இடத்தில் இருப்பவர்கள் அனைவரும் நல்லவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே நீங்கள்தான் உஷாராக இருக்க வேண்டும்.


அதுவும் பெண்கள் அதிக கவனம் தேவை. உங்கள் மெயில் முகவரி மட்டுமல்ல பயன்படுத்தும் கடவுச் சொல்லையும் பதிவு செய்யும் வசதி இந்தக் குறோமில் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் மிகவும் கவனமாக சைன் அவுட் செய்துவிட்டு சென்றுவிடுவீர்கள். ஆனால் உங்கள் ஈமெயில் முகவரியுடன் கடவுச் சொல்லும் பத்திரமாகச் சேமிக்கப்பட்டிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் முக்கியமானவர்களிடம் ஏதேனும் மெயில் அனுப்பியிருக்கலாம் அல்லது உங்கள் தகவல்களைச் சேமித்து வைத்திருக்கலாம். இதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தவும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அதைவிட உங்கள் நண்பர்களுக்கோ அல்லது முக்கியமானவர்களுக்கோ தவறாக மெயில் அனுப்பலாம்.

அவர்கள் நீங்கள் அனுப்பியதாகவே நினைத்து உங்கள் அன்பை வெறுத்துவிடுவார்கள். இனிமேல் உங்களுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. நாம் சொல்வது போல் செய்தால் போதும். எந்த வேளையிலும் குறோம் பயன்படுத்தினாலும் ஓபின் செய்தபின் அதன் Setting option என்பதை கிளிக் செய்யுங்கள். மேல் உள்ள படத்தைப் பாருங்கள். அதில் basic என்பதற்குக் கீழ் இருக்கும் Personl setuff என்பதை கிளிக் செய்து Password என்பதை தெரிவு செய்து neversave password என்பதில் டிக் செய்யுங்கள். படத்தைப் பாருங்கள். அவ்வளவுதான் உள்ள படத்தைப் பாருங்கள். அவ்வளவுதான் இனி உங்கள் வேலைகளை முடித்தபின் history கிளிக் செய்து Clear all browsing data என்பதை கிளிக் செய்யுங்கள். உங்கள் தரவுகளைப் பாதுகாப்பது எப்போதும் உங்களிடமே உள்ளது.

# நவீன தொழில்நுட்பத்தில் 42 ஆண்டு பழமையான கார்


ஆஸ்திரேலியாவின் ஹோல்டன் நிறுவனம் 42 ஆண்டுகளுக்கு முன்பு வடிவமைத்த அரிக்கேன் கார் நவீன தொழில்நுட்பத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கார் தயாரிப்பில் 150 ஆண்டு பாரம்பரியம் வாய்ந்த ஆஸ்திரேலிய நிறுவனம் ஜி.எம். ஹோல்டன். கடந்த 1969இல் ஹோல்டன்ஸ் அரிக்கேன் என்ற காரை வடிவமைத்தது. இது 2 பேர் மட்டுமே உட்காரக்கூடிய சொகுசுக்கார். முழுமையாக ஹைட்ரோலிக் தொழில்நுட்பத்தில் இயங்கும் வகையில் கதவுகள் அமைக்கப்பட்டன. வர்த்தக ரீதியான தயாரிப்பாக இல்லாமல், தொழில்நுட்பத்தை விளக்குவதற்காக ஒரே ஒரு கார் மட்டுமே அப்போது தயாரிக்கப்பட்டது.

ஜிபி.எஸ் வசதிகள், காரைச் சுற்றிலும் கண்காணிக்கின்ற அதிநவீன கமராக்கள், முழு ஏ.சி. வசதி ஆகியவற்றையும் பொருத்தி அதிநவீன சொகுசுக் காராக இதை ஹோல்டன் நிறுவனம் மாற்றியமைத்துள்ளது. மெல்பேர்னில் நடந்த கார் கண்காட்சியில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்த கார், பார்வையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.



இதுபற்றி ஹோல்டன் நிறுவன பொறியியலாளர்கள் கூறுகையில், காலத்துக்கு ஏற்ப சிற்சில மாற்றங்களை மட்டுமே செய்திருக்கிறோம். 42 ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு வசதிகளுடன் கூடிய காரைத் தயாரித்தது வியக்க வைக்கிறது. காரின் மையப்பகுதியில் இன்ஜினை பொருத்தியிருப்பது சிறப்பம்சம் என்றனர்.

# தொடர்ந்து 9 மணி நேரம் மியூசிக் கேட்க ஓர் புதிய மொபைல்!



அடுத்து அடுத்து பல மொபைல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது ஃப்ளை மொபைல் நிறுவனம். குறைந்த விலையில், அதிக வசதிகளுடன் மொபைல்களை வழங்குவதால் ப்ளை மொபைல்களுக்கு உலக சந்தையில் தனி இடம் கிடைத்துள்ளது.

தனது பிரத்தியேகமான சிறப்பம்சத்தை தக்கவைத்துக்கொள்ளவும், இசை விரும்பிகளின் தாகத்தை போக்கும் வகையிலும் C-200 என்ற புதிய டியூவல் சிம் கார்டு பொருத்தும் வசதிகொண்ட மொபைலை இந்திய சந்தையில் கூடிய விரைவில் கொடுக்க இருக்கிறது ஃப்ளை நிறுவனம்.

2.8 இஞ்ச் திரை கொண்ட இந்த மொபைல், 240 x 320 திரை துல்லியத்தைக் கொடுக்கும். இதன் விஜிஏ கமரா அதிகபட்சம் 640 து 480 பிக்ஸல் துல்லியத்தை கொடுக்கும். இதன் சேமிப்பு ஸ்லாட் மூலம் மேலதிக சேமிப்பை 8ஜிபி வரை விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

இந்த மொபைலில் சமூக வலையமைப்பின் வசதியையும் பெற்று பயனடையலாம். அதற்காக இதில் ஜிபி.ஆர்.எஸ். தொழிவ் நுட்பமும் உள்ளது. இதன் 1,000 எம்.ஏ.எச். பற்றரி மூலம் 3 மணித்தியாலங்கள் டாக் டைம் மற்றும் 200 மணி நேரம் ஸ்டான்-பை டைமையும் பெறலாம். மேலும், இந்த மொபைலில் 9 மணி நேரம் தொடர்ந்து இசையைக் கேட்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

இதனால், இந்த மொபைல் பற்றிய எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மேலும், இந்த புதிய ப்ளை மொபைல் வெறும் 92 கிராம் எடையை கொண்டதாக இருக்கிறது என்பது கூடுதல் விசேடம்.

# மிகவும் சிறியதான ரி.வி. விரைவில் அறிமுகம்

சுருட்டி எடுத்துச் செல்லும் வகையில் பொக்கெட் ரீ.வி. தயாரிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. தற்போது அதிநவீன தொழில் நுட்பம் கொண்ட தொலைக்காட்சிகள் பயன்பாட்டில் உள்ளன. குறிப்பாக 3டி முப்பரிமாண தொலைக்காட்சிகள் விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றை ஒரே இடத்தில் வைத்துத்தான் பார்க்க முடியும். ஆனால் சுருட்டி மடக்கி பொக்கெட்டில் எடுத்து செல்லும் மிக அதிநவீன தொலைக்காட்சிகளை இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு தயாரித்துள்ளனர்.

மனித ரோமத்தை விட ஒரு லட்சம் மடங்கு மெல்லிய சின்னஞ்சிறிய ஒளிப்பான்களை உருவாக்கியுள்ளனர். அதற்கு குவாண்டம் டாட்ஸ் என்று பெயரிட்டுள்ளனர். அதன் மூலம் மிகமெல்லிய தொலைக்காட்சித் திரை களை உருவாக்க முடியும். அவற்றை பிளாசிட்டிக் பிளாஸ்டின் சீட்டில் ஒட்டி அதை எங்கு வேண்டும் என்றாலும் எடுத்துச் செல்ல முடியும். அவை அடுத்த ஆண்டு இறுதியில் கடைகளில் விற்பனைக்கு வரும். ஆசிய மின்சாதனக் கம்பனிகளின் உதவியுடன்இவற்றை தயாரித்ததாக மான்செஸ்டர் பல்கலைக்கழகவிஞ்ஞானி மைக் கேல் டெல்டான் தெரிவித்துள்ளார்.



# தோஷிபா எக்ஸைட் உலகின் மிக மெல்லிய ரேப்லெட்


மெல்லிய ரேப்லெட்டுகள் இப்போது படையெடுத்து வருகின்றன. அவை மிகவும் நாகரிகமாகவும் அதே நேரத்தில் நவீன தொழில் நுட்பங்களும் கொண்டு வருகின்றன.

அந்த வரிசையில் இப்போது தோஷிபா நிறுவனம் தற்போது தோஷிபா எக்ஸைட் என்ற புதிய மெல்லிய ரேப்லெட்டை அடுத்தவருடம் ஜனவரி மாதத்தில் அறிமுகப்படுத்த உள்ளது. இந்த புதிய ரேப்லெட் உலகின் மிக மெல்லிய ரேப்லட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தோஷிபா எக்ஸைட்டின் சிறப்புகளைப் பார்த்தால் அது அல்ட்ரா காம்பெக்ட்டாக மிகக்குறைந்த எடையுடன் வருகிறது. இதன் திரை 10.1 இஞ்ச் ஆகும். அதுபோல் 2 கமராக்களைக் கொண்டு வருகிறது. மேலும் எச்.டி.எம்.ஐ. பெயர்ப்பலகையுடன், இது ஆன்ட்ராய்டு இயங்கு தளத்தையும் கொண்டிருக்கிறது.

தோஷிபா எக்ஸைட் டேப்லெட்டின் பரப்பு 10.08 மி.மீ. x 6.93 மி.மீ. x 0.30 மி.மீ. ஆகும். இதன் எடை 558 கிராம் மட்டுமே. எனவே, இதை மிக எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

இந்த ரேப்லெட்டின் டிஸ்ப்ளே கெப்பாசிட்டிவ் வகையைச் சேர்ந்தது. இதன் திரையின் அளவு 1280 x 800 பிக்சல் ஆகும். இதில் லைட் சென்சார் உள்ளதால் இதன் திரை மிகவும் பளிச்சென்று இருக்கும். இதன் முக்கிய கமரா 5 மெகா பிக்சலையும் அதேநேரத்தில் இதன் உச்சியில் இருக்கும் கமரா 2 மெகா பிக்சலையும் கொண்டிருக்கிறது. உள்ள கமரா மூலம் வீடியோ அழைப்பு வசதியை மிகவும் நன்றாகப் பயன்படுத்த முடியும்.



தோஷிபா எக்ஸைட்டின் பிராசஸர் டி.ஐ.ஓ.எம்.ஏ.பி. 4430 ஆகும். இந்த பிராசஸர் 1200 எம்ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்குகிறது. இந்த ரேப்லெட்டின் மொத்த சேமிப்பு அளவு 1024 எம்.பி. ஆகும். மேலும் இந்த ரேப்லெட் 16 ஜிபி மற்றும் 32 ஜிபி ஆகிய 2 இன்டர்னல் சேமிப்பு அளவுகளைக் கொண்டுள்ளது. மேலும் மைக்ரோ எஸ்டி கார்ட் மூலம் இந்த மேலதிக சேமிப்பை விரிவுபடுத்த முடியும்.

# ராணுவத்தைக் கொண்டு கொழுந்து பறிக்கப்படும் என்று தொழிலாளரை அச்சுறுத்தி வேலை வாங்க முடியாது

## யோகராஜன் எம்.பி.குற்றச்சாட்டு

நுவரெலியா, டிசெ.16

தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார்களுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட கூட்டொப்பந்தத்தை தோட்ட முகாமையாளர்கள் மீறுகின்றனர். நாளொன்றுக்கு கூடுதலான கொழுந்துகளைப் பறிக்குமாறு தொழிலாளர்கள் பணிக்கப்படுகின்றனர். கொழுந்து பறிக்க முடியாதெனின் இராணுவம் அழைக்கப்படும் என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு அச்சுறுத்தி கொழுந்து பறிப்பதற்கு முயற்சிக்கக் கூடாது என்று ஐ.தே.க.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தொழில் உறவுகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஒய்வூதிய சட்டமூலங்களில் அரசு மேற்கொள்ள விருந்த திருத்தங்கள் தோல்வியடைந்து விட்டன. தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்தாமையினாலேயே இந்தச் சட்டமூலங்கள் தோல்வியடைந்தன.

தொழிலாளர்களின் பங்குபற்றுதலின் கீழ் இருக்கும் ஒய்வூதியம் அவருக்கு பின்னர் அதன் நலன்கள் குடும்ப உறவினர்களுக்கு கிடைக்குமா என்ற அச்சம் தொழிலாளர்களிடத்தில் இன்னமும் நிலவுகின்றது. இந்தச் சந்தேகம் தீர்க்கப்படவேண்டும்.

பெருந்தோட்டத்துறை சார்ந்த கூட்டொப்பந்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் பெருந்தோட்டத்துறை சார் பிரச்சினைகளில் தொழில் அமைச்சுக்கு தலையிட முடியும்.

கூட்டொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது. கூட்டொப்பந்தங்களை பெருந்தோட்ட கம்பனிகள் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டும். எனினும், அவற்றை நடைமுறைப்படுத்தவேண்டாம் என்று முதலாளிமார் தோட்ட முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இவை தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தவேண்டும். நாளொன்றுக்கும், விடுமுறை தினங்களிலும் பறிக்கவேண்டிய கொழுந்தின் நிறை தொடர்பில் கெடுபிடிகளை விதிக்கின்றனர். கூடுதலாகப் பறிக்குமாறும் அச்சுறுத்தப்படுகின்றனர்.

தொழில் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒன்றரை நாளுக்குரிய சம்பளத்திற்காக செய்யவேண்டிய வேலை தொடர்பில் கூட்டொப்பந்தத்தில் மட்டுமன்றி சர்வதேச சட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை இருக்கின்றது. சந்தைப்படுத்தல் யுக்தியை பெருந்தோட்ட கம்பனிகள் கையாளவில்லை. இதனால்தான் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கின்றன. நாளொன்றுக்குப் பறிக்கவேண்டிய கொழுந்தின் அளவை விடவும் கூடுதலாகப் பறிக்குமாறு தொழிலாளர்கள் பணிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பறிப்பதற்கு முடியாவிடின் இராணுவம் கொண்டு வரப்படும் என்று அச்சுறுத்தப்படுகின்றனர். இவ்வாறான அச்சுறுத்தலின் மூலம் வேலை வாங்க முடியாது.

வீடொன்றைக் கட்டுவதற்காக ஊழியர் சேமலாப நிதியில் மாதாந்தம் 400 ரூபா செலுத்தும் வகையில் 30 ஆயிரம் ரூபாவை தொழிலாளர்கள் கடன் பெற்றுள்ளனர்.

அவர்கள் வட்டியுடன் 48 ஆயிரம் ரூபாவை செலுத்திவிட்டபோதிலும் 30 ஆயிரம் கடன்தொகை இன்னும் செலுத்தப்படவில்லை என்று தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ச)

# கஞ்சா சேனை பொலிஸாரால் முற்றுகை

## சந்தேகத்தில் மூவர் கைது

தியத்தலாவை, டிச.15

மொனராகலை அத்திமலைப் பிரதேசத்தில் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான காய்ந்த கஞ்சா மற்றும் உபகரணங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் அடர்ந்த வனப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த ஒன்றரை ஏக்கர் கஞ்சாசேனையை முற்றுகையிட்ட விசேட பொலிஸ் அதிரடிப்படையினர், அங்கு பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 65 கிலோ எடைகொண்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவையும் கைப்பற்றினர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை விசேட அதிரடிப்படையினர் இந்த வனப் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளையிலேயே கஞ்சா சேனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ச)

# லஞ்ச குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கம்

மிஹிந்தலை,டிசெ.16

மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் முதல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக இவர்கள் லஞ்சம் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் அவ ருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (ச)



திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் 33 அடி உயரமான தியான நிலை சிவபெருமானின் சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# அரசியல் அதிகாரமின்றி சாதிக்கவே முடியாது

## மாகாண அமைச்சர் உதுமாலெப்பை

இறக்காமம், டிசெ.16

எந்தவொரு விடயத்துக்கும் அரசியல் அதிகாரம் மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. அரசியல் அதிகாரமின்றி எதையுமே சாதித்துவிட முடியாது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

இறக்காமம் அல் - அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர்மேலும் தெரிவித்ததாவது:

கல்வி, வீதி, சுகாதாரத் துறை அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு அரசியல் அதிகாரம் மிகவும் அவசியமாகும். நாம் பெற்ற அரசியல் அதிகாரத்தினூடாக இந்த மாகாணத்திலுள்ள மூவின மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற பேதமின்றி மூன்று இன மக்கள் மத்தியிலும் நாம் பெற்ற அரசியல் அதிகாரத்தைக்கொண்டு அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்-என்றார். (ச)

# மட்டக்களப்பு வாவியில் குழையிட்டு மீன் பிடிப்போருக்கு பல்வேறு தடை

## பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஆதங்கம்

மண்டூர், டிசெ.16

மட்டக்களப்பு வாவியில் குழைகள் போட்டு மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மீனவர்கள், ஒருசில அதிகாரிகளின் தலையீடு காரணமாக தற்போது மீன்பிடித் தொழிலைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

ஆரம்பகாலம் தொடக்கம் இவ்வாறானமீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றோம். இதனால் சூழலுக்கும் மீன் இனங்களுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இந்தத் தொழிலைச் செய்ய வேண்டாமென ஒருசில அதிகாரிகள் தங்களை வற்புறுத்தி தங்களுடைய மீன்பிடிக்கும் இடங்களில் உள்ள பொருள்களை அகற்றியதன் காரணமாகத் தாங்கள் கஷ்டமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வாவியில் தற்போதும் சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டு மீன் இனங்களை சிலர் பிடித்து வருகின்றனர். இதனைத்தடுத்து நிறுத்தாமல் தாங்கள் காலாகாலமாக செய்து வந்த மீன்பிடித் தொழிலைத் தடுத்து நிறுத்துவதன் காரணம் என்னவென்று புரியவில்லை.

எனவே, இதுதொடர்பாக அதிகாரிகள் உரிய கவனமெடுத்து தங்களின் குடும்பங்கள் அன்றாடம் வாழ்க்கை நடத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்து தரவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# இடமாற்றத்தை இரத்துச் செய்யக்கோரி கல்முனையில் பெரும் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, டிசெ.16

அம்பாறை மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களிலிருந்து புள்ளி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளி மாவட்டங்களுக்கும் வெளி வலயங்களுக்குமான ஆசிரியர் இடமாற்றங்களை இரத்துச் செய்யக்கோரி நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்முனையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கல்முனை கல்வி வலயத்திலிருந்து இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கல்முனை பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து கல்முனை வலயக்கல்வி அலுவலகம் வரை பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் சென்றனர். இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எல்.துல்க்கர் நயீம், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. தௌபீக் ஆகியோரிடம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரிய, ஆசிரியைகள் தமது இடமாற்றத்தை இரத்துச்செய்யக்கோரும் மகஜர்களைக் கையளித்தனர்.



கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் முன்னிலையில் உரையாற்றும்போது, இந்த இடமாற்றமானது அநீதியான முறையில் இடம்பெற்றுள்ளது. இந்த விடயத்தில் தாம் முழுமையாக ஈடுபட்டு நிவாரணம் பெற்றுத்தருவேன் என்று உறுதியளித்தார். எதிர்வரும் 22ஆம் திகதி கிழக்கு மாகாணசபை அமர்வில் இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்ய முயற்சி எடுப்பேன் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடலாம். கௌரவத்துக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். உறவினர்களின் குறுக்கீடு காரணமாக, நீங்கள் நினைத்த காரியம் ஒன்றை முடிக்க முடியாமல் போகலாம். சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப்பேச்சுக் களுக்கும் ஆளாகலாம்.


**இடபம்:**
சிலரிடம் உங்களின் பெருமைகளை வெளிப்படுத் துவீர்கள். பெண்கள் வழியில், சிறு உதவிகள் கிடைக்கலாம். வழக்கமான வேலைகளைத் தங்கு தடையின்றி செய்து முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதையும் ஒரு முறைக்கு, பலமுறை யோசித்துச் செய்வீர்கள்.


**மிதுனம்:**
சிலரிடம் உங்களின் மனக் குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். பண விடயங்களில், சிலரிடம் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். உங்களுக்குப் பிடிக்காத விடயம் ஒன்றை, குடும்பத்தினரோ அல்லது சக ஊழியர்களோ சொல்லலாம். புதியவர் ஒருவரை நம்பி சில காரியங்களில் இறங்கி, அதிருப்தி அடையலாம்.


**கடகம்:**
சிறிய வேலைகளையும் அதிக கவனத்துடன் செய்ய வேண்டிய நாள். அயலாரைப் பார்த்து, சில விடயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். பிள்ளைகள் விருப்பங்களுக்கு, முக்கியத்துவம் கொடுப்பீர்கள். நாளை வரலாம் என்று நினைத்த பணவரவு ஒன்று, இன்றே வரலாம். பழைய தவறுகளை நினைத்து கவலை கொள்வீர்கள்.


**சிங்கம்:**
நீங்கள் எதிர்பாராத நண்பர் அல்லது உறவினர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளலாம். விரவாகச் செய்ய நினைத்த வேலை ஒன்றை, தாமதமாகச் செய்ய நேரிடலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம்.


**கன்னி:**
வியாபாரிகள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படு வர். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை எளிதில் அடையும் வாய்ப்பு உருவாகும். அரசு தொடர்பான காரியங்கள், அனுகூலமாக முடிவுக்கு வரும். உறவினர்கள் மூலம், புதியவர்களின் அறிமுகம் கிட்டும். வழக் கத்துக்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம்.


**துலாம்:**
இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று, இன்று முடிவுக்கு வரும். தம்பதியரி டையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து, பாசம் அதிகரிக்கும். சில வேலைகளுக்காகவோ அல்லது சிலரைச் சந்திக்கவோ நீண்ட நேரம் காத்திருக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாத வேலைகளை நீங்களே செய்ய வேண்டிய நிலையால் அவதிப்படலாம்.


**விருச்சிகம்:**
தர்ம, புண்ணியக் காரியங்களைச் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத நண்பர் ஒருவர், உங்களி டம் உதவி கேட்கலாம். தேவையற்ற அலைக்கழிப் புகளால் சோர்வடையலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றில், திடீரென மாற்றம் செய்யலாம். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் ஒருவருக்குத் துணையாகச் செல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.


**தனுசு:**
வீண் பேச்சுக்களால் பிரச்சினைகளுக்கு ஆள்பட லாம். இறைவழிபாட்டின் மூலம், மன அமைதி பெற வேண்டிய நாள். உறவினர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய முடியாமல், அவரின் கோபத்துக்கு ஆளாகலாம். சிறிய தவறு ஒன்றுக்காக, குடும்பப் பெரியவர்கள், உங்களைக் கடிந்து கொள்ளலாம். சபலங்களை, பேராசைகளைத் தவிர்க்க் வேண்டிய நாள்.


**மகரம்:**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சக ஊழியர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களுக்கு விரோதமாகச் செயற்படும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.


**கும்பம்:**
விரதம், வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். அயலாரிடம், நண்பர்களிடம் கடனாகக் கொடுத்த பணம், திரும்பி வரும். அதிக செல்வாகும் என்று நினைத்த வேலை ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரும். அடுக்கடுக்காகப் பல வேலைகளை திட்டமிட்டுச் செய்வீர்கள்.


**மீனம்:**
இறை வழிபாடுகளுக்காக, சில செலவுகளைத் தாராளமாகச் செய்வீர்கள். அயலார் மத்தியில், உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள் வீர்கள். மற்றவர்களை மீறி, எதிலும் உங்களின் ஆதிக்கத்தைச் செலுத்த முற்படுவீர்கள்.

# இனப்பிரச்சினை ஒன்று
# அரசு ஏற்றுக் கொண்டு
# பெரும் சாத

‘டெய்லி மிரர்’ பத்திரிகையில் எம்.எஸ்.
எழுதிய கட்டுரையின் தமிழாக்

**அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 2011 ஜனவரி 10 ஆம் திகதி பேச்சுக்களை ஆரம்பித்தன. இதுவரை இனப்பிரச்சினை தொடர்பாக 10 சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.**

**2011 – ஜனவரி 14 அன்று அரசியல் தீர்வொன்றை வழங்கும் பணியை நாடாளுமன்றத்திடம் வழங்கப் போவதாக அரசு அறிவித்தது.**

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சி களுடனும் கலந்து ஆலோசனை நடத்தப்பட வேண்டும் என்று அரசு கருதுமாக இருந்தால் எதற்காக அதே பிரச்சினை தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்ட மைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்தது? இன் னொரு விதத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதுதான் சரியென்றால், நாடா ளுமன்றக் குழுவொன்றை அதே பிரச்சினைத் தீர்வுக்காக அரசு ஏன் நியமிக்க வேண்டும்?

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வால் நியமிக்கப்பட்ட கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும், தனது அறிக் கையை ஜனாதிபதியிடம் கடந்த மாதம் கைய ளித்தது. அதனை இந்த மாதமே நாடாளுமன்றில் அவர் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆணைக்குழு ஒரு தீர்வை அல்லது சில வழிகாட்டல்களை தெரிவிக்கக் கூடும் என்றும் நம்பப்படுகின்றது.

**எதிர்மாறாக இருந்துவிட்டால்?**

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒருபுறமிருக்க, அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிடையிலான பேச்சுக்களின் முடிவுகள் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளுக்கு எதிர்மாறாக இருந்துவிட்டால் அரசு என்ன செய்யும் என்று கேட்கப்படுவது இயற்கையே.

இந்த விடயம் தொடர்பாக முன்னொரு சுற்றுப் பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்டுத் தீர்மா னங்கள் எடுக்கப்பட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது. அந்த உடன்பாடு கூட்டக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட்டிருப்பதாக வும் கூட்டமைப்புக் கூறியுள்ளது. இந்த விடயம் இதுவரைக்கும் அரச தரப்பால் மறுக்கப்படவும் இல்லை.

இருதரப்பு பேச்சுக்களில் ஒரு தீர்வு எட்டப்படு வதற்கு முன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நியமிக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்தும் அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது பிரதிநிதிகளைத் தெரிவுக்குழுவுக்கு நியமிப் பதற்கு முன்பாக ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்று உறுதிபட நிற்பதனால் தேசியப் பிரச்சி னைக்குத் தீர்வு காணும் இந்த முழு செயப்பாடு களுமே முட்டுக்கட்டைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படக் கூடும்.

> ஜூலை 24 வடக்கு கிழக்கில் பெரும்பாலும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றி வாகை சூடிய கூட்டமைப்பு அரசுத் தரப்பின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் கௌரவமாக அரசியல் தீர்வொன்றை நாடி வாக்களித்துள்ளார்கள் என்று அறிவித்தது

இவற்றுக்கிடையில் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும் ஜனதா விமுக்தி பெரமுனவும் தெரிவுக் குழு கலந்துரையாடலில் கலந்துகொள்ள மறுத்துவருவதானது நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவிதி அந்தரத்தில் தொங்குவதுபோல் தெரிகின்றது.

இரு தரப்புப் பேச்சுக்களின் போது முதலில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதென்றும் அதனைத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் தாக்கல் செய்வது என்றும் அரசு இணங்கியிருந்தது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இந்த விடயம் கூட்ட அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாக சுமந்தி ரன் கூறுகிறார் என்பதற்காக மட்டுமல்ல இந்த அளவுக்கும் தெரிவுக்குழு விடயம் இருதரப்பு பேச்சுக்களில் இடம்பெற்றுத்தான் இருக்க வேண் டும். மேலும் அரச தரப்பிலிருந்து ஏதும் உறுதிப்பாடு வழங்கப்படாத நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அளவு தூரம் வந்திருப்பதற்கு நியாயமில்லை.

தெரிவுக் குழுவுக்கான பிரநிதிகளை நியமித்ததன் பின்னர் ஆளும் கூட்டமைப்புடன் சேர்ந்து தெரிவுக் குழு ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் வரை கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளாமல் இருந்து வரலாம்.

இன்னொரு விதமாகப் பார்த்தால் தெரிவுக்குழு வில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் செய்து கொள்ளும் இணக்கப்பாட்டை முன் வைப்பதில் அரசு உண்மையில் அக்கறை கொண்டிருக்கு மானால் தெரிவுக் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனது பிரதிநிதிகளை நியமிக்கும்படி நெருக்காமல் நிதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

மேலும் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமக்கிடையில் செய்து கொள்ளப்படும் உடன்பாட் டின் மீது ஒருமித்த கருத்து உருவாகும் என்பதை அவை முதலில் எங்ஙனம் உறுதிபடுத்தப் போகின் றன? மேலும் தெரிவுக் குழுவில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகளின் முன் அதனைக் கலந்துரை யாடலுக்கான அடித்தளமாக ஏற்றுக் கொள்ளும்படி எங்ஙனம் கேட்கப் போகின்றன? ஆளும் கூட்ட மைப்புக்குள் உள்ள சிறு கட்சிகள் சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதாக இருக்கலாம். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட

# இருப்பதை ள்ளமையே னை

. எம். அயூப்
க்கம்

தமிழில் - ரம்யன்

ஜூன் 21 ஆம் திகதி இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாடாளுமன்றக் குழுவை நியமிக்கும் நடவடிக்கையை அரசு முன்னெடுத்தால் பேச்சுக்களில் இருந்து வெளியேறப் போவதாக கூட்டமைப்பு அறிவித்தது

மைப்புக்கும் தமது இணக்கப்பாட்டை கலந்துரையாடலுக்கான அடிப்படைக் கருவூலமாக அதனை ஏற்றுக்கொள்ளும்படி ஐக்கிய தேசியக் கட்சியையோ, ஜே.வி.பியையோ அழுத்தம் கொடுக்க முடியாது.

ஐ.தே.க.வும் ஜே.வி.பியும் தெரிவுக்குழுவில் கலந்து கொண்டாலும் அந்த இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கான உத்தரவாதமில்லை. அதுபோலவே, அரசில் உள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கும் உத்தரவாதம் இல்லை. இந்த நிலையில் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது இணக்கப்பாட்டை ஏனைய கட்சிகள் மீது திணிக்கப் பார்க்கிறார்களா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

இவ்வித குழப்பகரமான நிலைமை தோன்றியிருப்பதற்கு அரசின் மும்முனை அணுகுமுறையே காரணமாகும். அதாவது நாடாளுமன்ற தெரிவுக்குழு, கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை ஆகியவையாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தரப்புகள் இந்த மும்முனை அணுகுமுறை மூலம் கண்டு கொண்ட சாதனை என்னவென்றால் தமிழ் மக்கள் தொடர்பாக ஒரு பிரச்சினை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை ராஜபக்ஷ அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை ஆவணப் பதிவாக்கியமைதான் என்று கூறலாம்.

எவ்வாறு இருந்தாலும் இந்த நாட்டிலுள்ள அரசியல் கலாசாரம் என்னவென்றால் நாளைய தினம் கூட இங்குள்ள அரசு அப்படியொரு பிரச்சினையும் கிடையாது என்று மறுத்துரைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# ஏன் இந்த ஏமாற்றம்?

இன்று எம் மண்ணில் எல்லோருக்கும் ஒவ்வொரு தினங்கள் இருக்கின்றன. அந்தந்த தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. முதியோர் தினம், வெள்ளைப் பிரம்பு தினம், வலுவிழந்தோர் தினம் என சொல்லிக் கொண்டே செல்லலாம். அதற்காக இடம் ஒதுக்கப்பட்டு பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் என அழைக்கப்பட்டு அவர்களை உபசரித்து மேடையில் அமர வைத்து விழா ஆரம்பிக்கிறார்கள். வந்தோரை வரவேற்பது எமது கடமையும் கூட. விழா எடுக்கப்படும் முதியோர், வலுவிழந்தோர், சிறியவர் சபையில் அமர விடப்படுகிறார்கள். இது எந்த வகையில் நியாயம்?

விழாக்கள் கூடுதலாக நடைபெறும் போது மேடையில் உட்கார்ந்திருப்போருக்குச் சிற்றுண்டி வழக்கும் போது ஒரு தட்டில் அல்லது ஒரு சிறிய பெட்டியில் சிற்றுண்டிகள் வைத்து வழங்கப்படுகின்றன. அவர்கள் அதனை உண்ணும்போது சபையில் இருக்கும் சிறுவர்கள் தமக்கும் இவ்வாறு கிடைக்கும் என பார்த்திருக்கும் போது அவர்களுக்கு ஒரு துண்டு கேக், பிஸ்கட் வழங்கப்படுகிறது. அவர்கள் மனம் கவலையடையும். அவர்கள் ஏமாற்றம் அடைவார்கள். ஆனால் சில இடங்களில் மேடையில் இருக்கும் சிலர் மட்டும் தமக்கு வழங்கப்பட்ட சிற்றுண்டிகளைத் தவிர்த்து இருக்கிறார்கள். சபையில் இருப்போர் பார்க்கத் தாம் உண்ணக் கூடாது எனும் நோக்கில் இந்தத் தவிர்ப்பு இருக்கும். சபையில் இவர்கள் பார்த்திருக்க மேடையில் இருப்போருக்கு மட்டும் இவ்வாறு உபசாரம் செய்வது சரியானதா?


இனிவரும் காலத்தில் ஏதாவது விழா நடத்தும் போது அனைவருக்கும் ஒரே மாதிரியான சிற்றுண்டிகள் வழங்குவதற்கேற்றவாறு விழா ஒழுங்கமைப்பாளர்கள் முடிவுகளை எடுக்க வேண்டும். சிற்றுண்டி வழங்கும் போது மேடையில் இருப்போருக்கு வழங்கியபின் அப்படியே வந்து சபையில் இருப்போருக்கும் வழங்கிச் சென்றால் போதுமானதாகக் காணப்படும். அதனை விடுத்து அவர்களைக் கௌரவிக்கிறோம் என நினைத்து சபையில் இருக்கும் சிறுவர் மனங்களைப் புண்படுத்தாதீர்கள்.

பலர் நினைக்கலாம் விருந்தினர்களைக் கௌரவிக்கத்தானே நாம் இவ்வாறு செய்கிறோம் என்று. அது தவறானது. விருந்தினர்களை மாலை அணிவித்து அவர்களுக்குக் கௌரவம் கொடுக்கிறார்கள். அந்தக் கௌரவமே போதுமானது. மற்றவர்களை மாலை அணிவித்து கௌரவிக்கும்படி நான் கேட்கவில்லை. சபையில் இருக்கும் சிறுவர்களை வருத்தி விடாதீர்கள் எனக் கேட்கிறேன்.

அன்று கூட ஒரு விழாவில் மேடையில் இருக்கும் விருந்தினருக்கு கேக், றோள் கொடுக்கும் போது கீழே உள்ள சிறுவர்கள் கூறுகிறார்கள் ''கேக் வந்திட்டுது அடுத்து றோள்'' வரும் என்று. இவ்வாறு கூறியது மட்டுமன்றி ஆவலுடன் பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். அடுத்து வந்தது பிஸ்கட் மட்டுமே. எமக்கு றோள் வராதா என்று அச்சிறுவர்கள் கேட்ட போது அதற்கு என்ன பதிலளிப்பது என்று எவருக்கும் தெரியவில்லை. றோள் வரும் என எதிர்பார்த்த சிறுவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும் எனத் தான் எண்ணத் தோன்றியது. பொது இடங்களில் சிறார்களின் சின்னச் சின்ன ஆசைகள் நிறைவு செய்யப்படுமா? இனி இந்த நிலையை மாற்றுங்கள். சிறுவர்களை ஏமாற்றாதீர்கள்.

ஊர்ச்சிட்டு.

# உண்மையான துறவி



வாடகைக் காரில் பயணம் செய்கிற போது சாரதியுடன் பேசிக் கொண்டே போவது சிலரின் வழக்கம். அதற்கு மீதுள்ள அன்பு காரணம் என்பதைவிட அவர் தூங்கி விட்டால் என் கதி என்னாகும் என்கிற சுயநலமே முக்கியகாரணம்.

வடநாட்டுக்காரர், பணக்காரர் ஒருவர், வாடகைக் காரில் பயணம் செய்திருக்கிறார். வழியில் பார்த்தது கிடைத்தது எல்லாவற்றையும் வாங்கி வாங்கித் சாப்பிட்டவர் சாரதிக்கு எதையும் தரவில்லை. ஒரு மரியாதை நிமித்தம் 'சாப்பிடுங்கள்' என்று கூடச் சொல்லவில்லை.

சிலருக்கு இந்த பண்பே இருப்பதில்லை. எவ்வளவு கிடைத்தாலும் தானே அனுபவிப்பார்களே தவிர பிறருடன் பங்கிடமாட்டார்கள். ஒருமுறை ரயிலில் முதல் வகுப்பில் என்னுடன் பயணம் செய்ய ஏறிய அரச அதிகாரி ஒருவர் செய்த செயல் மறக்கவே முடியாதது. ஒரு பிஸ்கட் பொட்டலத்தைப் பிரித்துப் பாதி சாப்பிட்டவர் மீதியை மடித்து ஜன்னலுக்கு வெளியே நின்ற தமது கடைநிலை ஊழியரிடம் கொடுத்தார். ''வேண்டாம்யா எனக்கெதுக்கு'' என்று வாயால் மறுத்தடியே ஊழியர் இரு கை நீட்டி மரியாதையாகப் பெற்றுக் கொண்டார்.

அதிகாரி தொடர்ந்தார். ''இதைக் கொண்டு போய் ''எங்கள் வீட்டில் தகரப் பேணியில் போட்டு இறுக்கமாக மூடி வை. வந்து சாப்பிடுவேன்'' என்றார். கடைநிலை ஊழியர் முகத்தில் கோபம் ஏற்பட்டது. எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அந்த ஏழைக்குக் கொடுத்தால் என்ன? இவருக்கென்ன இலவசமாக வேறு கிடைக்காமலா போய்விடும். மகா கஞ்சன். பொருள் பசை உடையவர்கள் பொதுவாகப் பிறர் நன்மதிப்பை அடைய முடியாது. இவரைவிட, பிறர் பொருளுக்கு ஆசைப்படுபவர்கள் இன்னும் மோசமான பேர்வழிகள்.

மகாபாரதத்தில் ஓர் அருமையான காட்சி. அர்ஜுனனால் அவமதிக்கப்பட்ட பாஞ்சாலன் என்கிற அரசன் மோசமான யாகம் செய்ய விரும்பினான். அர்ஜுனனைத் தன்மீது ஏவித் தன்னை அடக்கிய அவமதித்த துரோணாச்சாரியாரை அவமதிக்க, கொல்ல, ஒரு மகனைத் தரும் சௌத்ராமணி என்கிற பகை வேள்வி செய்ய நினைத்தான் பாஞ்சாலன். உத்தம அந்தணர்கள் யாரும் யாகம் செய்ய வரவில்லை.

இறுதியில் யாஜன் என்கிற பிராமணரைக் கேட்டபோது அவர் யோசித்து ''என் சகோதரர் உபயாஜன் வருவார். போய் அழைத்துப் பார்'' என்றார். அவர் வருவார் என்பதற்கு யாஜன் சொன்ன காரணம் விசித்திரமானது. ''ஒருமுறை நாங்கள் யாகம் செய்ய ஓர் இல்லம் போயிருந்தோம். அங்கிருந்த சுவையாக பழத்தைப் பார்த்து ஆசைப்பட்ட உபயாஜர் அதனை எடுத்துச் சாப்பிட நினைத்தார். வாயில் எச்சில் ஊறியது. ''உடனே சீ..சீ.. இது இன்னொருவர் சொத்து. நான் ஆசைப்படக் கூடாது'' என்று கூறியபடி கீழே வைத்தார். எனவே அவர் கொஞ்சம் பொருளாசை உடையவர் என நினைக்கிறேன். அழைத்துப்பார்'' என்றார். தனக்குச் சம்பந்தம் இல்லாத பொருள் மீது ஆசை உள்ளவர்கள் எந்தத் தவறுகளுக்கும் துணிந்துவிடுவார்கள்.

அந்தக் பணத்தாசை பிடித்த அந்தணர் செய்த யாகத்தில் இருந்துதான் துரோணரைக் கொன்ற திருஷ்டத்துய்மன் மற்றும் அரச குலம் அழியக் காரணமான பாஞ்சாலி தோன்றினார்கள். பொருளாசை உள்ளவர்களால் உலகில் பல அழிவுகள் வரும். தருமம் தடுமாறும். இது உண்மை.

பகவான் ராமகிருஷ்ணரின் அண்ணன் ராம்குமார் பொருளாசை மிக்கவர். பொருளாசையால் மட்டுமே அவர் கோயில் பூசாரி ஆனார். பக்தி காரணமல்ல. அவரை உலகம் எப்போதோ மறந்துவிட்டது. ஆனால் இறுதி நாள்வரை பொருள்பற்று துளியும் அற்றவராக வாழ்ந்த பகவான் இராமகிருஷ்ணரை உலகம் இன்னும் மறக்கவே இல்லை. மதிக்கிறது.

குறைந்த பட்சம் துறவிகள், சந்நியாசிகள் பொருளாசை அற்றவர்களாக இருப்பது அவசியம். துறவிகளுக்குப் பொருள் ஆசை இருந்தால் ஞானம் சுடர் விடாது. அவர்கள் ஞானிகளே அல்லர். கவியரசர் தாகூர் சொன்ன ஒரு கதை சொல்கிறேன்.

ஒளி பொருந்திய அருளாளர் ஒருவர் குளக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். சித்து, மந்திர சித்தி, பலவிதமான ஆற்றல் உள்ளவர் அவர். அவரை எப்படியாவது மடக்கி அவரிடம் சீடராகிப் பல வித்தைகளை அவரிடம் கற்றுக் கொள்ள விரும்பினான் ஒரு பேராசை பிடித்த இளைஞன்.

துறவியைக் கவர என்ன செய்யலாம் என்று யோசித்து அவர் கண்மூடித் தவம் செய்யும்போது அவர் எதிரே இரண்டு விலை உயர்ந்த இரத்தினக்கற்களை வைத்துவிட்டு எதிரே காத்திருந்தான். தவம் முடிந்து கண்ணைத் திறந்த அவர் எதிரே இருந்த கற்களை ஆச்சரியமாகப் பார்த்தார். ஒன்றை எடுத்து உற்றுப் பார்த்துவிட்டுச் சிரித்தபடி கூழாங்கல்லை எறிவதுபோல் பளிச்சென்று எதிரே இருந்த குளத்துக்குள் எறிந்துவிட்டார்.

பதறிப்போன இளைஞன் ''என்ன காரியம் செய்தீர்கள்'' என்று அலறியபடி குளத்துக்குள் பாய்ந்து அதைத் தேட ஆரம்பித்தான். அங்கும் இங்கும் தண்ணீரில் மூழ்கி நெடுநேரம் பரபரப்பாகத் தேடினான். கிடைக்கவே இல்லை. பரிதாபமாக வெளியில் வந்து ''ஐயா அது விலை உயர்ந்த இரத்தினக்கல். அதைத் தண்ணீரில் எறிந்து விட்டீர்களே!'' என்று வருந்தினான்.

''அப்படியா?'' என்ற துறவி கீழிருந்த இரண்டாவது பெரிய வைரக்கல்லை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இளைஞன் பரிதாபமாக ''ஐயா அந்த இரத்தினக் கல்லைக் குளத்தில் எந்த இடத்தில் எறிந்தீர்கள்? காட்ட முடியுமா?'' என்று கேட்டான். அடுத்த விநாடி, ''அதோ... அந்த இடத்தில்தான்'' என்று சொல்லியபடி அதே இடத்தில் இரண்டாவது வைரக்கல்லையும் எறிந்தார். அவரல்லவா துறவி.

சுகி. சிவம்



கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு மிக அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகப் பங்கேற்ற தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி, பிரதேச சபை உறுப்பினர்களான ச.தங்கராசா, திருமதி இ.ஜானகி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

(எ–121)

# செய்திகளை கையால் எழுதி ஊர்களுக்குப் பரப்பி ஊடகத்துறையை வளர்த்தவர் பிரம்மஸ்ரீ சபேசசர்மா

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் சிவஸ்ரீ.சர்வேஸ்வரக்குருக்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

செய்திகளை கைகளினால் எழுதி அந்தத் துண்டுப்பிரசுரங்களை ஊர்களுக்குப் பரப்புவதன் மூலம் ஊடகத்துறையை வளர்ப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் மறைந்த பிரம்மஸ்ரீ ந.சபேசசர்மா என சுன்னாகம் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

சுருவிலைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ந.சபேசசர்மாவின் நினைவஞ்சலிக் கூட்டமும், மலர் வெளியீடும் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறவுண் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே ந.சர்வேஸ்வரக் குருக்கள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது:-

பத்திரிகைத் துறையில் மிகவும் ஆழம்மிக்கவராகச் செயற்பட்டவர் பிரம்மஸ்ரீ ந.சபேசசர்மா. 1960 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தனது சொந்த ஊரில் செய்திகளைப் பரிமாற்றம் செய்வதற்கு தனது நண்பர்களுடன் இணைந்து கைகளினால் செய்திகளை எழுதி அந்தத் துண்டுப் பிரசுரங்களை அயல் ஊர்களுக்கும் கொண்டு சென்று செய்திகளைப் பரிமாற்றம் செய்வதில் அரும்பாடுபட்டவர்.

அத்துடன் அச்சு இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு போதியளவு வசதிகள் காணப்படாத காரணத்தால் கையெழுத்துப் பிரதிகளான துண்டுப் பிரசுங்களை செய்தி ஆர்வலர்களிடம் சென்றடைவதற்கும் தனது நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தனது நண்பர்களின் உதவியுடன் ''தாரகை'' எனும் பெயருடன் துண்டுப்பிரசுரத்தை வாரம் ஒருமுறை வெளியீடு செய்தார்.

இவ்வாறு ஊடகத்துறைக்கு தன்னால் இயன்ற பணிகளைச் செய்வதுடன் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தொழிற்சாலை மூலம் வேலை வாய்ப்பை வழங்கி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது- என்றார்.

இந்த நிகழ்வில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள், இந்துமதக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள், கோப்பாய் சிவானந்த சர்மா ஆகியோர் நினைவுரைகளை வழங்கியதுடன் 'ருதுசோபனம்' எனும் சமஸ்கிருத நூல் வெளியீடும் இடம்பெற்றது. (எ-313)

# விவசாயிகள் பயன்படுத்தும் பசளைகளால் தான் புற்றுநோயாளரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்புக்குக் காரணம் விவசாயிகள் பயன்படுத்தும் பசளைகள், கிருமிநாசினிகள் போன்றவை ஆகும்.

இதற்கு விவசாயத்துறை சார்ந்தோர் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் பசளைகள், கிருமிநாசினிகளைத் தவிர்த்து, தரமான பசளை வகைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயக்குமாரன் எழுதிய ''நோய் நாடி நோய் முதல் நாடி'' எனும் நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:-

நோய் ஏற்பட்ட பின்னர் மருத்துவம் பார்ப்பது என்பது பயனற்ற ஒன்றாகும். எனவே நோய்வராமல் தடுப்பது எவ்வாறு என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். முக்கியமாக தொற்றுநோய்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். விஞ்ஞான ஆராய்ச்சிகளின் படி பரம்பரை நோய்களையும் குணப்படுத்த முடியும்.

எனவே விவசாயத்துறை சார்ந்தவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நோய்களைப் பரப்பக் கூடிய பசளை வகைகளைத் தடை செய்து சிறந்த பசளை வகைகளைஅறிமுகப்படுத்தவேண்டும்.

தொற்று நோய்கள், நோய்கள் தொடர்பான அறிகுறிகள் ஏற்படும் போது உடனடியாக மருத்துவரை நாடவேண்டும். இதன் மூலம் தான் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றார்.

(எ-313)

# நாட்டுக்கூத்து மற்றும் பாரம்பரிய பண்பாடு கொண்ட கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

## யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம்

நாட்டுக்கூத்து மற்றும் பாரம்பரிய பண்பாட்டு விடயங்களை முன்னெடுக்கும் கலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌவுந்தரநாயகம் தெரிவித்தார்.

யாழ். குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தினால் ஆளுமை வீடியோ திரைப்பட வெளியீட்டுவிழா கடந்த சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் யே.அமலசீலன் தலைமையில் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; நாட்டுக்கூத்து கலைகளுக்கு இருந்த மரியாதை தற்போது இல்லாமல் போய் விட்டது. அக்காலங்களில் இருந்த ரசனை மிகுந்த ரசிகர்களும், கலைஞர்களும் இக்காலங்களில் கிடைப்பதில்லை.

நாம் பல இரவுகளைத் தொலைத்து விட்டு இருக்கிறோம். அன்றைய காலங்களில் இரவில் நடைபெறும் கூத்துக்கள் விடியவிடிய இடம் பெறும்.கூத்தினை ஏராளமான ரசிகர்கள் பார்த்து மகிழ்வார்கள். இன்று அதற்கான தடயங்களே இல்லை எனலாம்.

இந்த நாட்டுக் கூத்துக்களின் மூலமாக எமது கலை, பண்பாடு ஆத்மீக கருத்துக்கள் என்பன வளர்ச்சியடைகின்றன. இப்பண்பாட்டுக் கலைகளைத் தொடர்ந்தும் நம் மண்ணில் வளர்க்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அருட்பணி ஆர்.சி.எக்ஸ் நேசராசா அடிகள், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இயக்குனர் கிறகரி கிறிஸ்தோப்பர், மன்றத்தின் உபசெயலாளர் செ.யூலன், கலாபூஷணம் வை.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் திரைப்படக் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. (எ-311)

# தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ.16

பாடசாலை மாணவர் மத்தியில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் பின்வருமாறு.

**சித்திரப் போட்டி**
கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் ந.குகதீஸ்- வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம், இரண்டாம் இடம் செ.சரவணன்- சிதம்பராக் கல்லூரி, மூன்றாம் இடம் சி.சந்தோஸ்- வல்வெட்டித்துறை அ.மி.த.க பாடசாலை.

**கவிதைப் போட்டி**
இடைநிலைப்பிரிவு

முதலாம் இடம் த.கிருத்திகா- வல்வை மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம் யோ.அபிராமி- சிதம்பராக் கல்லூரி, மூன்றாம் இடம் இ.சுபாசினி- வல்வை சிவகுரு வித்தியாசாலை

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம் க.கருணாரூபன்- சிதம்பராக்கல்லூரி, இரண்டாம் இடம் ஸ்ரீ.ஸ்ரீலக்சனா- தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் பி.லக்சியா- சிதம்பராக்கல்லூரி.

**முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் பொது அறிவுப் போட்டி**

முதலாம் இடம் பி.தர்சினி- வளர்மதி முன்பள்ளி தொண்டமானாறு, இரண்டாம் இடம் ம.சாலினி- கலைவாணி முன்பள்ளி தொண்டமானாறு, மூன்றாம் இடம் கே.வளர்நிதி- வளர்மதி முன்பள்ளி.

(எ)

# சைவ பரிபாலன சபையினரின் கட்டுரைப்போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**கட்டுரைப்போட்டி**
மேற்பிரிவு

முதலாம் இடம் வரதராஜா துவாரகன்- இணுவில் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் காயத்திரி ஜெயவதனன்-அருணோதயக் கல்லூரி, 3ஆம் இடம் கீதாஞ்சலி பன்னீர்ச்செல்வம்- கொடிகாமம் திருநாவுக்கரசு- மகாவித்தியாலயம்.

ஆறுதல்பரிசு:

லக்சிகா சின்னத்தம்பி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், துசானி பரமேஸ்வரன்- கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாவலர் குருபூசை நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளது.

மேலும் 2010 ஆம் ஆண்டு நடை பெற்ற அகில இலங்கை சைவ நெறித் தேர்வு, தமிழ் மொழித் தேர்வு ஆகியவற்றில் வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பதக்கங்களும் பத்துப் பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

(எ)

# நடுவீதியில் விளக்கீடு

கோப்பாய் சண்முகம்

கதையோரு செய்தி

கார்த்திகை விளக்கீடு என்றால் சும்மாவா. வீட்டு வாசல் தொடக்கம் கிணற்றடி, படலை, கோயில்தெரு வரைக்கும் தீபம் ஏற்றிக் கொண்டாடும் நாள் அல்லவா? இந்த நாளில் அனைத்து வீடுகளிலும் தீபம் ஏற்றி ஊரே ஒளிமயமாகப் பிரகாசமாகக் காட்சி கொடுக்கும் அல்லவா?

இந்தமுறை அந்தக் கார்த்திகை விளக்கீட்டை எத்தனை பேர் கொண்டாடினார்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது! ஏனெனில் எங்கள் கண்ணுக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு ஊரே கார்த்திகை தீபத் திருநாளைக் கொண்டாடுகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

எத்தனை வீடுகளில் நாளாந்தம் விளக்கு எரிக்க முடியாமல் இருள் சூழும் முதல் இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக் குள் உறங்குகிறார்கள் என்று தெரியுமா? தெரியாத படியால்தான், ஒருசிலர் மட்டும் விளக்கீட்டை ஆடம்பரமாகப் பொழுது போக்காக்கிக் கொண்டாடி இருக்கிறார்கள்.

அப்படியாப்பட்ட விளக்கீட்டை எங்கட பெடியள், பெட்டையள் இந்த முறை எப்படிக் கொண்டாடினார்கள் என்று சொல்கிறேன் கேளுங்கோ.

கடந்த 10 ஆம் திகதி கார்த்திகை விளக்கீடு. அன்று இரவுவேளை நானும் எனது நண்பனும் மோட்டார் சைக்கிளில் கே.கே.எஸ். வீதியால் அளவெட்டியில் இருக்கும் நண்பன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தோம். தூரத்தே நடு வீதியில் நெருப்பு எரிவது தெரிகிறது. ஏதோ ஒரு விபரீதம் நடக்கிறது என்று நினைத்துக் கொண்டு நெருங்கிச்சென்று கொண்டிருந்தோம்.

கே.கே.எஸ். வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீட்டு மதில்களில் சிட்டிகள் வைத்துத் தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வீட்டுப் படலையிலும் வாழைக் குத்தி நட்டு தீபம் ஏற்றப்பட்டிருந்தது. ஆனால் நடு வீதியில் தூரத்தே எரியும் நெருப்பைப் பார்க்கின்றபோது ஏதோ ஓர் அழிவு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் எண்ணத் தோன்றியது. அந்தளவுக்கு நெருப்புச் சுவாலை பொறி பறக்க எரிந்து கொண்டிருந்தது.

நாங்களும் அந்த நெருப்பின் பக்கம் செல்லும்போது அந்த நெருப்பு சுவாலை எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. கிட்ட நெருங்கியதும் அந்த நெருப்பு என்ன என்று பார்த்தால் லொறி ரயரில் நெருப்பைப் பற்ற வைத்து மோட்டார் சைக்கிளில் கட்டி இழுத்துக் கொண்டு ஒரு இளைஞர் கூட்டமே கூக்குரல் இட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தது.

என்ன விளையாட்டு இது என நினைத்துக் கொண்டு இந்த அபாயகரமான விளையாட்டுக்குள் நாங்கள் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான் என நினைத்துக் கொண்டு வீதியின் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். லொறி ரயர் நெருப்பு அந்த தார் றோட்டில் தேய்ந்து தீப்பறக்க எங்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்து.

எதிரே வருபவர்களுக்கு நெருப்புப் பட்டால் என்னவாகும் என்ற ஒரு சிந்தனையும் இல்லாமல் அந்த இளைஞர்கள் தங்கள் பாட்டில் மோட்டார் சைக்கிளில் பறந்தார்கள். சரி போய் விட்டார்கள் என்று மீண்டும் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அதே வீதியில் சென்று கொண்டிருந்தோம்.

வீதியின் அருகில் விளக்கை ஏற்றிக் கொண்டிருந்த யுவதிகள் புன்னகையுடன் அந்த இளைஞர்கள் சென்ற பக்கமே பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்களுக்கும் இது சந்தோஷமான விடயமாகத்தான் தெரிந்தது. சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்த இளைஞர்கள் அந்த நெருப்புச் சுவாலை வரும் லொறி ரயரை இழுத்துக் கொண்டு திரும்பி வருவதும் தெரிந்தது.

மோட்டார் சைக்கிளின் சைட் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே சென்றோம். அந்த இளைஞர்கள் நெருங்கி வந்து விட்டதும் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி அந்த இளைஞர்களுக்கு வழி விட்டோம். அதேலொறி ரயர் நெருப்பு வீதியில் தேய்ந்து தீப்பொறி பறக்க எங்களைத் தாண்டிச் சென்றது.

இதற்கிடையில் அந்த வீதியில் சைக்கிளில், மோட்டார் சைக்கிளில் வந்த பலர் ஒதுங்கி நின்று வழிவிட்டனர். மீண்டும் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அதே வீதி யில் சென்றுகொண்டிருந்தோம். அளவெட்டியில் இருக்கும் எனது நண்பன் வீட்டை அடைந்தோம். நாம் போனதுக்கான வேலை முடிய மாற்று பாதையூடாகத் திரும்பி வந்து சேர்ந்தோம்.

பார்த்தியளா இந்த இளைஞர்களை. சுயபுத்தி இல்லாமல் இருக்கின்றார்கள். லொறி ரயரில் நெருப்பைப் பற்ற வைத்து அந்த இடம் எல்லாம் மோட்டார் சைக்கிளில் கட்டி இழுத்துக் கொண்டு திரிகிறார்கள். இதனால் ஏதாவது ஆபத்து நேர்ந்தி ருந்தால் என்னவாகும் என்று நினைத் தார்களா? கார்த்திகைத் தீபத் திருநாள் என்றால் என்னவென்றே இவர்களுக் குத் தெரியாமல் போய்விட்டது.

அந்த வீதியில் அந்தவேளை சென்ற எத்தனை பேரின் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டிருக்கும் என்று இவர்கள் நினைத்தார்களா? கார்த்திகை தீபத் திருநாளில் தமிழர்களுக்கு ஒரு விடிவு காலம் பிறக்காதா என்று நினைத்து விளக்கேற்ற வேண்டும். அதைவிட்டு விட்டு பொழுது போக்குக்காக ஊரையே மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கும் வகையில் கார்த்திகை விளக்கீட்டை கொண்டாடினால் எப்படி தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும்?

போர் இடம்பெற்று பல அழிவுகளைச் சந்தித்த மண் இது. எத்தனை குடும்பங்கள் இந்தப் போரில் இருந்து மீளமுடியாமல் உள்ளனர். தமது அன்றாட வாழ்வையே நகர்த்த முடியாமல் உள்ளனர். இப்படியாக, தமிழ் மக்கள் கஷ்ரப்படும்போது கொஞ்சமும் சிந்திக்காமல் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்களை அவர்களின் பெற்றோர்கள், திருத்தி எடுப்பார்களா?

வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமிழ்ப் பண்பாட்டு விழாக்களை நடத்த முடியாமல் தவிக்கின்றனர். அந்த மக்களின் துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளாமல் எல்லோரும் தங்கள் பாட் டில் ஆகாயத்தில் வீடு கட்டுவதற்காக ஓடிக் கொண்டிருக்கிறோம். இவர்களில் இந்த இளைஞர்கள் என்ன விதி விலக்கா? அவர்களும் தங்கள் பாட்டில் தமது புத்திக்கு எட்டியபடி ஏதோ செய்து தொலைக்கிறார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். போரில் பாதிக்கப்பட்டு கஷ்ரப்படும் தமிழ் மக்களின் வீடுகளில் விளக்கை ஏற்ற வேண்டும். அப்போதுதான் எமது வீடுகளில் ஏற்றும் கார்த்திகை விளக் கீட்டின் பிரகாசம் தெரியும். ✱




யாழ்ப்பாணத்திற்கு
குளிர்மையை வழங்கிய
அன்றைய நம்பிக்கை இன்றும்...
SISIL WORLD
புதிய காட்சியறை இன்று 16 ஆம் திகதி சுபவேளையில்
யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படும்.
Prestige
Media Vision
SISIL WORLD
SAMSUNG PHILIPS TCL Skyworth Whirlpool Prestige Moulinex TEFAL
ASUS KENWOOD unic Rowenta Welling KRUPS YAMAHA
www.sisilworld.com
106, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021-2219291

# பிரசித்தமான அம்மன் ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயம்

சைவ சமயத்தின் பெருமையையும், தமிழ்ப் பாரம்பரியத்தின் தாற்ப்பரியத்தையும் எடுத்துக் கூறுவதற்கு யாழ். மாவட்டத்தின் தொன்மைச் சான்றுகளாக விளங்குபவை இந்து ஆலயங்கள் ஆகும்.


யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிவன் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள், பிள்ளையார் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள் எனப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் காணப்படுகின்றன.

அந்த வகையில் அம்மன் ஆலயங்களில் மிகவும் பிரசித்தமான ஆலயங்களாகத் திகழ்பவை நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயம் என்பன தேவி வழிபாட்டுக்கு பிரசித்தமான ஆலயங்களாகத் திகழ்கின்றன.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் கடற்கரைப் பிரதேசத்திலும், சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயம் குடிமனைப் பிரதேசத்திலும் காணப்படுவது ஓர் தனிச் சிறப்பாகும்.

யாழ்ப்பாண நகரில் இருந்து ஏறத்தாழ ஏழு மைல் தூரத்தில் காரைநகர் வீதியில் சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியில் இருந்து சுமார் 50 யார் தூரத்தில் அமைந்துள்ளதே சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயமாகும்.

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இந்த ஆலயம் சண்டிலிப்பாய் ''சீரணி நாகபூசணி அம்மன்'' எனும் பெயருடன் அழைக்கப்பட்டு வருகிறது.



இந்த ஆலயம் அமைக்கப்பட்டமைக்கு தனிச் சிறப்பான ஓர் வரலாற்றுக்கதை உண்டு.

அந்தக் காலத்தில் சண்டிலிப்பாய் சீரணிப் பகுதியில் சாஸ்திரியார் சண்முகம் பொன்னம்பலம் என்பவர் வசித்து வந்தார். இவர் ஓர் இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்தி சாஸ்திரம் சொல்லும் திறன்கொண்டவர் என்பதால் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பிரசித்தமான சாஸ்திரியார் எனும் புகழுடன் திகழ்ந்து வந்தார்.

இதேவேளை இவர் வாழ்ந்த காலப் பகுதியில் இராமுத்தர் என்பவரும் இவருடன் வசித்து வந்தார். சாஸ்திரியார் சண்முகம் பொன்னம்பலம் சாஸ்திரம் சொல்வதில் திறன் கொண்டவராக இருந்தாலும் தான் பயன்படுத்திய இயந்திரத்துக்கு உரிய பூசை வழிபாடுகளைச் செய்வது கிடையாது.

இதன் காரணமாக அவரது வீட்டில் சில தீய சகுனங்கள் இடம்பெறத் தொடங்கின. அவர் பயன்படுத்திய இயந்திரத்தில் இருந்து இரவுப் பொழுதுகளில் கலகலப்பான பேரொலி கேட்கத் தொடங்கியது. இதனால் சாஸ்திரியார் சண்முகம் பொன்னம்பலத்துடன் இருந்த இராமுத்தர் அந்த இயந்திரத்தை வெளியகற்ற வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு நாள் இராமுத்தர் நன்றாக மதுபானம் அருந்திவிட்டு அந்த இயந்திரத்தையும் அதனுடன் இருந்த ஏனைய பொருள்களையும் பெட்டியுடன் எடுத்துச் சென்று வீட்டுக்கு அருகில் இருந்த ஓர் அலரிப் பூமரப் பற்றைக்குள் போட்டுவிட்டு சென்றுவிட்டார்.

சாஸ்திரி வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்று முடிந்தவுடன் நாகபூசணி அம்பாள் சீரணியைச் சேர்ந்த பக்தர்கள் பலரினது கனவில் தோன்றி ''நான் நயினை நாகபூசணி; என்னை ஆதரியுங்கள்'' என்று கூறினார்.

எனினும் பக்தர்கள் குழப்பம் அடைந்தார்கள். ''நாங்கள் அனைவரும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எப்படித் தாயே உன்னை நாம் ஆதரிக்க முடியும்'' என்று தாயிடமே முறையிட்டார்கள்.

நாகபூசணி அம்பாள் பக்தர்களை விடுவதாக இல்லை. என்னை ஆதரியுங்கள். பல தொண்டர்கள் ஒன்று கூடுவார்கள் அத்துடன் நாட்டில் செல்வம் செழிக்கும் பக்தர்களுக்கு பலன் கிடைக்கும், என்று வாக்குறுதி கொடுத்தார்.

அந்தக் காலப் பகுதியில் வேளாங்குலத்தைச் சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணிப் பிரதேசத்தில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார்.

உடையாரது பரம்பரையைச் சேர்ந்த இராமன் அவருடைய மகன் முருகேசு ஆகியோரும் முத்தர் இனசன வழியில் பெரியசாஸ்திரியார் தெய்வானைப் பிள்ளை, அன்னப்பிள்ளை, மயில்வாகனம் நன்னிப் பிள்ளை, பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் ஆகியோரும் வாழ்ந்து வந்தனர்.

இதன்போது பக்தரான முருகேசுப் பிள்ளையின் கனவில் தோன்றி ''குறிப்பிட்ட இடத்தில் என்னை ஸ்தாபித்து வழிபடவும்'' என்று நாகபூசணி அம்மன் கூறி மறைந்தார்.

**சோபனா**

முருகேசுப்பிள்ளை தனது வறுமை நிலையைக் கருத்தில் கொண்டு அதனை வெளியில் யாரிடமும் சொல்லாது தமக்குள்ளே அம்மையை வழிபட்டு வந்தார்.

1896 ஆம் ஆண்டு சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தன்று இரவு எம் பெருமாட்டி அருள்வள்ளல் ஆகிய பெருமாளோடும் பாலசுப்பிரமணியத் தோடும் சோமஸ்கந்த மூர்த்தி வடிவில் தோன்றி முருகேசப் பிள்ளையின் கனவில் தோன்றினாள்.

(தொடரும்)




**அர்ச்சனா அக்கடமி**

**கைவழி அச்சுக்கலைப் பயிற்சி நெறி**

சாரி, சுடிதார், ரீசேட் போன்ற அனைத்து துணிகளிலும், 28 விதங்களில் வெவ்வேறு வர்ணங்கள், டிஷைன்களில் எளிய முறையில் பிரின்ரிங் செய்யக்கூடிய 2 நாள் பயிற்சி நெறி மீண்டும் யாழ்ப்பாணத்தில் சிதானந்தா அக்கடமியால் நடத்தப்படவுள்ளது.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**இடம்** : சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அலுவலக மண்டபம் (யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

**காலம்:** டிசெம்பர் 17,18 ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு)

**முற்பதிவு** : டிசெம்பர் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

0775132255, 0719062847



## மரண அறிவித்தல்

### திருமதி இளைய தம்பி இராஜேஸ்வரி



இராசவீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராஜேஸ்வரி நேற்று(14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் இளையதம்பியின் அன்பு மனைவியும் தர்மசீலனின் (சுவிஸ்) அன்புத் தாயும் தர்சினியின் (சுவிஸ்) அன்பு மாமியும் சர்மிஷா, மதுமிஷா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், செல்வபாக்கியம், இராசமுத்து, பத்மாவதி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீறங்கநாதன் சிவகுமாரியின் (பிரானஸ்) பெரிய தாயும் சுஜீபன், சுணந்தன், சுபர்ணன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (1.12.2011) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
அச்சுவேலி.

தகவல்:
க.சிவகுரு (மைத்துனர்).

(11686)(3-6-9)

# மக்களின் தலையில் துப்பாக்கியை வைத்தே அரசு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு,டிசெ.16

முறையாக ஒரு திட்டத்தை ஒரு அரசு நடைமுறைப்படுத்துமானால் அதற்கு மக்கள் ஆதரவு வழங்குவர். ஆனால் தற்போதைய அரசு தலைகளில் துப்பாக்கியை வைத்தே தமது திட்டங்களை நிறைவேற்றுகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் புதன்கிழமை குற்றஞ் சாட்டியுள்ளார்.

மரக்கறி மற்றும் பழங்களை பிளாஸ்டிக் கூடைகளில் கொண்டு செல்ல வேண்டும் என்ற அரசின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் புறக்கோட்டை சந்தை வர்த்தகர்களை நேரில் சென்று சந்தித்த பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகளைச் சரிசெய்வதை விடுத்து அரசு விவசாயிகளின் பணத்தைச் சுரண்ட ஆரம்பித்துள்ளது.



அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முனையும் அடிமட்ட விவசாயிகளைக் அரசு குறிவைக்கிறதே தவிர உயர்மட்டத்தில் ஊழல் செய்பவர்களைக் கண்டும் காணாமல் இருப்பதுபோல் நடந்து கொள்கிறது.

அரசின் இந்தச் செயற்பாட்டால் மக்கள் பெரும் அதிருப்தியில் உள்ளனர் - என்றார். (ச)

# மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு; பல்வேறு விலைகளில் விற்பனை

கொழும்பு,டிசெ.16

நாட்டின் பல பகுதிகளிலும் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் புதிய சட்டத்தினால் மரக்கறி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி மற்றும் பழ வகைகளைப் போக்குவரத்து செய்யும் போது பிளாஸ்ரிக் கூடைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட சட்டம் காரணமாக மரக்கறி, பழ வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக ஒவ்வொரு பிரதேசத்திலும் மரக்கறி வகைகள் மற்றும் பழங்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மரக்கறி வகைகளைப் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலினால் இவ்வாறு தட்டுப்பாடு நிலவுவதுடன், மரக்கறி வகைகளின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தும் புதிய சட்டம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதனால் மீண்டும் மரக்கறி விலைகள் குறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கந்தளாய் கடனட்டை இயந்திரத்தில் திருடப்பட்ட பணம் முழுவதும் மீட்பு

திருகோணமலை,டிசெ.16

திருகோணமலை - கந்தளாய் இலங்கை வங்கி கடனட்டை இயந்திரத்தை உடைத்து அண்மையில் திருடப்பட்ட பணம் முழுவதும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரை மீட்கப்படாதிருந்த 2,129,400 ரூபா நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டதாக கந்தளாய் வலய பொலிஸ் அதிகாரி நீல் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

திருடப்பட்ட பணத்தில் 40 லட்சம் ரூபா ஏற்கனவே மீட்கப்பட்டதாக அவர் கூறினார்.

மக்கள் வங்கி கந்தளாய் கிளையில் கடனட்டை இயந்திரம் உடைக்கப்பட்டு கடந்த 9 ஆம் திகதி பணம் திருடப்பட்டிருந்ததுடன், அதனோடு தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

**தவறிவிட்டது**

ஞானசீலன் டெரிக் டஜன் எனது தேசிய அடையாள அட்டை (883652398V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், வங்கிஅட்டை என்பன நல்லூர் பின் வீதியிலிருந்து கோயில் வீதியிலுள்ள குழந்தை இயேசு கோயிலுக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் கீழ்க்காணும் T.P. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.0775461151, 0217902406,
முகவரி: 22/2, பாரதி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

# லொறியில் 22 மாடுகளைக் கடத்திய நால்வர் கைது

கொழும்பு, டிசெ.16

சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்கென அறுக்க கடத்திச் செல்லப் பட்ட 22 மாடுகள் புத்தளம் - அநுராத புரம் பிரதான வீதியின் 9ஆம் கட்டைப் பகுதியில் வைத்து காப்பாற்றப்பட்டுள்ளன. விசேட அதிரடிப்படை அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இந்த மாடுகளை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மாடுகளைக் கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட லொறியுடன் சேர்த்து நான்கு சந்தேகநபர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நொச்சியாகம மற்றும் மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.சந்தேகநபர்கள் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (ச)

**மோட்சதீப அழைப்பு**



மண்ணில் 30.06.1945

விண்ணில் 02.12.2011

**அமரர் முத்தையா மகேஸ்வரன்**

கடந்த (02.12.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் மோட்ச தீபக் கிரியைகள் நாளை (17.12.2011) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று மோட்ச தீபம் ஏழாலை கிழக்கு ஞானவைரவர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இக் கிரியைகளில் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நாமுவந்தளிக்கும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

களபாவோடை, ஏழாலை. (11695)(2-6-9) - குடும்பத்தினர்.

# மாணவருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை வாபஸ்

## சஞ்சீவ பண்டார தகவல்

கொழும்பு,டிசெ.16

எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை உத்தரவு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

கொழும்பு பல் கலைக்கழகத்தில் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மாணவர்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

விடுதி வசதி, நூலக வசதி போன்றவற்றுக்காக குரல் கொடுத்த மூன்று மாணவர்களின் வகுப்பு தடை செய்யப்பட்டது.

மாணவர்களின் வகுப்புத் தடை உத்தரவை ரத்துச் செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை துணைவேந்தர் நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பட்டத்தினால் நிர்வாகம் இந்த மாணவர்களின் வகுப்புத் தடை உத்தரவினை வாபஸ் பெற்றுக் கொண்டது. அரசின் அரசியல் தேவைகளை முன்னிலைப்படுத்தி கொழும்பு பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களுக்கு எதிராக செயற்படுகின்றது- என்றார் (ச)

**கண்ணீர் அஞ்சலி**

எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர்
அ.ஞானப்பழம் அவர்களின் அன்புத் தந்தை
**வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்**
(ஓய்வு பெற்ற உப அதிபர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(c/6535) (10,6,9)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
➤ GRADE 10 & 11 இற்கான ICT
➤ A/L இற்கான GIT & IT
சிறுவர்களுக்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Stage - 4 (Gr - 8 to 9)
Stage - 3 (Gr - 6 to 7)
Stage - 2 (Gr - 4 to 5)
Stage - 1 (Gr - 1 to 3)
Date :- 17-12-2011
Time :- 09.00 Am
பதிவுகளுக்கு முந்துங்கள்.
மேலதிக விபரங்களுக்கு
021-2219282
077-6621745



BIT CORNER Professional ICT Education
No-14, Palaly Road, Thirunelvely Juncion, Jaffna.

# முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடி வரை உயர்த்த வேண்டும்

## தமிழக அரசால் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, டிசெ.16

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்தும் வகையில் எதிர்காலத்தில் அணையைப் பலப்படுத்த தமிழக சிறப்பு சட்டமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையில் தமிழ் நாட்டுக்கு உள்ள உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் அந்தத் தீர்மானத்தில் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை நீரை 120 அடியாகக் குறைக்க கேரள சட்டப்பேரவையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அணையில் 152 அடிக்கு நீரைத் தேக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தீர்மானம் கொண்டு வந்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

இந்த அணை விவ்காரம் குறித்து ஆலோசனை நடத்த நேற்று சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டது. முற்பகல் 11 மணிக்கு சபை கூடியதும் மறைந்த அமைச்சர்



கருப்பசாமி, எம்.எல்.ஏக்களுக்கு அஞ்சலி செலுத்தி 15 நிமிடங்கள் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

சபை மீண்டும் கூடியவுடன் முதல்வர் ஜெயலலிதா முல்லைப் பெரியாறு விவகாரம் தொடர்பாக சிறப்புத் தீர்மானத்தை தாக்கல் செய்தார்.

அதில், முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்துக்கு உள்ள உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. அணையில் 142 அடி நீரைத்தேக்க கேரள பாசன சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். நீர்மட்ட அளவை 152 அடி வரை உயர்த்தலாம் என்று உச்ச நீதிமன்றம் அமைத்த நிபுணர் குழு கூறியுள்ளது.

தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராம நாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் முப்போகம் விளைய அணை நீரை 152 அடியாக உயர்த்த முடிவு செய்துள்ளோம். இதற்கு கேரளம் தடையாக இருக்கக் கூடாது, தமிழகத்துக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

அணைப் பகுதியில் பெரும் பீதியும் அச்சமும் நிலவுவதால், அங்கு மத்திய பாதுகாப்புப் படையை நிறுத்த வேண்டும் என்று சிறப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மீது அனைத்துக் கட்சி சட்ட பேரவை உறுப்பினர்களும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். இதையடுத்து இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர் இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (வ)

# கடல் அட்டைகளைக் கடத்த முயன்றவர்கள் கைது

பெங்களூர், டிசெ.16

கடல் அட்டைகளை சிங்கப்பூருக்குக் கடத்த முயன்றதாக தந்தை, மகன் ஆகிய இருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

முகம்மது ரபீக் முகைதீன் என்பவர் இலங்கையைச் சேர்ந்தவர். இவரது மகன் முகம்மது ரபீக். இவர்கள் இருவரும் கடல் அட்டைக ளைக் கடத்துவதாக பெங்க ளூர் கஸ்டம்ஸ் அதிகாரிக ளுக்குத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையில் மேற்கண்ட இருவரும் சிங்கப்பூருக் குக் கடத்தப்பட இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மொத்த எடை 152 கிலோவாகும். சர்வதேச மதிப்பில் இதன் மதிப்பு 30 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பெங்களூர் சர்வதேச விமான நிலையத்தில் இவ்வளவு அதிக மதிப்புள்ள கடத்தல் பொருள் பிடிபடுவது இதுவே முதல்முறையாகும்.(வ)

# கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் புத்தகம் அமெரிக்காவில் ஏலம்

இந்தியாவின் பிரபலமான பழம்பெரும் தேசிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய குறிப்புப் புத்தகம் ரூ.92 லட்சத்துக்கு (இந்திய ரூபா) ஏலம் விடப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய கீதத்தை எழுதியவரும், நோபல் பரிசு பெற்ற வங்காளக் கவிஞருமான ரவீந்திரநாத் தாகூர் கடந்த 1928 ஆம் ஆண்டில் குறிப்புப் புத்தகம் ஒன்று எழுதியுள்ளார்.

இந்தக் குறிப்புப் புத்தகத்தை ரவீந்திரநாத் தாகூர் தனது குடும்ப நண்பர் ஒருவருக்கு கடந்த 1930 ஆம் ஆண்டில் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். அதில் 12 இலக்கியக் கவிதைகளையும், ஏராளமான வங்காள மொழி பாடல்களையும் எழுதியிருக்கிறார்.

மேலும் சித் ரங்காடா என்ற நாட்டிய நாடகத்தில் இடம் பெற்ற பாடல்களும் அதில் எழுதப்பட்டுள்ளன.

இந்த அரிய் பொக்கிஷம் அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள சோத்பை மையத்தில் நேற்றுமுன்தினம் ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது.

இந்த குறிப்புப் புத்தகம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் முதல் 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை ஏலம் போகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இறுதியில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. அதாவது இந்திய மதிப்பில் சுமார் 92 லட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# மணிப்பூரில் குண்டு வெடிப்பு 6 பேர் காயம்

இக்பால், டிசெ.16

இந்திய மாநிலமான மணிப்பூர் தலைநகர் இம்பாலில் நேற்று பிற்பகல் குண்டு வெடித்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் தலைநகர் இம்பாலில் உள்ள பொது பணித்துறை அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் நேற்று பிற்பகல்1.35 மணியளவில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் 6 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்களை இம்பாலில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து தலைநகர் இம்பாலில் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, பொது மக்களிடையே பதட்டமும் ஏற்பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (வ)

# கள்ளச் சாராயம் அருந்தியோரின் உயிரிழப்பு 117 ஆக அதிகரிப்பு

கொல்கத்தா, டிசெ.16

மகாரஷ்டிரா மாநிலத்தில் கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 117 ஆக அதிகரித்துள்ளது. 500 இற்கும் மேற்பட்டவர்கள் சாராயம் அருந்தியதாகக் கூறப்படுவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

மேற்கு வங்காள மாநிலம் தெற்கு பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள சங்கராம்புர் உள்ளிட்ட 10 கிராமங்களை சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியில் உள்ள ஒரு மதுக்கடையில் நேற்று முன்தினம் இரவு மது அருந்தியுள்ளனர். இதில் அதிகமானோருக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சாராயம் குடித்த பலரும் ஆங்காங்கே மயங்கி விழுந்து உயிரிழந்த பின்பே அவர்கள் குடித்தது நஞ்சு கலந்த சாராயம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. (வ)

# சிதம்பரம் பதவி விலக வேண்டும் பா.ஜ., அ.தி.மு.க. வலியுறுத்தல்

2ஜி முறைகேட்டில் தொடர்புள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் பதவி விலக வேண்டும் என்று பாரதிய ஜனதா, அதன் கூட்டணிக் கட்சிகள் மற்றும் அ.தி.மு.க. வலியுறுத்தி வருகின்றன. நேற்றுமுன்தினம் மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது, பதில் அளிக்க சிதம்பரம் எழுந்த போதெல்லாம் பாரதிய ஜனதா, அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து, சிதம்பரம் பதவி விலக வேண்டும் என்று கூச்சல் போட்டனர்.

கடந்த மாதம் ஹரித்வாரில் நெரிசலில் சிக்கி பக்தர்கள் பலியான சம்பவம் குறித்த கேள்விக்கு சிதம்பரம் பதிலளித்தார். அப்போது பா.ஜ. கட்சி உறுப்பினர் பானி எழுந்து அவையின் மையப் பகுதிக்குச் சென்று கோஷமிட்டார். ஆனால் கூச்சலுக்கு சளைக்காமல் சிதம்பரம் கேள்விகளுக்குப் பதிலளித்தார். (வ)



இந்தியாவுக்கு வருகைதந்திருந்த மியன்மார் நாட்டு நாடா ளுமன்ற கீழ்சபை சபாநாயகர் தூரா-யு-ஷெவே இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீலை டில்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனில் சந்தித்துப் பேசினார்.

# கல்பாக்கம் அணு நிலையத்துக்கு ஈ மெயிலில் வெடிகுண்டு மிரட்டல்

சென்னை,டிசெ.16

கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு ஈ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்கு ஈமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மர்ம் தகவலில் அணுமின் நிலையத்தில் நேற்று (இன்று) அல்லது இன்று குண்டு வெடித்துச் சிதறும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவல் அறிந்த பொலிஸார், வெடிகுண்டு நிபுணர்களுடன் அங்கு விரைந்து வந்தனர். வெடிகுண்டு எதுவும் இருக்கிறதா என்று அங்கு சோதனை நடத்தப்பட்டு வருகிறது. (வ)

# தமிழர்கள் மூவரின் உயிரை காக்க கையெழுத்து வேட்டை

## தமிழகத்தில் ஆரம்பம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் கையெழுத்து வேட்டையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் பழ.நெடுமாறன் முதல் கையெழுத்தை இட்டு ஆரம்பித்து வைத்தார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தண்டனையை ரத்து செய்யக்கோரி எண்ணற்ற தமிழ்ஆர்வலர்கள் பல கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்தி மனித உரிமை இயக்கங்களின் தேசிய கூட்டமைப்பு சார்பில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ)

# ஓராண்டு நினைவஞ்சலியும் திவச அழைப்பும்



தோற்றம்:26.04.1948
மறைவு:26.12.2010

கடந்த 26.12.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர்

## அமரர் வல்லிபுரம் அன்னலிங்கம்

அவர்களின் ஓராண்டு நிறைவை யொட்டி நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.12.2011) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

23,பழம் வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

(11697)(3,6,7)

---

HANDICAP INTERNATIONAL

# Vacancy announcement

**Sports Club Liaison Officer and School Liaison Officer, Inclusive Sport**

We are looking to recruit a **Sports Club Liaison Officer – Inclusive Sport** and **School Liaison Officer – Inclusive Sport** to work in a small, dynamic team of staff in Handicap International's Sport For All Project, funded by the EU. This innovative project aims to improve access to sport and leisure for children and youth with disabilities, by working with mainstream schools, sports clubs and NGOs. The target area for the project is Vavuniya District.

**Position No-01: Sports Club Liaison Officer**

The specific objectives of Sports Club Liaison Officer are

- To develop the awareness of sports clubs and local authorities of the importance of inclusion for children and youth with disabilities
- To assist sports clubs to develop and deliver inclusive sport and leisure activities.

Knowledge and skills

- Certificate, diploma or degree in sport, physical education, coaching or a related field
- Prior work experience in the field of sports and leisure is preferred, ideally with children/youth with disabilities
- Experience of belonging to or working with sports clubs.

**Position No-02: School Liaison Officer**

The specific objectives of School Liaison Officer are

- To develop the awareness of teachers, schoolchildren and parents of the importance of inclusion for children and youth with disabilities
- To assist schools and teachers to develop and deliver inclusive sport and leisure activities.

Knowledge and skills

- Diploma or degree in education, physical education, or a related field
- Prior work experience in the field of sports and leisure is preferred, ideally with children/youth with disabilities
- Knowledge and experience in training and pedagogy including training needs assessment, curriculum development, training delivery and evaluation.

**Qualities applicable for both positions are as follows:**

- Good writing and interpersonal communication skills, including a reasonable level of spoken and written English
- Intermediate computer skills in Word, Excel and PowerPoint
- The candidate is expected to be physically fit, and willing and able to actively participate in sport and games.
- Ability to travel around Vavuniya District by motorbike, including rural areas.
- A passion for sport and an ability to enthuse and inspire others.
- Fluency in Tamil language is required. Knowledge of Sinhala is an advantage.
- Due to the nature of sport training and events, ability to work evenings and weekends is desirable

**One year renewable employee contract**

**Handicap International is an equal opportunities employer and welcomes applications from persons with disabilities and women**

Interested candidates should forward their complete resumé and a motivation letter with contact details to reach us before December 23rd. HI contact details are below. Only successful candidates will be contacted.

Administrator
Handicap International
No. 25, 5th Lane
Vairavapuliyankulam, Vavuniya
Email: adminnorth@handicap-international-sl.org

(c/6905)

---

## அகில இலங்கை திருமுறை மன்றத்தால் திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நன்மை கருதி மாதந்தோறும் நடத்தும் பன்னிரு திருமுறை முற்றோதலில் எட்டாம் திருமுறை முற்றோதல் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை நிறைவு பெற்று செய்து அன்று காலை 8 மணியளவில் நாயன்மார் நால் வர் அழகிய சுந்தர முத்துப்பல்லக்கில் எழுந்தருளி வீதி உலாவாக நீர்வேலி அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தை சென்றடைவர்.

ஒன்பதாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி, தொடர்ந்து தினமும் காலைப் பூசையுடன் முற்றோதல் நடைபெறும்.

(வ)

## வீதி சேதத்தால் அவலம்

யாழ்ப்பாணம், டிசெ.16

வட்டுத் தெற்கு பேச்சியம்பாள் ஆலய நாவலடி வீதி, மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் வீதியால் பயணிப்போர் அடிக்கடி விபத்துக்குள்ளாக வேண்டியுள்ளது.

வட்டுத் தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இந்த வீதி சுமார் இரண்டாயிரம் அடி வரையான நீளத்தைக் கொண்டதாகும்.

இந்த வீதியினைப் புனரமைப்புச் செய்யுமாறு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர், வலி.மேற்கு சங்கானை உதவி ஆணையாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பப்பட்ட போதும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் குற்றஞ் சாட்டினர்.

ஆலயத்துக்குச் செல்லும் பொது மக்கள் குறிப்பாக இந்த வீதியைப் பயன்படுத்துவதால் வெள்ள வீதியாகக் காணப்படும் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-313)

---

# மரண அறிவித்தல்

## சிவசம்பு ராஜசுந்தரம்

(முன்னாள் படவரைஞர். இலங்கை நீர்ப்பாசன திணைக்களம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் தற்சமயம் கனடாவில் வசித்து வந்தவருமாகிய சிவசம்பு ராஜசுந்தரம் 10.12.2011 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய மலேசியன் பெஞ்சனியர் சிவசம்பு - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய சாவகச்சேரியைச் சேர்ந்த நமசிவாயம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரமேஸ், பிரகாஸ், ஆகியோரின் அன்புத் தந்தையும் ஷாமினி, அனுராதை, ஆகியோரின் மாமாவும் கனகசபை, சோமசுந்தரம், அன்னபூரணம், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் பாலசுந்தரம், ஞானசுந்தரம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கனகசுந்தரம், ஜெயசுந்தரம், மீராவதி, சிவசுந்தரம், பிறேமாவதி ஆகியோரின் அருமைச் சகோதரனும் அஞ்சலி, அஞ்சனா, அபிராமி, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2011 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.ஞானசுந்ரம்(சகோதரர்),
க.பிறேமாவதி(சகோதரி) ,
கொழும்பு.

தகவல்:
சி.பாலசுந்தரம்,
பொற்பதி வீதி, கொக்குவில்.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் முத்தர்கந்தர் கனகரெத்தினம்

(நயினாதீவு)

(உரிமையாளர், தேவா ஸ்ரோர்ஸ், கொழும்பு
R.F. பெர்னாண்டோ, கொழும்பு,
சோபிகா ஹோட்டல், யாழ்ப்பாணம்)

அன்னையின் மடியில் 25.10.1918
ஆண்டவன் அடியில் 16.11.2011

கடந்த 16.11.2011 அன்று எமது குடும்பத்தலைவர் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவிகள் பலபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசிஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், மலர் வளையம்சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 16.12.2011 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம். இறைவனடி சேர்ந்த அவரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்.

பிள்ளைகள்.

198/10, திருவள்ளுவர் சாலை,
அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222-8793,
0779604095,0778473311.

---

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் செல்லத்துரை குகநாதன் (துவம்)

தோற்றம்
04.04.1944

மறைவு
10.12.2006

திதி: 16.12.2011

*அன்பு, பண்பு, பாசம் என்றால் என்ன என்பதை*
*தவம் என்றா சிரிப்பில் அடக்கி வாழ்த்தீர்கள் - அப்பா*
*எம்மை பக்குவமாய் வளர்த்தெடுத்து பேசும்*
*தெய்வமாய் வாழ்ந்தீர்கள் - அப்பா*
*அம்மாளின் பொற் பாதம் அடைந்து*
*ஐந்து ஆண்டுகள் ஆனதோ - அப்பா*
*என்றும் உங்கள் நினைவுடன்.*

108, அரசடி வீதி,
கந்தர்மடம்.

மனைவி
பிள்ளைகள்.

(11699)(3.6.9)

# அமெரிக்கப் படைகள் நேற்று ஈராக்கிலிருந்து வெளியேற்றம்

பக்தாத்,டிசெ.16

ஈராக்கில் அமெரிக்கா நடத்தி வந்த 9 ஆண்டு காலப் போர் அதிகார பூர்வமாக நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது. இதைய டுத்து பக்தாத்தில் அமெரிக்கா அமைத்த ராணுவ மையத்தில் உள்ள அமெரிக்கக் கொடி இறக் கப்பட்டது.

ஈராக்கில் அதிபர் சதாம் ஹூ சேன் அணு ஆயுதம் தயாரிப்ப தாகப் பொய் கூறிக் கொண்டு 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் போர் தொடுத்தார் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ். ஆனால், அங்கு எந்த அணு ஆயுதமும் சிக்கவில்லை. இந் தப் போரில் சதாமின் ஆட்சி தூக்கி எறியப்பட்டு, 2003ஆம் ஆண்டு டிசெம்பரில் கைது செய் யப்பட்டு, தூக்கிலிடப்பட்டு கொலையும் செய்யப்பட்டார்.

2007ஆம் ஆண்டு போர் மிக உச்சத்தில் இருந்தபோது இந்தப் போருக்காக சுமார் 15 லட்சம் அமெரிக்க வீரர்கள் ஈடு



படுத்தப்பட்டனர்.சதாம் கொல் லப்பட்டு அங்கு தேர்தலும் நடத்தப்பட்டு அமெரிக்க ஆதர வுடனான அரசும் அமைக்கப் பட்டது. அல்-மாலிகி இப்போது பிரதமராக உள்ளார்.

இந்த நிலையில் ஈராக் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், படைகளை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் அமெரிக்காவில் அதிகரித்தன. இதையடுத்து 2011ஆம் ஆண்டு இறுதிக்குள் படைகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும் என முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித் தார். அவரைத் தொடர்ந்து பத

## 9 ஆண்டு போர் முடிவுக்குவந்தது

விக்கு வந்த அதிபர் ஒபாமாவும் அமெரிக்கப் படைகளின் வாபஸ்வேகப்படுத்தப்படும்என்று அறிவித்து பெரும்பாலான படை களைத் திரும்பப் பெற்றுவிட்டார்.

கடைசியாக சுமார் 5,500 வீரர்கள் மட்டும் ஈராக்கில் இருந்த னர். இவர்களும் ஈராக்கில் இருந்து வெளியேறியுள்ளனர்.

அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படும் முன் சுமார் 8 லட் சம் ஈராக்கியர்களைக் கொண்ட புதிய ராணுவத்தை அமெரிக்கா உருவாக்கி பயிற்சி அளித்து இவர்கள் கையில் தான் ஈராக் நாட்டின் பாதுகாப்பு ஒப்படைக் கப்பட்டுள்ளது.அமெரிக்கப்படை கள் வாபஸாவதையொட்டி ஈராக்கின் பல இடங்களில் அமெ ரிக்கக் கொடிகளை எரித்து மக் கள் கொண்டாட்டங்களில் ஈடு பட்டும் வருகின்றனர்.

# பாகிஸ்தானில் உள்ள ஆப்கன் அகதிகளே தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்

## ஹீனா ரப்பானி குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,டிசெ.16

ஆப்கனிஸ்தானின் முன் னாள் ஜனாதிபதி புர்ஹானுதின் ரப்பானியின் படுகொலைக்கு பாகிஸ்தானிலுள்ள ஆப்கன் அகதிகளே காரணம் என்று பாகிஸ் தான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானி குற் றம் சாட்டினார்.

அதுமட்டுமன்றி ஆப்கனில் நடைபெறும் பல்வேறு தீவிர வாதச் செயல்களுக்கும் பாகிஸ் தானிலுள்ள ஆப்கன் அகதி களே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆப்கன் அகதிகள் எல்லை யைக் கடந்து காபூலில் நுழைந்து தாக்குதல் நடத்தியதற்கு நாங் கள் பொறுப்பல்ல. ஆப்கனில் அனைத்துப் பிரச்சினைகளுக் கும், அங்கு நடைபெறும் தீவிர வாதத் தாக்குதல்களுக்கும் பாகிஸ்தானைக் குற்றம் சாட் டக்கூடாது. அண்மையில் காபூ லில் நடைபெற்ற தாக்குதல்க ளுக்குப் பாகிஸ்தான் மீது எவ் வித அடிப்படையுமில்லாமல்



குற்றம் சுமத்தப்படுகிறது. அங்கு நடை பெறும் பிரச்சினைகளுக்கு பாகி ஸ்தானைப் பலிக்கடா வாக்க ஆப்கனும், ஏனைய நாடு களும் முயறசி செய்யக் கூடாது. பாகி ஸ்தான் பிரச்சினைகளுக் குத் தீர்வு காணும் நாடே தவிர, பிரச் சினைகளை உருவாக்கும் நாடல்ல என்றார்.

முன்னதாக ரப்பானியின் படு கொலைக்கான திட்டம் பாகிஸ் தானில் தீட்டப்பட்டது என்றும், அதை நிறைவேற்றியவர் பாகிஸ் தானியர் என்றும் ஆப்கன் அதி காரிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

# பப்புவா நியூகினியாவில் 'இரு பிரதமர்' ஆட்சி!

ஆஸ்திரேலியாவுக்கு அருகி லுள்ளசிறிய தீவு நாடான பப்புவா நியூகினியாவில் இரண்டு பிரத மர்கள் என்கிற நிலை ஏற்பட் டுள்ளதால் அங்கு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

சர் மைக்கேல் சொமாரே பல முறை அந்நாட்டின் பிரதமராக இருந்து வருகிறார். அவர் உடல் நலக் குறைபாடு காரணமாக இந்த ஆண்டு பல மாதங்கள் சிங்கப்பூரில் மருத்துவ சிகிச்சை பெற்று ஓய்வெடுத்து வந்தார். இவர் பல மாதங்கள் நாடாளு மன்றத்துக்கு வராமல் இருந் தார். நாடாளுமன்றில் பிரதமர் இடம் வெற்றிடமாக அறிவிக்

கப்பட்டு, நாட்டின் பிரதமராக பீற்றர் ஓ நீல் நியமிக்கப்பட்டார்.

தற்போது சர் மைக்கேல் சொமாரேயின் உடல் நலம் முன் னேறியுள்ள நிலையில், பப் புவா நியூகினியா நாட்டின் உச்ச நீதிமன்றம் அவர் மீண்டும் பிரத மராகப் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று உத்தரவிட் டுள்ளது. ஆனால் பீட்டர் ஓ நீலோ பதவி விலக மறுக்கிறார். இத னால் நாட்டில் ஒரே சமயத்தில் இரண்டு பிரதமர்கள் என்கிற நிலை தோன்றி, இரு பிரதமர் களுக்கு இடையே பதற்றத்து டன் கூடிய ஒரு மோதல் நிலை தொடர்கிறது.




பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியன் அலுவலகத்துக்கு வருகைதந்த பலஸ்தீன அதிபர் முக மது அப்பாஸ் (இடது), கவுன்சில் தலைவர் ஹெர்மன்வான்ரும்பி ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

# நைஜீரிய படகு விபத்தில் 20 பேர் சாவு

நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் படகு கவிழ்ந்து விபத் துக்குள்ளானதில் 20 பேர் பலி யாகினர்.

நைஜீரியா அருகே உள்ள ஈகிள் தீவிலிருந்து முபோவ் தோஹியா பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணி கள் படகே ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதுதொடர்பாக நைஜீரியா வின் அவசரகால நிர்வாக அமைப்பின் செய்தித் தொடர் பாளர் யூஸ்குவாயே தெரி வித்ததாவது;

படகு ஒன்றில் 40 பேர் பயணம் செய்துள்ளனர். அள வுக்கு அதிகமானோர் பயணம் செய்ததால் அதிக சுமை காரண மாகப் படகு கவிழ்ந்தது. இந்த விபத்தில் ஒரு குழந்தை மற் றும் கர்ப்பிணிப் பெண் உட்பட 20 பேர் வரை பலியாகியுள்ள னர் என்றார்.

# ஆப்கனுக்கு இந்தியா பாதுகாப்பு வழங்கும்


வாஷிங்டன்,டிசெ.16

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விரைவில் வெளியேற உள்ள நிலையில் தங்களது நாட்டுப் படைகள் வெளி யேறிய போதிலும், இந்திய ராணுவம் ஆப்கானிஸ்தானுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க உள்ளதாக அமெரிக்க ராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்குப் பல திசைகளில் இருந்தும் தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதன் காரணத்தினாலேயே, ஆப்கனுக்கு இந்தியா ராணுவ உதவி வழங்க முன்வந்திருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# நடிகை எலிசபெத் டெய்லரின் நகைகள், ஆடைகள் ஏலம்





பிரபல ஹொலிவூட் நடிகை மறைந்த எலிசபெத் டெய்ல ரின் நகைகள் மற்றும் உடை கள் நியூயோர்க்கில் உள்ள கிறிஸ்டிஸ் அமெரிக்காஸ் என்ற ஏல மையத்தில் வைத்து ஏலம் விடப்படவுள்ளன.

நடிகை எலிசபெத் டெய்லர் ஆடைகள் மற்றும் நகைகள் அணிவதில் ஆர்வம் கொண்ட வர். இவர் விதவிதமான நகை கள் மற்றும் ஆடைகளைச் சேக ரித்து வைத்திருந்தார். அவையே ஏலம் விடப்படவுள்ளன.

அதற்காக எலிசபெத் டெய் லரின் 400 ஆடைகள், 269 வித மான நகைகள் மற்றும் அவர் வாங்கிய விருதுகள் பொதுமக் கள் பார்வைக்கு வைக்கப்பட் டுள்ளன. அவற்றில் அவரது நண்பரான மறைந்த பொப் பாடகர் மைக்கெல் ஜக்சன் பரிசாக வழங்கிய வைரம்

மற்றும் நீலக்கல்லால் ஆன மோதிரமும் அடங்கும்.அந்த மோதிரத்தை ஏலத்தில் எடுக்க ஏற்கனவே ஒருவர் 3 கோடி ரூபாயை முன்பணமாக வழங்கி உள்ளார்.

இதுகுறித்து ஏல மையத்தின் தலைவர் மார்க் போர்டர் கூறியதாவது;

இவை அனைத்தும் நடிகை எலிசபெத் டெய்லர் தனிப் பட்ட முறையில் தெரிவு செய்யப் பட்ட நகைகளாகும். 50 ஆண்டு களுக்கு முந்தைய காலங்களில் பயன்படுத்தப்பட்டவை.

அவற்றை அவர் மிகவும் விரும்பித் தெரிவு செய்து சேக ரித்து வைத்து இருந்தார் - என்றார்.

இந்த ஏலம் 4 நாள்கள் நடை பெற உள்ளது. நகைகள் மற்றும் உடைகள் மொத்தம் ரூ.150 கோடிக்குஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரிட்டனில் பயங்கரக் காற்று; போக்குவரத்துக் கடும் பாதிப்பு


லண்டன்,டிசெ.16

பிரிட்டனில் கடும் காற்றுவீசிய தால் போக்குவரத்து கடுமை யாகப் பாதிப்படைந்துள்ளது.

பிரிட்டனின் தென் கடற் கரைப் பகுதியில் புயல்காற்று மணிக்கு எழுபது மீற்றர் வேகத் தில் வீசியதனால் மின்கம்பங் கள் தரையில் சாய்ந்தன. அத னால் போக்குவரத்துப் பாதிக் கப்பட்டதுடன் மின்சாரம் இல் லாததால் நகரங்கள் இருளில் மூழ்கின.

இதே வேளை இந்த வார இறுதியில் இன்னும் பலமான காற்று வீசும் என்று வானிலை அறிவிப்பு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆறுகளில் வெள்ளம் பெருகு வதால் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று வரும் படகுகளும்



நிறுத்தப்பட்டன. இன்னும் ஒரு பலத்த புயல் வீசக் கூடும் என்ப தால் நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருவதாக வானிலை அறிவிப்பாளர் டிம் ஹியூசன் தெரிவித்துள்ளார்.

வானிலை அறிவிப்பு அவ் வப்போது வெளியிடப்படுவ தால் மக்கள் அதனைக் கேட்டு செயற்படுவது பாதிப்புகளைத் தடுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டவர் நாவலர் பெருமான்



இன்று குருபூசை

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது நல்லூராகும். நல்லூர்க் கந்த சுவாமி கோயிலின் வரலாறும், யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளன. சைவமும் தமிழும் கோலோச்சும் இடம் நல்லூராகும். நாவலர் பெருமான் உதித்த இடமும் நல்லூராகும். இதனால் நல்லூர் புனிதமடைந்தது என்று துணிந்து கூறலாம். நல்லூரைச் சுற்றிவர சைவ ஆலயங்களும், நல்லை ஆதீனமும் சூழ்ந்து இருப்பதால் நல்லையம்பதி தானாகவே புனிதமடைகிறது.

**நாவலர் தோன்றிய காலம்**

பெருமை மிக்க நல்லூரில் தவத்திரு நாவலர் பெருமான் 18.12.1822 இல் தோன்றினார். நாவலர் தோன்றிய காலத்தில் போர்த்துக்கேயர் அரசோச்சினர். போர்த்துக்கேயர் தமது மதத்தைப் பரப்ப பகீரதப் பிரயத்தனம் செய்தனர். சைவ ஆலயங்களை இடித்து தரைமட்டமாக்கினர். சைவ ஆசாரங்களைப் பேண முடியாது சைவ மக்கள் மனங்கலங்கினர். மதமாற்றம் தீவிரமாக நடைபெற்றது. சைவ மக்கள் தமது ஆசாரங்களை, ஒளித்தும், மறைத்தும் பேணி வந்தனர். விரத நாள்களில் வாழை இலையில் உண்பதும் குற்றமாகக் கருதப் பட்டது.

சைவ மக்கள் உணவு உண்ட பின் வாழை இலையை வீட்டுக் கூரையில் ஒளித்துச் செருகினர். போர்த்துக் கேயருக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் தமது மதத்தைப் பரப்புவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஒல்லாந்தருக்குப் பின்வந்த ஆங்கிலேயரும் மாறாத நோக்குடன் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி வறியவரை கல்விகற்கச் செய்து அரச உத்தியோகம் கொடுத்து, மதம்மாற்றினர்.

**ஞானப்பிரகாச சுவாமிகள்**

ஞானப்பிரகாச சுவாமிகள் போர்த்துக்கேயர் காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்தவர். அந்தக் காலத்தில் அரசாள்பவருக்கு வீட்டுக்கொரு பசு, முறைதவறாமல் உணவுக்காகக் கொடுத்தே ஆக வேண்டும். இந்த நியதிப்படி சுவாமிகள் முறை நெருங்கியதும், முதல் நாள் இரவு இந்தப் பாதகச் செயலில், பங்கு கொள்ள மனமிலராய், கடல் மார்க்கமாக வேதாரண்யம் சென்று சிதம்பரம் அடைந்தார். அங்கே அவர் வாழ்ந்த காலத்தில் சிதம்பரத்தில் ஒரு குளம் வெட்டினார். பின் திருவெண்ணாமலை சென்ற சுவாமிகள் அங்கே துறவு பூண்டு வாழ்ந்த காலத்தில் பல சைவ நூல்களை எழுதியுள்ளார்.

**நாவலரின் மாணவப் பருவம்**

நாவலர் பெருமான் மாணவராயிருந்த காலத்தில் அச்சேறிய நூல்கள் இருக்கவில்லை. ஏடுகளை இரவலாகப் பெற்றுக் கல்வி கற்றார். நாவலர் கல்வி கற்கும் ஆவலை அறிந்த தமையனார், நாவலரை ஆங்கிலக் கல்வி கற்க 'பீற்றர் பேர்சிவல்' பாதிரியாரிடம் ஒப்படைத்தார். நாவலரின் தமிழ், ஆங்கிலப் புலமையைக் கண்ணுற்ற பாதிரியார் நாவலரைத் தனது கல்விக் கூடத்திலேயே ஆசிரியராக்கினார். இந்தக் கல்விக் கூடமே இன்றைய யாழ்ப்பாண மத்திய கல்லூரி.

**பைபிள் மொழி பெயர்ப்பு**

புனித பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற ஆவல், அன்றைய கிறிஸ்தவர்களிடையே தோன்றி இருந்தது. பைபிள் மொழி பெயர்ப்பைத் திறம்படச் செய்ய நாவலரைத் தவிர வேறு தமிழ் அறிஞர் இல்லையெனக் கருதி, பீற்றர் பேர்சிவல் பாதிரியார், அப்பெரும் பணியைச் செய்து தரவேண்டுமென்று நாவலரை மிகவும் விநயமாக வேண்டினார்.

உள்ளன்போடு தம்மை நேசித்த பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளை மீறாமல் நாவலரும் பைபிளை தமிழில் மொழி பெயர்த்தார். தமிழ் நாட்டிலும் இதே காலத்தில் பைபிள் மொழிபெயர்ப்பு நடந்தது. சென்னை மொழி பெயர்ப்பா யாழ்ப்பாண மொழி பெயர்ப்பா சிறந்தது? எனத் தீர்மானிக்க தமிழறிஞராகிய மகாலிங்கையர் நியமனம் பெற்றார். மகாலிங்கையரின் ஆய்வுப் பிரகாரம் நாவலரின் மொழி பெயர்ப்பே சாலச்சிறந்ததென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1849 ஆம் ஆண்டு நாவலர் பெருமான் தனது பிரசங்கத்தை முதலில் பொழிந்த இடம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலாகும். சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நாவலரது பேச்சு வன்மையும், பேரறிவும், சைவமெனுஞ் செஞ்சாலி குன்றாது வளர ஏது வாயிற்று. நாவலருடைய சொல்லாற்றலை அறிந்த திருவாவடுதுறை ஆதீன சந்நிதானம், நாவலரை தமது திருமடத்துக்கு அழைத்து, உபசரித்த பண்டார சந்நிதிகள், ஒரு நாள் தமது ஆதீனத்தில் உரையாற்றுமாறு வேண்டினர். ஆதீனத்தில் கூடியிருந்த அவ்வுபய சந்நிதானங்கள், வித்துவான்கள் கூடிய அவையில் நாவலர் பெருமான் 'பதி, பசு, பாசம்' என்னும் பொருளில் செந்தமிழ் நடையில், இலக்கண விதி பிசகாத, பிரசங்கத்தை கடல் மடை திறந்தாற்போலச் சொன்மாரி பொழிந்தார். செவியுற்ற ஆதீனம் மனமகிழ்ந்து இவருக்கு 'நாவலர்' எனும் உயர் பட்டத்தைச் சூட்டினர்.

வேதனம் பெறாது கற்பிக்க வேண்டும் என்ற விருப்பம் நாவலர் பெருமானுக்கு இருந்தது. நாவலர் பெருமான் முதலில் தாபித்தது, வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகும். வீடு தோறுஞ் சென்று பிடி அரிசி தண்டி ஆசிரியருக்கு வேதனம் கொடுத்தார். சைவ மக்களின் இதயமாகிய சிதம்பரத்திலும், இரண்டாவது சைவ வித்தியாசாலை தாபிதம் பெற்றது. தொடர்ந்து நாவலரின் ஊக்கத்தாலும் ஏவுதலாலும் கொழும்புத்துறை, கோப்பாய், கந்தர் மடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் போன்ற இடங்களில் சைவ வித்தியாசாலைகள் உருவாகின. இதனால் மாணவர்கள் திருநீறு பூசிய திருமேனியுடன் கல்வி கற்க முடிந்தது. தேவார திருவாசகத்தை பண்ணுடன் பள்ளியில் படிக்க முடிந்தது.

**நூல்கள் அச்சேறின**

நாவலர் காலத்தில், தமிழ் நூல்கள் யாவும் ஏட்டிலேயே இருந்தன. பனை ஓலை எடுகள் யாவும், ஒருசிலரிடமே இருந்தன. சில ஏடுகள் கறையான் அரித்தும், ஓரம் சொரிந்தும் உதிர்ந்த நிலை. இவற்றை நாவலர் பெருமான் இரவல் பெற்று, பல பிரதிகளுடன் ஒப்பு நோக்கித் திருத்தியும், விளக்கியும், விரித்தும், பிழை அற அச்சு வாகனம் ஏற்றினார். வசன நடையில் வல்லவரான நாவலர் அவர்கள், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம் போன்ற பல நூல்களுக்கு வசனம் எழுதி உள்ளார். இவற்றுள் பெரிய புராணம் வசனம் மிகவும் இனிமையானது. மாணவர்களுக்காக பாலபாடம், சைவ வினாவிடை எழுதினார். இந்தப் பணியை நிறைவேற்ற, சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடங்களை நிறுவினார். தமிழன்னையை அலங்கரித்த டாக்டர். ஊ.வே.சாமிநாத ஐயர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், ராவ் பகதூர் சி.வை. தாமோதரப் பிள்ளை ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

மிகக் குறுகிய காலம் வாழ்ந்த நாவலர் பெருமான் 5.12.1879 சிதம்பர நடராஜரின் பாதக்கமலங்களைப் பற்றிக் கொண்டார். ★

■ பொ.சிவப்பிரகாசம்

---

# உங்கள் மடிகளை நிரப்புவதற்கு எங்கள் கனவைச் சிதையாதீர் !

டிசெம்பர் 12ஆம் திகதி முதல் நடைபெற்றுவரும் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையை தமது மடியை நிரப்புவதற்கான சாதனமாக மாற்ற சில போலிகள் முனைந்து வருகின்றனர். பரீட்சையின் முதலாம் நாள் நடைபெற்ற சைவசமய பரீட்சை வினாத்தாள்-இரண்டாம் நாள் நடைபெற்ற ''தமிழ்மொழியும் இலக்கியமும்'' வினாத்தாள் என்பனவற்றின் விடைகள் எனக்கூறி, குறித்த பரீட்சைகள் நடைபெறுவதற்கு முன்னரேயே பல வினாக்களும், விடைகளும் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

ரூபா நூறு முதல்-ஐநூறு வரை மேற்படி வினாக்களுக்கு பணம் அறவிடப்பட்டதாகவும்-தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் ஒருவரே இத்தகைய ''பம்மாத்து'' விளையாட்டில் ஈடுபட்டதாகவும் பெற்றோரும், பரீட்சை எழுதிய மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி, மீசாலை, புத்தூர் சந்தி பகுதியிலேயே இத்தகைய ''நள்ளிரவு மோசடி'' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வரலாறு, விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கும் இவ்வாறன வினாக்கள், விடைகள் வழங்கப்பட்டிருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்மொழிப் பாடத்துக்கு முதலாம் வினாத்தாளுக்குரிய 40 வினாக்களுக்கான விடைகள் என, விடை இலக்கங்கள் குறிப்பிட்டு விடைத்தாள்கள் விற்பனைசெய்யப்பட்டன. 2ஆம் வினாத்தாளுக்கான கட்டுரைகள், கடிதம் என்பனவும், மூன்றாம் வினாத்தாளுக்கான வினாக்கள் எனவும் கூட வழங்கப்பட்டுள்ளன. இதை நம்பி-சாமம் சாமமாக வீதிகளிலும், தொலைபேசி மூலமும் வினாக்களைப் பெற நூற்றுக் கணக்கான மாணவர்கள் அலைந்தனர். இறுதியில் அந்தத் தேடலின் விளைவாக பெருந் தொகையான பணத்தைச் செலுத்தி அந்த வினாத்தாள்களை வாங்கி, விடைகளை மனனமும் செய்து கொண்டனர். ஆனால் அந்த வினாக்கள், விடைகள் யாவும் பொய்யானவை, போலியானவை என்பது அடுத்தநாள் (13.12.2011) நடைபெற்ற பரீட்சை வினாத்தாள்களோடு ஒப்பிட்டுக் கண்டறியப்பட்டது.

ஏற்கனவே வெளியான விடைத்தாளை நம்பிச் சென்ற மாணவர்கள் பலரும் அதிர்ச்சியிலும், குழப்பத்திலும் ஆழ்ந்தனர். அத்தோடு உள்ளதையும் இழந்து எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கிவிட்டு நிற்கிறார்கள். இது தொடர்பாக தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளருக்கு தொலைபேசி மூலமும், எழுத்து மூலமும் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி மாணவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் இதுகுறித்து அதிர்ச்சியையும் கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.


இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையில் வாழும் எமது இளவயதுச் செல்வங்களின் கல்வியோடு விளையாடும் இத்தகைய வேலைகளை இந்தப் பிரகிருதிகள் இனியாவது நிறுத்திக் கொள்ளவேண்டும். பெற்றோர், மாணவர், ஆசிரியர் என்போர் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள். இத்தகைய மோசடிக்காரர்களை நீதியின்முன் நிறுத்த வேண்டும்.

ஜி.சீ.ஈ.இந்த வருடம் நடைபெற்ற (உ/த) பரீட்சையின்போதும் தமிழ் பாடத்துக்கான இரு பகுதி வினாக்களும் முழுமையாக இந்தப் பிரதேசத்தில் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் ஒருவரால் வழங்கப்பட்டன. பாடம் நடைபெற்ற மறுநாள் உதயன் பத்திரிகை தனது முதற் பக்கத்தில் ''க.பொ.த. (உ/த) பரீட்சை-தமிழ்பாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதா?'' என்ற செய்திமூலம் இந்த விடயத்தை வெளிக்கொணர்ந்தது, ஆனால் பொறுப்பான அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் அந்த விடயம் மூடி மறைக்கப்பட்டு விட்டது. இதனால் சில பெரிய தலைகள் தப்பிப் பிழைத்தன. எனினும் அந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவரும்போது தான் உண்மையாகக் கற்ற மாணவர்கள் பெறப் போகும் பாதிப்புத் தெரியவரும்.

உங்கள் சிலரின் பெயரை நிலை நிறுத்தவும், மடிகளை நிரப்பவும், கல்வி நிறுவனங்களை விளம்பரப்படுத்தவும் எண்ணி-எங்கள் மாணவச் செல்வங்களின் வாழ்க்கையோடு எவரும் விளையாடாதீர்! ஏனெனில் எங்கள் ஏழைப் பெற்றோரின் கண்ணீரும், வியர்வையும், இரத்தமும்- இந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவே சிந்தப்படுகின்றன. அவர்களின் கனவுகளை எவரும்-உங்களின் உயர்வுக்காகப் பாழடித்து விடாதீர்கள்!

**மாணவர் நலன் நாடும்**
**ஓர் ஆசிரியர்.**

"முதல்ல மூன்று ஸ்டம்ஸ் தானே இருந்தது! எங்கே ஒன்று ?"
டில்காரா பெர்ணான்டோ.



# வாங்கிக் கட்டுகிறது இலங்கை அணி

**தென்னாபிரிக்காவின் சிறப்பான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொண்டது.**

## தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் திணறினர் இலங்கை வீரர்கள்


தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் செஞ்சூரியனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பிளென்டர், ஸ்ரெயின் வேகத்தில் 180 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் தரங்க பரணவிதாரன மற்றும் டில்ஷான் களமிறங்கினர். இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே டில்ஷான் 6 ஓட்டங்களுடன் ஸ்ரெயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.



"வேணாம்! இப்படியெல்லாம் பந்துவீசினா விளையாடமாட்டேன்"
ஸ்ரெயினின் பந்து வீச்சில் மஹேல.



"போனால் போகட்டும் போடா"
துயரத்துடன் பரணவிதாரன.

அடுத்து நுழைந்த நம்பிக்கை வீரர் சங்ககார ஒரு ஓட்டத்துடன் வெளியேற இலங்கை அணி 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் இணைந்த மஹேல ஜெயவர்தன, பரணவிதாரனவுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். இவர்களது இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. மூன்றாவது இலக்குக்காக 51 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 32 ஓட்டங்களுடன் பரணவிதாரன ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களம்புகுந்த திலான் சமரவீர அணிக்கு நம்பிக்கையளிக்கும் விதமாக மஹேலவுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். இலங்கை அணி 91 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நான்காவது இலக்கையும் இழந்தது. மஹேல ஜெயவர்தன 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மஹேலவைத் தொடர்ந்து களமிறங்கிய மத்தியூஸ் பொறுப்பாக ஆட இலங்கை அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது. ஐந்தாவது இலக்குக்காக மத்தியூஸ், சமரவீர இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இவர்களின் மிகச் சிறந்த இணைப்பின் மூலம் இலங்கை 150 ஓட்டங்களை எட்டியது. 65 ஓட்டங்கள் ஐந்தாவது இலக்குக்காகப் பகிரப்பட்ட நிலையில் சமரவீர 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து நுழைந்த கௌசல சில்வா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முதலாவது பந்து வீச்சிலும் தொடர்ந்து திஸ்ஸர பெரேரா ஒரு ஓட்டத்துடனும் வெளியேற 157 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இலங்கை அணி இழந்தது.

அதன் பின்னர் தனித்து நின்று மத்தியூஸ் போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். மத்தியூஸுடன் இணைந்து ஹேரத்தும் சிறப்பாக ஆட அணியின் ஓட்ட எண் ணிக்கை உயர்ந்தது. இறுதியில் மத்தியூஸ் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கையின் ஆட்டம் முடிவை எட்டியது. ஹேரத் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 47.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து இலங்கை 180 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் பிளென்டர் 5, ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி வலுவான அடித்தளத்தை அமைத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய றுட்லோப், ஸ்மித் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. அதிரடியாக ஆடிய ஸ்மித் 30 ஆவது அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தார். அணி 88 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கை இழந்தது. ஸ்மித் 61 ஓட்டங்களுடன் பெர்னாண்டோவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நேற்றைய ஆட்டநேர நிறைவில் தென்னாபிரிக்க அணி ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 90 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் றுட்லோப் 27, ஸ்ரெய்ன் 1 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளனர். (15)

# தொடர் சரிவுகளால் இலங்கை அணி தரவரிசையில் வீழ்ந்தது

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் அணிகளுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணி கடந்த 6 வருட காலத்தில் முதல் தடவையாக 100 புள்ளிகளுக்கு கீழே சென்றுள்ளது. ஐ.சி.சியின் புதிய தரவரிசைப் பட்டியலின்படி, திலகரட்ன டில்ஷான் தலைமையிலான இலங்கை அணி 99 புள்ளிகளைப் பெற்று தரப்படுத்தலில் 5 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கை அணி இதற்கு முன்னர் டெஸ்ட் தரப்படுத்தலில் 100 புள்ளிகளைவிட குறைவாக பெற்றிருந்தது 2006 ஜுலை மாதத்திலாகும். சொந்த மண்ணில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் தோல்வி அடைந்ததையடுத்து இலங்கை அணிக்கு அந்தப் பின்னடைவு ஏற்பட்டது.

அதன்பின்னர் காயமடைந்த மாவன் அத்தபத்துவிடமிருந்து, மஹேல ஜெயவர்தன தலைமைப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட பின், இலங்கை அணியின் தரப்படுத்தல் புள்ளிகள் அதிகரித்தன. 2009 ஆம் ஆண்டு டெஸ்ட் அணிகளுக்கிடையிலான தரப்படுத்தலில் 120 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. அதன்பின் ஐ.சி.சி. டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணி ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருந்தாலும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்டிருந்தது.

தென்னாபிரிக்கா தற்போது 116 தரவரிசைப் புள்ளிகளுடன் 3 ஆம் இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் இங்கிலாந்து அணி 125 புள்ளிகளுடன் முதலிடத்திலும் இந்தியா 118 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் உள்ளன. ஆஸ்திரேலியா 103 புள்ளிகளுடன் 4 ஆம் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 98 புள்ளிகளுடன் 6 ஆம் இடத்தில் உள்ளது. மேற்கிந்திய அணி 7 ஆம் இடத்திலும் நியுஸிலாந்து 8 ஆவது இடத்திலும் பங்களாதேஸ் 9 ஆவது இடத்திலும் உள்ளன. (15)

# என்னைப் போல் ஒருவன்!


ஒரு சில போட்டியில் சிறப்பாக செயல்படவில்லை என்பதற்காக அனுபவ வீரரான பொண்டிங்கை ஆஸ்திரேலிய அணியில் இருந்து நீக்கக் கூடாது, என்று ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் முன்னாள் அணித்தலைவர் பொண்டிங் இடம் பெறுவது சந்தேகமாக உள்ளது. மோசமான 'போர்மில்' உள்ள இவரை நீக்க வேண்டும் என்று கிரிக்கெட் ஜாம்பவான்கள் வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து இந்திய வீரர் ஹர்பஜன் கூறியவை வருமாறு -

ஒரு சில ஆட்டங்களில் சிறப்பாக செயல்படவில்லை என்பதற்காக அனுபவ வீரரான பொண்டிங்கை நீக்கக்கூடாது. இதே நிலை தான் இந்திய வீரர் டிராவிட்டிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. 11 டெஸ்டில் விளையாடி 60 ஓட்டங்கள் மட்டும் எடுத்திருந்தார். தற்போது, அவர் தான் முன்னணி வீரராக திகழ்கிறார். இதே போன்று பொண்டிங்கும் எழுச்சி காண்பார்.

ஆஸ்திரேலிய வீரர் நதன் லியோன் பந்துவீச்சை தொலைக்காட்சியில் பார்த்தேன். நல்ல முன்னேற்றம் கண்டுள்ளார். இந்திய துடுப்பாட்ட வீரர்கள் நியுசிலாந்து வீரர்களை காட்டிலும் முற்றிலும் வித்தியாசமானவர்கள். குறிப்பாக டிராவிட், சேவாக் போன்றவர்கள் சுழலை எளிதாக சமாளிக்கும் திறன் பெற்றவர்கள். எனவே, லியோனுக்கு பெரும் சவால் காத்திருக்கிறது.

எனது தாடை எலும்பில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக சிகிச்சை மேற்கொண்டு வருகிறேன். வைத்தியர்கள் பந்துவீச கூடாது என்று கூறியுள்ளனர். இதனால் ஓய்வு எடுத்து வருகிறேன். அடுத்த மாதம் உள்ளூர் போட்டிகளில் விளையாடுவேன். மீண்டும் இந்திய அணியில் இடம் பெற வேண்டும் என்பதே விருப்பம் - என்றார். இதேவேளை அஸ்வின், ஓஜா போன்றவர்கள் சிறப்பாகப் பந்து வீசி வருவதால் அனுபவ வீரரான ஹர் பஜனுக்கும் இந்திய அணியில் இடம்கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ங-15)



"பார்த்துப் பந்தைப் போடுங்கடா, பச்சப் பிள்ளைங்க அழப்போறாங்க!"
கலிஸும் தென்னாபிரிக்க அணி சக வீரர்களும்

## மாணவனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என பெற்றோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து உறவினர் நண்பர் வீடுகளில் அவரைத் பெற்றோர் தேடி அலைந்தும் குறித்த மாணவன் பற்றிய எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. இந்தச் சம்பவம் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது என்று காணாமல் போன மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

எனினும் இச் சம்பவம் குறித்து உறுதிசெய்து கொள்ள பொலிஸாரைப் பல முறை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் இச்செய்தி எழுதப்படும் வரை முடியாமற் போனது. (ங-319)


## வேலை வாய்ப்பு

UCMAS ABACUS இல்

5-13 வயது வரையுள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு வடமராட்சி, தென்மராட்சியை வதிவிடமாகக் கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* தற்போது UCMAS இல் ஆசிரியர்களாக இருப்பவர்களது விண்ணப்பங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
* தகைமை - உயர்தரம் படித்தவர்கள்.

25.12.2011 ஆம் திகதிக்கு முன்பு உங்கள் சுயவிவரக் கோவையை அனுப்ப வேண்டிய முகவரி:

| வடமராட்சி: | தென்மராட்சி: |
|---|---|
| அ.சதீஸ் | நே.நேசரூபன் |
| கல்வத்தை மில்லடி, | கண்டிவீதி, |
| வதிரி, கரவெட்டி. | சாவகச்சேரி. |
| 0774122934 | 0777224994 |

## Vacancies

(i) கணக்காளர் (பெண்) கணினி அறிவுடையவர்
(ii) சாரதி,
AD சாரதி அனுமதியுடைய
5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
உடன் நேரில் வரவும்.

மீடியா எலக்ரோ மார்ட்
இல. 1-1, 1-H, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 4566

## தவறிவிட்டது

பரமலிங்கம் - நமுளகுலராஜன் என்பவரின் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் உத்தியோகத்தர் அடையாள அட்டை என்பன இருபாலைச் சந்திக்கும் கோப்பாய்க்கும் இடை யில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 0773628209

## விற்பனைக்கு

WPJZ .... எனும் இலக்கமுடைய தனிப்பாவனையில் உள்ள MTL-240 உழவு இயந்திரம் ஒன்றும், WPGN ... எனும் இலக்கமுடைய Toyota Hiace Crew Cab, Dual Purpose vehicle விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0777238300, 0776116054

## கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பின்வரும் உபகரணங்கள் பராமரிப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களையும் நிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/= செலுத்தி 25.12.2011 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 26.12.2011 மு.ப. 10 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்கள் சமுகந்தரமுடியும்.

பராமரிக்கப்பட வேண்டிய உபகரணங்களின் விவரம்:

1. Window type Air Conditioner
2. Split type Air Conditioner
3. Package type Air Conditioner
4. Mortuary coolers
5. Industrial Washing Machine
6. British Aid (Central) Air Conditioner

Dr. Mrs. ப.பசுபதிராஜா
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

காளிகோயிலடி, சங்கானையில் வசிக்கும் கந்தையா தேவராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை 612062587 V (க.தேவராஜா, 150 வியாசர் வீதி, பண்டாரிகுளம், வவுனியா), NP VO 3829 எனப் பதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ், ரக்ஸ், சாரதி அனுமதிப் பத்திரம், A.T.M. காட் வேறு சில முக்கிய பிரதிகள் சங்கானைப் பகுதியில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் மேற்கூறப்பட்ட முகவரிக்கோ அல்லது 0776513783 என்ற தொலைபேசி இலக்கத் துக்கோ அறியத்தரவும்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானாபரணம் துரைராசா



கோண்டாவில் மத்தி நெட்டிலுப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாபரணம் துரைராசா நேற்று (15.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் சிவசக்தி, சிவரூபன் ஆகியோரின் அன்பத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நெட்டிலுப்பாய்,
கோண்டாவில். (11753)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி துரைச்சாமி பவளம்மா (செல்லம்)



மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி பவளம்மா 14.12.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நாகம்மா தம்பதியரின் மூத்த மகளும் துரைச்சாமியின் அன்பு மனைவியும் சிவயோகநாதன் (சிவா - ஜேர்மனி), ஸ்ரீறஞ்சினி (கொடிகாமம்), ஸ்ரீ சிவாசினி தேவி (சிவாஜி லண்டன்), சிவறஞ்சன் (டோகா), ஸ்ரீகுமுதினிதேவி (மிருசுவில்), சிவரூபன் (மிருசுவில்) ஆகியோரின் அன்புத் தாயுரும் சுந்தரலிங்கம், கனகலிங்கம், சிவபாக்கியம், அமிர்தலிங்கம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தமலர் (ஜேர்மனி), வதனன் (பனை அபிவிருத்திச் சபை), கணேசலிங்கம் (லண்டன்), புவிகரன் ஆகியோரின் அன்பு மாமியும் அனோஜன் (ஜேர்மனி), அஜந்தன் (ஜேர்மனி), இசையழகன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இசைப்பிரியன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ரஷ்மி (லண்டன்), ரஜவிந் (லண்டன்), ராகவி (லண்டன்), பவிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வடக்குக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில். (7876)

தகவல்:
குடும்பத்தினர்.


மலேசிய EVERSENDAI வியாபார குழுமத்துடன் இணைந்த

# டோஹா கட்டார்

## கிளைக்கு வெற்றிடங்கள் 100

நல்ல வசீகரமான தோற்றமுடைய 19 முதல் 40 வயதிற்குட்பட்ட தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

### கை உதவியாளர்கள் (ஆண்கள்)

சம்பளம்
QR 600 + இலவச சாப்பாடு + OT

நேர்முகப்பரீட்சை இன்று
Green Grass
Hostel & Restaurant
No.33, Aseervantham Lane,
Hospital Road, Jaffna.
மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்







கட்டார் ரியால் 1 = ரூபா 31/-

சேவை நிபந்தனைகள்

- ஒப்பந்தக்காலம் 02 வருடம்.
- உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 08 மணித்தியால வேலை மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு.
- ஒப்பந்த நிறைவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை கட்டார் தொழில் சட்டத்திற்கேற்ப.

HOTLINE
072 712 4415 / 072 312 4409

அறவீடுகள்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவகம் அனுமதித்த கட்டணம் மாத்திரமே.



## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல: 634 1/1 - 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10. (ஆனந்தா கல்லூரிக்கு முன்னால்)

தொலைபேசி : 0094 115 544 333 தொலை நகல் : 0094 115 544 337

License No. 2541

E-mail : info@ikralk.com

## பறக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமை நேரங்களின்போது அரச வைத்தியசாலைப் பணிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு, தனியார் வைத்திய சாலைகளில் நோயாளர் களைப் பார்வையிடும் வழக்கம் அண்மைக் காலமாக அதிகரித்திருந்தது. இதுகுறித்த புகார்கள் உயர் மட்டத்துக்குச் சென்றதை அடுத்து திடீரென குடாநாட்டில் இதுதொடர்பான சோதனைகளை மேற்கொள்ள விசேட பறக்கும் படை நேற்றுக் களமிறங்கியது.

இந்தக்குழு நடத்திய சோதனையின்போது யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மூன்று வைத்திய நிபுணர்கள் கடமைநேரத்தின்போது அங்கிருக்கவில்லை. அவர்கள் அருகில் உள்ள தனியார் வைத்தியசாலையில் நோயாளிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது பறக்கும் படையிடம் வசமாகச் சிக்கிக் கொண்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் வைத்தியசாலை வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரைத் தொடர்புகொண்டபோது அவர் கொழும்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ங-14)

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவல்களின் உண்மைத் தன்மை என்னவென்பதை அரசு உடனடி யாக அம்பலப்படுத்தவேண்டும் என்று காணாமற்போனோரைத் தேடியறியும் குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்ட காணாமல்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரன் கூறியவை வருமாறு:-

திருகோணமலை கடற்படை முகாம் அமைந்துள்ள அடர்ந்தக் காட்டுப் பிரதேசத்தில் இரகசிய முகாம்கள் இயங்கி வருகின்றன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

காணாமல்போனோரின் உறவினர்கள் தமது உறவுகள் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

காணாமல்போன தனது கணவரை திருகோணமலை கடற்படை முகாமில் அமைந்துள்ள இரகசியத் தடுப்பு முகாமொன்றில் தான் சந்தித்துப் பேசினார் என பெண்ணொருவர் எம்மிடம் கூறியுள்ளார். பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு அவர் மேலதிக தகவல்களை வெளியிடவில்லை.

எது எப்படியிருப்பினும், இரகசிய முகாம்கள் குறித்து எமக்கு நம்பகரமான தகவல் கிடைத்துள்ளது. இரகசிய முகாம்கள் அங்கு இயங்குகின்றனவா என அது தொடர்பான உண்மைத்தன்மையை அரசு கட்டாயம் வெளியிடவேண்டும்.

காலத்தைக் கடத்தாது வெகுவிரைவில் இது தொடர்பாக தெளிவுபடுத்துமாறு நாம் அரசைக் கோருகின்றோம் - என்றார். (ஒ-சி)

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின் விவரங்களைப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விளக்கிக் கூறினார்.

அரசுடனான கடந்த சில சந்திப்புகளின்போது இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான அதிமுக்கிய விடயங்களான பொலிஸ் அதிகாரம்,காணி அதிகாரம்,வடக்கு, கிழக்கு இணைப்பு சம்பந்தமாகப் பேசப்பட்டதையும் அவர் விளக்கிக் கூறினார்.

அடிப்படையில் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக முஸ்லிம்களின் கருத்து ஒருமைப்பாடு இன்றி எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் தமது தரப்பினர் மேற்கொள்ளப் போவதில்லை என சம்பந்தன் உறுதியளித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் அரசியல் வரலாற்றைத் தொட்டுக்காட்டிய சம்பந்தன் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் தமிழ் மக்களோடு ஒன்றித்து மேற்கொண்ட அரசியல் பயணத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதன் அடிப்படையில் மீண்டும் தமிழ்பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் தீர்வுக்காக ஒன்றாகச் சேர்ந்து ஜனநாயக ரீதியாக தங்களது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது பற்றியும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கும்போது தொடர்ச்சியாக இதுபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் சந்தித்து கலந்துரையாடுவதற்கான பொறிமுறை ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான சுமுகமான உறவை முன்னெடுக்கும் விதத்தில் முஸ்லிம்களின் உணர்வுகள் பாதிக்கப்படாதவாறு தமிழர் தரப்பினருடைய அறிக்கைகள் அமையவேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, எதிர்காலத்தில் இதுபோன்ற பேச்சுகளை நடத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் கல்முனை பிரதிமேயர் நிசாம் காரியப்பர் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர் எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய பேச்சில் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரி.ஹசனலி (செயலாளர் நாயகம்), பைசல் காசிம், முத்தலிப் பாவா பாரூக், கல்முனை பிரதி மேயர் நிசாம் காரியப்பர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-சி)

## கோயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆத்திரமடைந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அந்தக் கும்பல் தமிழ் இளைஞர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டது.

கடும் கோபத்துடன் திரும்பிச்சென்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளை ஞர்கள் தங்களது கோஷ்டியினர் சகிதம் மீண்டும் ஆலய வளாகத்துக்குள் வந்து,தமிழ் இளைஞர்களைக் கண் மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்கான தமிழ் இளைஞர்கள் ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தையடுத்து, அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் பீதியால் வீட்டுக்குள்ளேயே உறைந்துப்போயுள்ளனர். தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கள் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனையடுத்து, அசுரவேகத்தில் செயற்பட்ட மனோ, புளத்கொஹுபிட்டிய பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திஸாநாயக்கவுடன் தொடர்புகொண்டு இது விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். அவிசாவளை பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்கு இந்தச் சம்பவத்தை அவர் கொண்டுசென்றுள்ளார்.

எதுராபொல கீழ் பிரிவு தோட்டத்துக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்படுமென பொலிஸார் மனோவிடம் உறுதியளித்துள்ளனர். அத்துடன், இச்சம்பவத்தை மனோ கணேசன் வன்மையாகக் கண்டித்துள்ளார். (ஒ-சி)

## பொலிஸார்....

யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதை ஓரமாக தனியாருக்கு சொந்தமான கட்டடத்தில் அமைந்திருந்த பழங்களை விற்பனை செய்யும் நடைபாதை கடைகளுக்கு நேற்றுக் காலை வந்த பொலிஸாரும் மாநகர சபையினரும் அந்தக் கடைகளை எவ்வித முன்னறிவித்தலும் இன்றி அகற்றினர். இதன் போது வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் அதற்கு மாநகர சபையினரும் பொலிஸாரும் அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டி விட்டு தமது வேலையைத் தொடர்ந்தனர்.

சொல்லாமல் கொள்ளாமல் மாநகர சபையினர் அரங்கேற்றிய இந்த அடாவடித்தனத்தால் நடைபாதை வியாபாரிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ங-26)

## வடமாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீ.வி.கே.சிவஞானம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூரகத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேலும் தெரிவிக்கையில்:

எமது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமராத நிலையில் உள்ளனர். இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் காணிகளை ஆக்கிரமித்துள்ளது. இதனால் பல மக்களது வாழ்விடங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவற்றை விட மாதகலில் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை கடற்படை சுவீகரிக்க முயல்கின்றது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் சரியான வகையில் பயனாளிகளின் பெயர் உள்வாங்கப்படவில்லை என்று முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளில் ஊடாக நாம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு உதவுமோ தெரியாது. அத்துடன் உள்ளூராட்சி சபைகளை ஜனநாயக ரீதியாகக் கட்டியெழுப்பவதற்கும், அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கும் இந்தியா உதவ வேண்டும்.

இங்கு நீங்கள் நேரடியாகச் சென்று மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டறிந்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று இந்தியக் குழுவினி டம் கூறியதாகவும் - குறிப்பிட்டார். (ஒ-15)

## அடியோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது மேற் கண்ட தகவலை அவர் அடி யோடு நிராகரித்தார்.இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

திருகோணமலை கடற் படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் நூதனசாலை இருக்கின்றது. பாலர் பாடசாலை யொன்றும் இருக்கின்றது. சில முக்கிய நிலையங்கள் கூட இருக்கின்றன. ஆனால், அங்கு இரகசியத் தடுப்பு முகாம்கள் எதுவும் இல்லை.

இரகசிய முகாம்கள் இயங்கிவருகின்றன எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய். அதனை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். திருகோணமலை கடற்படை முகாமுக்கு நாளாந்தம் அதிதிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் விஜயம் செய்கின்றனர். கடற்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தையும் பார்வையிடுகின்றனர்.

அப்படியே இரகசிய முகாம்கள் இருக்குமானால் இவர்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லவா?

இந்த விடயம் தொடர்பாகப் பலர் என்னிடம் வினவியுள்ளனர். அங்கு இரகசிய முகாம் என்று எதுவும் இல்லை. உண்மைத்தன்மையற்ற தகவல்களே வெளியாகியுள்ளன - என்றார். (ஒ-சி)

## தமிழ் அரசியல்....

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கும், வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் [illegible] சென்று தமிழ்க் கைதிகளின் நிலைமைகளைக் கேட்டறிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், எஸ்.சிறிதரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எஸ்.யோகேஸ்வரன் ஆகியோர் இக்குழுவில் அடங்குவர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 200 தமிழ் அரசியல் கைதிகளும், வெலிக்கடை மகளிர் பிரிவில் 35 பெண்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

நேற்றைய விஜயம் குறித்து 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்ட செல்வம் அடைக்கலநாதன் கூறியவை வருமாறு:-

தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமைகளைக் கேட்டறி யும் பொருட்டு நாம் நேற்று கொழும்பு விளக்கமறியல் சிறைச் சாலைக்கும், வெலிக்கடை மகளிர் பிரிவுக்கும் விஜயம் செய்தோம்.

அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுள் அவர்களின் விடுதலை, துரிதகதியில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கவேண்டும் என்பன பிரதானமாக அமைந்திருந்தன.நீண்டகாலமாக எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என ஒரு சாராரும், ஆமை வேகத்தி லேயே வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என இன்னுமொரு சாராரும் எம்மிடம் சுட்டிக்காட்டினர்.

தமிழ் அரசியல்கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறைகளில் போதிய சுகாதார வசதிகள் இல்லை. பெண்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.அவர்களின் விடுதலை தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என உறு தியளித்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் திட்ட செயற் பாடுகளுள், தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலை யும் பிரதானமானது என நாம் சுட்டிக்காட்டினோம் - என்றார். இதன் போது கைதிகளுக்கு தேவையான உணவுப் பொருள்களும்,நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் பிறந்த தினத்தை ஒட்டி சிற்றுண்டிகளும் கைதிகளுக்கு வழங்கப்பட்டது. (ங-சி)

## மரண அறிவித்தல்



### பிலிப்பு சூசைதாஸ்

சென். ஜேம்ஸ் வீதி இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பு சூசைதாஸ் நேற்று முன்தினம் 14.12.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு-றோசம்மாள் தம்பதியினரின் அன்பு மகனும் மரியம்மாவின் பாசமிகு கணவரும் மேரி வுளோரன்ஸின் (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி)பாசத்திற்குரிய தந்தையும் ஜேம்ஸ்,யேசுதாஸ், மேரிராணி, ஜோசப், கத்தரீன், இராஜநாயகம், லூட்ஸ்மேரி ஆகியோரின் சிறியதந்தையும் இருதயநாதர்,கொண்சி,சந்திரசேனா, செல்வராணி, யோண்பொஸ்கோ, ஜெயச்சந்திரா, இராஜேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் தேவராஜன்(உதயன், ஆசிரியர்பீடம்), சயூறன்(U.N.D.P), ஜெயசீலன்,சுகிர்தராஜன், சில்வெஸ்ரர்,கெமில்ரன்,நிறஞ்சன்(ஆசிரியர் யா/மானிப்பாய் மெமோறியல்), சுஜித்தா (எழுச்சியகம்) ,நிரோஷன் (ஆஸ்திரேலியா) , றாஜிகா(Dept. of ETF), டனி(ஆசிரியர் மன்/சென்.லூசியா ம.வி),றுவீனா (மாணவி, விஞ்ஞான பீடம் யாழ்.பல்கலை), அல்வீனா(மாணவி, கலைபீடம் யாழ்.பல்கலை), யூடினா,நிமல், சங்கர், றொபேட், நிதர்சினி, நிலோஜன், டிலி ஆகியோரின் அன்புக்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 16.12.2011 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.30 மணியளவில் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.ஜேம்ஸ் வீதி,
இளவாலை.

தகவல்:
செல்வி சூ.வுளோரன்ஸ்
(மகள்).

## காணி தேவை

யாழ். நகரின் பிரதான வீதிகளில் (பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி) காணி தேவை.
தொடர்பு: 0771807672

## THE SCIENCE POINT

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**PHYSICAL**
SAT, SUN (12.15-1.15)

**சக்தியியல்**
TUE, THUR (4-5) P.M

புதிய பிரிவு ஆரம்பம்
DAY CLASS

பிரிவு I, பிரிவு II நேர அட்டவணை நிறுவனத்தில்

BY. அன்பு

## கல்விக்கான வீடியோ இணையம் அறிமுகப்படுத்துகின்றது 'யூடியூப்'

கொழும்பு, டிசெ.16

சர்வதேச மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற - விடியோ பிரியர்களின் முடிசூடா மன்னனாகத் திகழும் யூடியூப் நிறுவனம், பாடசாலை குழந்தைகளுக்காக கல்வி சார்ந்த விடியோக்களை மட்டும்கொண்ட இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'யூடியூப் பார் ஸ்கூல்ஸ்' என்ற பெயரில் இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

4.5 லட்சம் எண்ணிக்கையிலான கல்வி தொடர்பான வீடியோக்கள் இந்த இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன.

பாடசாலைகளில் ஸ்மார்ட் கிளாஸ் முறை அறிமுகப்படுத்தப்பட்டுவரும் நிலையில், யூடியூப்பின் இந்தச் சேவை நல்ல பயனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பஸ் கட்டண அதிகரிப்பை வலியுறுத்தி நாடு முழுவதும் பணிப் பகிஷ்கரிப்பு

நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பஸ் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக அரசுக்கு வழங்கிய காலப்பகுதிக்குள் எவரும் உறுதியான பதிலை அளிக்கவில்லை.

இதனையடுத்தே, தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ங-சி)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரப்பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0771807672

## திசைகாட்டியில் விசா வியளம் கேட்டீர்களா?

- ஆஸ்திரேலியா குடும்பத்துடன் போகலாமாம்
- கனடா கனவும் நிறைவேறுமாம்
- லண்டன் வாசிற்றியில் படிக்க IELTS தேவையில்லையாம்
- இன்னும் பிரான்ஸ், சுவிஸ், நோர்வே போகவும் வழியிருக்காம்.

இந்த ஞாயிறு உட்பாந்திரம் கதைக்க வாருங்கள்
விசா வியளம் விளம்பும் பிரிவு



**திசைகாட்டி**
பிறைவேற் லிமிட்டெட்
(முன் மாதிரியான ஆலோசனை நிறுவனம்)
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0214914527, 0212219016
thisaikaddi@sltnet.lk
www.thisikaddi.lk
யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை

## பழைய தளபாடங்களுக்கு புதிய தளபாடம்

பழைய தளபாடங்கள் விலைக்கு வாங்கப்படும்.
குறிப்பு: பழைய தளபாடங்களுக்குப் பதிலாக புதிய தளபாடங்கள் மாற்றிக் கொடுக்கப்படும்.
தொடர்பு: மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0771807672

## 50 ஆவது அகவையும் 25 ஆவது வருட நிறைவும்

### வண.சி.யோசுவா சிவயோகன்



நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும்ஆயிரம் மடங்கு அதிகமாகும்படி உங்கள்பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக
(உபாகமம் 1:11)

50 ஆவது அகவையையும் 25 ஆவது வருட ஊழிய நிறைவையும் காணும் நல்லூர் நாற்சதுர சுவிசேஷ சபையின் தேவ ஊழியனும் ஆவிக்குரிய தகப்பனுமாகிய வண. சி.யோசுவா சிவயோகன் அவர்களை மனதார இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகின்றோம்

வாலிபர்கள்,
நாற்சதுர சுவிசேஷ சபை,
நல்லூர்.

(14017)(2-6-9)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை (SLAS) மற்றும் போட்டிப் பரீட்சை
P.உமாசங்கர்
இலங்கை நிர்வாகசேவை SLAS
P.கமல்தாசன்
ஒவ்வொரு சனியும் 9.00-3.00 மணிவரை
**நாவலர்** கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி இராசேந்திரம்



பலாலியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் மலைவேம்படி, அளவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி இராசேந்திரம் நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற ஸ்ரீராசகுமார் மற்றும் ஸ்ரீரஞ்சிதகுமார்(லண்டன்), வளர்மதி (தொண்டமனாறு), ஸ்ரீரவீந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டடி சேமக்காலையில் நல்ல டக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மலைவேம்படி, அளவெட்டி.

## SK வயோதிபர் இல்லம்,

அறிவியல் நகர்-கிளிநொச்சி

### வயோதிபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

2012.01.03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, கிளிநொச்சியில் S.K. வயோதிபர் இல்லம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வயோதிபர் இல்லத்தில் வதிவதற்கு விரும்பும் வயோதிபர்கள் 20.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

க.இராஜேந்திரம் - 0770757434
சி.இதயராஜா - 0714419204
தா.நிகேதன் - 0778394113

## பணியாளர் வெற்றிடம்

யாழ். மாவட்ட முன்னணி தளபாட உற்பத்தி நிறுவனத்திற்கு

01. தச்சுத் தொழிலாளர் (Carpenter) (பயிலுநர்/ அனுபவமுள்ளோர்)
02. வெல்டர் (Welder) (பயிலுநர்/ அனுபவமுள்ளோர்)
03. தொழிற்சாலைப் பணியாளர் (ஆண்/பெண்) (பயிலுநர்/ அனுபவமுள்ளோர்)
04. சாரதி (Driver)
05. சாரதி உதவியாளர்

காலம் : 17.12.2011 சனிக்கிழமை காலை 9 மணி

EUT சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்
T.P. No: 0212240110/ 0217200857

## பாடசாலை வான் சேவை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

*பண்டத்தரிப்பு, சில்லாலை, பனிப்புலம், வடலியடைப்பு, சங்கானை, சித்தங்கேணி, மாவடி, பிளவத்தை, சங்கரத்தை ஊடாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கான பாடசாலை வான் சேவை.*

*புதிய ஆண்டுக்கான பதிவுகள்,*
*தொடர்பு: - 0777243129 (பரிதி).*

## VACANCIES

பிரபல (PVC PIPE) கம்பனியின் விநியோகத்தர்களுக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை
1) விநியோக ஊழியர் 2) கணக்குப் பதிவாளர்
(கணினி அறிவுடைய இருபாலாரும்)
தொடர்பு:- T.P: 0772385732, 0773276290

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**Practical Web Development**
Joomla, jQuery,PHP,MySQL
CSS, HTML Call Us : 0776577359
இணையத்தளங்களை உருவாக்க...
Domain Reg. & Web Hosting
MIS Open source College
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**ICT Grade 10/11**
10 years of experience in IT
பதிவுகளுக்கு முந்துங்கள்....
Call Us : 0776577359
MIS Open source College
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

## City & Guilds — APSS International Networks (Pvt) Ltd

College of Engineering Studies
Approved Centre 844022

### யாழ்நகரில் இலவச பொறியியல் கருத்தரங்கு

*Carriers in Engineering after your A/L*

Free Seminar on:
- Why choose City & Guilds programme
- Future Trends in Civil Engineering & Telecom.
- Job Opportunities & Academic Pathways
- How to choose the degree pathway

On 17th & 18th Dec. 2011 10 a.m
at Jaffna Technical Institute
46, Clock Tower Road, Jaffna.

**Prof. K. Chandirabose**
Chairman/Managing Director

விபரங்களுக்கு: From Dialog mobile send #444*4#286#
077-2306642, 077 3867695, 071 8561654, 021-2241731

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.